விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை (23.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

## நாளை வரை மழை நீடிக்கும் சர்வதேச வானிலை எதிர்வுகூறல்

இலங்கைக்கு தென்கிழக்கில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து நிலைகொண்டுள்ளதால் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களில் நாளை திங்கட்கிழமை மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என்று சர்வதேச வானிலை ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு, தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா மற்றும் கர்நாடக ஆகிய பகுதிகளில் மழையுடனான காலநிலை நாளை திங்கட்கிழமைவரை நீடிக்கும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கில் கடந்த 48 மணிநேரத்தில் இந்த ஆண்டின் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## அரசியல் தீர்வுக்கான போராட்டம் எந்தத்தடை வந்தாலும் ஓயாது!

### எமது கோரிக்கையாலேயே பிரதமருக்கு வடக்கு அபிவிருத்தி அமைச்சு கிடைத்தது என்கிறார் மாவை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியாகவே செயற்பட்டு நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தொடர்ந்தும் போராடி வருகின்றது. எத்தகைய தடைகள் வந்தாலும் எமது இந்தப் போராட்டம் ஓயாது. இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கல்வியை 15☛

# இயற்கையின் கோரத்தாண்டவம்
# கிளிநொச்சி, முல்லைத்தீவு வெள்ளத்தில் மூழ்கியது

### பல்லாயிரக்கணக்கானோர் கடும் பாதிப்பு

(கிளிநொச்சி) வடக்கில் கடந்த 48 மணி நேரமாக கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குளங்கள் அனைத்தும் நிரம்பி வான் பாய்கின்றன. இதனால் சுமார் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். (15-ம் பக்.)



## உயர்தர பரீட்சை பெறுபேறு இவ்வாரம் வெளியீடு - பூஜித்த

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இவ்வார இறுதிக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், பெறுபேற்று 16☛

## இலங்கை மீனவர் ஆறு பேர் நேற்று மாலைதீவில் கைது

(மாலே)

இலங்கை மீனவர்கள் ஆறு பேர் அவர்கள் பயணித்த படகுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மாலைதீவு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"ஓஷதி ஜ" என்ற இலங்கை மீனவர்களின் படகொன்று கடந்த புதன்கிழமை காத்தூ தீவுப் பகுதியிலிருந்து 42 கடல் மைல்களுக்குள் வைத்து மாலைதீவு மீனவ படகொன்றினால் அடையாளம் 16☛

## எத்தகைய அழுத்தம் வந்தாலும் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு அரச அதிகாரிகள் இடமளிக்கக்கூடாது

### ஜனாதிபதி மைத்திரி வேண்டுகோள்

(கொழும்பு)

சட்டவிரோத நடவடிக்கைகள், முறைகேடுகள் தொடர்பில் எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அரச அதிகாரிகள் அதற்கு இடமளிக்கக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

புதிய அமைச்சுக்களின் 15☛

## சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்த பிரித்தானியா மறுப்பு

(லண்டன்)

இலங்கையை குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னிறுத்துமாறு கோரி, சுமார் 11 ஆயிரம் பேர் கையொப்பம் இட்டு சமர்ப்பிக்கப்பட்ட இணைய விண்ணப்பத்தை பிரித்தானியா நிராகரித்துள்ளது.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில், ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் இலங்கையை 02☛

## கண்டாவளை பிரதேச செயலகத்துக்குள் வெள்ளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்திற்குள் திடீரென வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த உத்தியோகத்தர்கள் கடற்படையினரின் உதவியுடன் படகு மூலம் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து கனகராயன் ஆற்றுப்படுக்கையின் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு பிரதேச செயலத்தில் உத்தியோகத்தர்கள் தங்கியிருந்தனர். எனினும் 15☛

## நீரில் மூழ்கியது தர்மபுரம் வைத்தியசாலை



15☛

## எதிர்க்கட்சி தலைவர் பதவிக்காக எந்தச் சவால்களுக்கும் தயார்!

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கண்டி)

தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்கள் அனைத்தையும் முறியடித்து எதிர்க்கட்சி தலைவர் பதவியை தக்கவைத்துகொள்வதற்கு தயாராக உள்ளோமென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எதிர்கட்சித் தலைவர் பதவி முன்னாள் 16☛

## தொண்டைமானாறு வான்கதவுகள் திறப்பு



15☛

## பெயர் மாற்றம்

மேழிவனம், மாங்குளத்தில் வதியும் குகனேசன் யதுசன் ஆகிய நான் 23.12.2018 இன்று முதல் எனது பெயரை குகனேசன் அபிசாந் என சகல ஆவணங்களிலும் கையொப்ப மிடுவேன் என தெரிவித்துக்கொள்கின்றேன்.

(6775) உண்மையுள்ள : குகனேசன் அபிசாந்



கற்பித்தல் சேவையில் 19 வருட நிறைவில்...

புதிய பாடத்திட்டம் பொருளியல் தமிழ், ஆங்கில மொழிமூலமான வகுப்புக்கள்

**பொருளியல் K.பிரதீபன்**

A/L 2021 ஜனவரி 5, 6 இல் ஆரம்பம்
A/L 2020, 2019 & Paper Class நடைபெறுகின்றன.

ACCOUNTING COLLEGE - கல்வியங்காடு
NEC - ஆனைப்பந்தி AAC - அரியாலை
BARATHY - சித்தன்கேணி
Techno World - யாழ்நகர்
For Group Class
Call : 021 221 7746

(C-4802)


## சர்வதேச நீதிமன்றில்...

குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னிறுத்துமாறு கோரி, சுமார் 11ஆயிரம் பேர் கையொப்பம் இட்டு இணைய விண்ணப்பம் ஒன்று பிரித்தானிய அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் இதற்கு மறுப்பு வெளியிட்டுள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் வெளியுறவுத்துறை அமைச்சு, பிரித்தானியாவின் வெளியுறவுக் கொள்கையின்படி சர்வதேச குற்றவியல் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் பொறுப்புக்கூறலை, உண்மையை கண்டறிதல், நீதியை நிலைநாட்டல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் காண்பதற்கே, பிரித்தானிய அரசாங்கம் விரும்புகிறது என்று பிரித்தானிய அரசாங்கம் பதில் அளித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அனைத்து சமூகங்களின் உதவியுடன் மேற்கொண்டு வரும் தேசிய நடைமுறைகளே சிறந்தவை என்று தாம் நம்புவதாகவும் பிரித்தானிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசாங்கம், மனித உரிமைகளை நிலைநாட்ட எடுத்துள்ள முயற்சிகளை ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிக அலுவலகம் வரவேற்றுள்ளமையையும் பிரித்தானிய அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையின் உறுதிப்பாட்டுக்காக தமது அரசாங்கம் 8.3 மில்லியன் பவுண்ட்ஸ்களை வழங்கியுள்ளதாகவும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## பேக்கரிக்கு பணியாளர்கள் தேவை



01. சகல விதமான ஐசிங் கேக் வகைகளினை உற்பத்தி செய்வதற்கும் வடிவமைப்பதற்கும் சிறந்த அனுபவமுடைய வேலையாட்கள் தேவை.

சம்பளம் 1500/= க்கு மேல்.

02. 31.01.2019 இல் ஆரம்பிக்கப்படவுள்ள எமது புதியகிளைக்கு பேக்கரி வேலை தெரிந்த நன்கு அனுபவம் உடைய பெண் ஊழியர்களும், விற்பனையாளர்களும் தேவை.

நேரில் சமுகம் தரவும்.

முத்தையா பேக்கரி - இல.373
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலை பேசி இல :
077 904 9691, 077 131 0841

(6780)


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கனகரட்னம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகரட்னம் அவர்கள் 21.12.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், வசந்தன், மோகன், பிறேமா, ஜெயன், செல்லா, ஜீன் ஆகியோரின் அன்புத்தந்தையும், நித்தியலட்சுமி, கனகசபாபதி, சரஸ்வதி, வாலாம்பிகை, குணம், பாலன், யோகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தி, லதா, சுகதா, றாஜீ, வேந்தன், சசி ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா, நவரட்னம், நாகராசா, ஞானேஸ்வரன், இரட்ணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனிபர், சொபி, நவீன், திலிபன், தமிழினி, சகானா, காருசன், தர்சிகன், கல்வின், ஜொஜேன், ஜஸ்மிதா, செந்துயன், அனு, அபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (24.12.2018) திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் திருநகர் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-N-4808)

கிளிநொச்சி தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## மாணிக்கம் இரத்தினசிங்கம்

(புதிய உயர் கல்லூரி பணிநிலை உத்தியோகத்தர்)

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய்கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இரத்தினசிங்கம் அவர்கள் 21.12.2018 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், நவமணிதேவியின் அன்புக் கணவரும் சோபனாவின் (QA Engineer Esshva Techq (Pvt) Ltd Kolpity) அன்புத் தந்தையும், சிவமணி (சிங்கள, ஆங்கில ஆசிரியர்), இராமச்சந்திரன், சண்முகநாதன் (இயக்குநர் புதிய உயர்கல்லூரி யாழ்ப்பாணம்), திலகமணி, செல்வராஜா (பணிநிலை உத்தியோகத்தர் புதிய உயர்கல்லூரி), பத்மநாதன் (இயக்குநர் பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம், சுன்னாகம். *BARATHY Institute* சித்தன்கேணி), மோகனா அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், நவமணி மற்றும் அருள்நங்கை, ஞானக்கொழுந்து, வசந்தராணி, சகிலா, பரஞ்சோதி, பத்மாவதி, கமலேந்திரன், பரமேஸ்வரி, மகேந்திரன், பாலேந்திரன், மாலினிதேவி, திலீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4807)

உரும்பிராய் கிழக்கு தகவல் : குடும்பத்தினர்

# இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் உயர்வு 11 வான் கதவுகள் திறந்து வைக்கப்பட்டன

## மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதனால் 11 வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

36 அடி நீர்கொள்ளளவைக்கொண்ட இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 36 அடியாகக் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் பெய்த கனமழையினால் குளத்தின் நீர்மட்டம் சடுதியாக மிக வெகுவாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் என். சுதாரகன் கருத்துத் தெரிவிக்கையில், நேற்று அதிகாலை 2 மணியிலிருந்து குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்துக் காணப்பட்டது.

அதாவது, முல்லைத்தீவு மாங்குளம் பகுதிகளில் 370 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைபெய்தமையடுத்து நீர்வரத்து அதிகரித்துக் காணப்பட்டது.

சுமார் இரண்டு மணிநேரங்களுக்கு நீர் உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், இரணைமடுக்குளத்தில் உள்ள 14 வான்கதவுகளில் 11 வான் கதவுகளை உடனடியாக திறந்து விட்டது. தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளதாகவும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின்ர், பொலிஸார், இராணுவத்தினர் குளத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்றைய தினம் இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 37 அடி 3 அங்குலத்தை எட்டியிருந்தது. குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்துள்ளமையால் கலிங்கு ஊடாக வான் ஒரு அடிவரை பாய ஆரம்பித்துள்ளது.

எனவே பன்னாங்கண்டி, முரசுமோட்டை, ஐயன்கோவிலடி, பளைய வட்டக்கச்சி, பெரியகுளம், வெளிக்கண்டல், கண்டாவளை, ஊரியான் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களை முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டது. (2-315)

# அதிகார பேராசையால் மகிந்த அனைத்தையும் இழந்து வருகிறார்–ஹக்கீம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் ஜனரஞ்சகமான தலைவர் என்ற போதிலும் அதிகாரத்தின் மீது இருக்கும் பேராசை காரணமாக அவர் அனைத்தையும் இழந்து வருவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் பலவேறு சூழ்ச்சிகள் மற்றும் அதிகார புரட்சிகள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் தனது அமைச்சில் நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு மாதங்களாக நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இதில் ஜனநாயகத்திற்காக அணிதிரண்ட அனைவருக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அமைச்சர் பதவி தற்காலிகமானது. இது பொதுத் தேர்தலுக்கு பின்னர் வழங்கப்பட்ட அமைச்சு பதவியல்ல.

அடுத்த வருடம் சில



தேசிய தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. முதலில் எந்தத் தேர்தல் நடத்தப்படும் என்பது தெரியாது. தனிப்பட்ட நன்மைகள் பற்றிச் சிந்திக்காது நாட்டைப் பற்றிச் சிந்தித்துச் செயுற்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அந்த தேர்தலில் போட்டியிட நேரிடும். நாடு தழுவிய ரீதியிலான தேர்தலில் புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்படும்.

பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் இன்றி அதனைத் தீர்மானிக்க முடியாது. இந்த தேர்தல்களில் பல்வேறு சூழ்ச்சிகள் இடம்பெறலாம்.

அதிகாரப் புரட்சி ஏற்படலாம். அப்போது எதிரிகள் நண்பர்களாக மாறலாம், நண்பர்கள் எதிரிகளாக மாறலாம் எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# மத்திய வங்கி பிணைமுறி மோசடியே தேசிய அரசின் முறிவுக்குக் காரணம்

## மகிந்த அமரவீர விளக்கம்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற விடயங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால் தேசிய அரசாங்கம் தொடர்ந்திருக்கும். அதனால் ஐக்கிய தேசியக் கட்சி தனது தவறுகளைத் திருத்திக்கொண்டு நாட்டுக்கு பொறுத்தமான தீர்மானங்களை எடுக்கும்போது அதற்கு ஆதரவளிப்போம். அத்துடன் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதுபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நேற்று முந்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான விவா தத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். குறிப்பாக மத்திய வங்கி பிணை முறி மோசடி போன்ற விடயங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால் நாங்கள் தொடர்ந்து அந்த அரசாங் கத்தைக் கொண்டு சென்றிருக்கலாம். என்றாலும் நாட்டை முன்னிலைப்படுத்தியே இவ் வாறான தீர் மானம் ஒன்றை மேற்கொண்டோம்.

இருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தவறு களைத் திருத் திக்கொண்டு செல்ல நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள் ளது. அதனால் அரசியல் பழி வாங்கல் களை மேற்கொள் ளாமல் நல்லமுறையில் ஆட்சியைக் கொண்டு செல்லுங்கள். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தா லும் நாட்டை முன் னிலைப்படுத்தி அரசாங்கத்தின் நல்ல விடயங்களை ஆதரிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையுடன் நெருங்கிய இராஜதந்திர உறவை வலுப்படுத்த சீனா எதிர்பார்ப்பு



(கொழும்பு)

சீனா இலங்கையின் சிறந்த நண்பராக விளங்கும் அதேவேளை, இருநாடுகளுக்கும் இடையே நெருங்கிய இராஜதந்திர உறவை நிலைநிறுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் சீனத் தூதுவர் தெரிவித்தார்.

ரஷ்யாவிற்கான இலங்கை மற்றும் சீனத் தூதுவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மொஸ்கோ விலுள்ள சீனத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். குறித்த சந்திப்பின் போதே சீனத் தூதுவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார்.

உலகின் பொதுவான அரசியல், பொருளாதார விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, அனை த்துப் பிரச்சினைகளும் பேச் சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டுமே தவிர வன்முறைகளின் மூலமோ, அரசியல்செல்வாக்கின் மூலமோ நெருக்கடிகளைத்தீர்க்க முயலக் கூடாது என சீனத் தூதுவர் தெரிவித்தார். தொடர்ந்து இலங்கை தூதுவர் தயான் ஜயதிலக்க பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மற்றும் உலக சக்திகளின் அழுத்தம் என்பவற்றின் போது இலங்கை க்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கியமைக்கு சீனாவிற்கு நன்றி பாராட்டினார். (இ-7)

# அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பை கைவிடவில்லை-விஜயமுனி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்ளும் எதிர் பார்ப்பை இன்னும் கைவிடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அந்தஸ் த ற்ற அமைச்சுப் பதவி யையோ, இராஜாங்க அமைச்சர் பதவியை அல்லது பிரதியமை ச்சர் பதவியையோ வகிக்க தான் தயாராக இல்லை என வும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்கு அரசியல் ஸ்தி ரத்தன்மை அவசியம் என் பதால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தீர்மானித் தோம். ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசாங் கத்தில் இருந்தோம். அந்தப் பழக்கம் இருக்கின்றது.

ஜனாதிபதி அமைச்சர் பதவியை வழங்க போவதி ல்லை எனக் கூறியதாக தெரிவிக்கப்பட்டாலும் ஜனா திபதி அப்படி செய்ய மாட் டார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவியைத் தவிர வேறு பதவியை பெற்றுக் கொள்ள மாட்டேன் எனவும் விஜித் விஜய முன…சாய்சா தெரிவித்தார். (இ-7)



# 'அடிச்சு தூக்கினார்' லீவிஸ்

- பங்களாதேஷ் பந்துவீச்சை
- தொடரை வென்றது மே.தீவுகள்



அரைச்சதம் அடித்த லீவிஸின் அதிரடிகளில் ஒன்று

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை அடித்து தூக்கிய எவின் லீவிஸ் 36 பந்துகளில் 89 ஓட்டங்கள் குவிக்க 3ஆவது ரி20 போட்டியில் 50 ஓட்டங்களால் வெற்றி கண்ட மே.தீவுகள் அணி தொடரை கைப்பற்றி ஆறுதல் அடைந்தது.

பங்களாதேஷ் - மே.தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான ரி20 போட்டி டாக்காவில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மே.தீவுகள் அணிக்கு எவின் லீவிஸ், ஷோய் ஹோப் ஆரம்பம் வழங்கினர்.

ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவ் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களை பகிர்ந்திருந்தபோது ஹோப் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட வந்த வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். அதிரடியாக துடுப்பெடுத்தாடிய லீவிஸ் 36 பந்துகளில் 8 சிக்சர், 6 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். நிகோலஸ் பூரன் 29 ஓட்டங்களில் வெளியேறினார்.

19.2 ஓவர்களில் மே.தீவுகள் அணி 190 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ அணி சார்பில் ஷகிப் அல் ஹசன், முஸ்தபிசுர் ரகுமான், மகமதுல்லா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின், 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு மே.தீவுகளின் துல்லியமான பந்துவீச்சு சிக்கலைக் கொடுத்தது. தாக்குப்பிடித்து ஆடிய லிட்டன் தாஸ் (43 ஓட்..) ஓரளவு ஆறுதல் அளித்தார். மற்றைய வீரர்கள் விரைவாக வெளியேற,

பங்களாதேஷ் அணி 17 ஓவர்களில் 140 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 50 ஓட்டங்களால் வீழ்ந்தது.

பந்துவீச்சில் மே.தீவுகள் அணி சார்பில் கீமோ பவுல் 5, பேபியன் அலன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இவ்வெற்றி மூலம் மே.தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றி ஆறுதல் அடைந்தது.

# 'பாதை காட்டுவாரா' பாண்ட்யா

## என்ன சொல்கிறார் மைக்கல் ஹஸி



பாண்ட்யா

"மெல்போர்ன் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் பாண்ட்யாவை சேர்ப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்," என அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் வென்று வரலாறு படைத்த இந்திய அணி, அடுத்து பெர்த்தில் மோசமாக வீழ்ந்தது. இதனால் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி கூறியது,

இரண்டாவது டெஸ்ட் நடந்த பெர்த் ஆடுகளம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அடுத்த டெஸ்ட் நடக்கவுள்ள மெல்போர்ன் அப்படியல்ல, முற்றிலும் வித்தியாசமானது. கடந்த இரு டெஸ்டில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர்.

அடிலெய்ட், பெர்த்தில் கூடுதலான வெப்பநிலை நிலவியபோதும் அதிகமான ஓவர்கள் வீசினர். விக்கெட்டுக்களை வீழ்த்த போராடினர்.

**பாண்ட்யா முக்கியம்**

இந்திய அணியில் தற்போது வந்துள்ள ஹர்திக் பாண்ட்யா, அவுஸ்திரேலியாவின் மிட்சல் மார்ஷ் போன்றவர். அவர் நல்ல 'போர்மில்' இருந்தால் இந்திய அணியின் பந்துவீச்சில் கூடுதல் பலம். நான்கு போட்டிகள் கொண்ட தொடர் என்பதால், இவரது வருகை வேகப்பந்து வீச்சாளர்களின் பணிச் சுமையை குறைக்க உதவும். அணிக்கு வெற்றிப் பாதையை காட்டும். பந்துவீச்சு சகலதுறை வீரர் என்பதால் இரு அணி தரப்பிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**தவறான முடிவா?**

பெர்த் டெஸ்டில் அஷ்வினை சேர்க்காமல் இந்திய அணி தவறு செய்யவில்லை. முதல் நாள் ஆடுகளத்தை பார்த்தபோது வேகத்துக்கு ஏற்றதாக இருந்தது. அவுஸ்திரேலிய அணி நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டம் செய்து தேவையான ஓட்டங்களை எடுத்து விட்டது. போகப்போக வெடிப்பு ஏற்பட, சிக்கல் ஏற்பட்டது.

பந்துவீச்சில் ஒரு பக்கம் லயனும், அடுத்த பக்கம் வேகப் பந்துவீச்சாளர்கள் மாறி மாறியும் பந்துவீசினர். இந்திய அணியில் அஷ்வின் இடம்பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக செயற்பட்டு இருக்கும். இவ்வாறு மைக்கல் ஹசி கூறினார்.

# தவறை தடுத்திருக்க வேண்டும்

## ஒத்துக் கொள்கிறார் ஸ்ரீவ் ஸ்மித்



ஊடக சந்திப்பில் ஸ்மித்

போல் டேம்பரிங் விவகாரத்தில் முதன்முறையாக பேட்டியளித்த ஸ்மித், வாய்ப்பிருந்தும் தடுக்கவில்லை, அணித் தலைவர் ஸ்தானத்தில் தோற்றுவிட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

கேப் டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்டில் அவுஸ்திரேலியா துடுப்பாட்ட வீரர் பான் கிராப்ட் பந்தை ஒருவகை உப்புத்தாள் மூலம் சேதப்படுத்தியது தெரியவந்தது. இதற்கு மூலகாரணமாக வோர்னர் இருந்தது விசாரணையில் தெரிய வந்தது. மேலும், இந்த விவகாரம் அணித் தலைவர் ஸ்மித்திற்கு தெரியும். அவர் தடுக்க தவறிவிட்டார் என்றும் தெரியவந்தது.

இதனால் பான் கிராப்ட்டிற்கு 9 மாதம் தடையும் வோர்னர் மற்றும் ஸ்மித் ஆகியோருக்கு தலா ஓராண்டு தடையும் விதித்தது அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை. இதன்காரணமாக தென்னாபிரிக்காவில் இருந்து அவுஸ்திரேலியா சென்றடைந்த ஸ்மித், சிட்னி மைதானத்தில் கண்ணீர் மல்க சோகத்துடன் வெளியேறினார்.

இதனால் வோர்னர் மற்றும் ஸ்மித் முதன்மையான தொடர்களிலும் சர்வதேச போட்டியிலும் விளையாட முடியாமல் உள்ளனர்.

இந்நிலையில் முதன் முறையாக ஸ்மித் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது போல் டேம்பரிங் சம்பவத்தை நான் தடுத்திருக்கலாம் அதற்கான வாய்ப்பு இருந்தது என்றார்

போல் டேம்பரிங் குறித்து ஸ்மித் கூறுகையில் 'வீரர்கள் அறையில் நான் சிலரை கடந்து செல்லும்போது, போல் டேம்பரிங் திட்டத்தை தடுக்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் நான் அதை செய்யவில்லை. என்னுடைய கப்டன் பொறுப்பு தோல்வியடைந்து விட்டது. இது சில விடயங்கள் நடப்பதற்கு சாத்தியக்கூறாக அமைந்து விட்டது. இந்த திட்டம் வெளியில் சென்று மைதானத்தில் நடந்து விட்டது.

அதைப்பற்றி எதுவும்தெரிந்து கொள்ள விருப்பம் இல்லை என்று சொல்வதைவிட, திட்டத்தை நிறுத்த எனக்கு வாய்ப்பு கிடைத்ததுஎன்றேசொல்லவேண்டும். தலைவராக எனது பொறுப்பில் நான் தோற்றுவிட்டேன், அதற்காக நான் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்' என்றார்.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் குணரட்ணம்



**தோற்றம்: 27.01.1945**

**மறைவு: 22.12.2018**

நெசவுசாலை வீதி, வீமன்காமம் தெற்கு, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணரட்ணம் நேற்று (22.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கிருஸ்ணர் ஆறுமுகம் (முன்னாள் ஆசிரியர் - மகாஜனக் கல்லூரி), அமரர் ஆறுமுகம் செல்லமுத்துவின் அன்பு மகனும் அமரர் பொன்னையா-இராசம்மாவின் அன்பு மருமகனும் ஞானசக்தியின் அன்புக் கணவரும் கோபிராஜ் (மாவட்டச் செயலகம் திட்டமிடல் பிரிவு - யாழ்ப்பாணம்), புவிராஜ் (பிரதேச செயலகம் விதாதா வள நிலையம் சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிறோஜினியின் அன்பு மாமனாரும் பத்மநாதன் (அவுஸ்திரேலியா), அமரர் அன்னபூரணி, கனகரட்ணம், அமரர் பாலசிங்கம், மனோன்மணி அம்மா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பராசக்தி, அமரர் துரையப்பா, நாகரட்ணம், தவராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6778)

அரசடிப்பிள்ளையார் கோவிலடி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர் 0779143167, 0212241413, 0774841590

# ஐ.தே.கவுக்குள் நெருக்கடி நிலை மேலும் பாரிய பிளவுகள் ஏற்படும்



## சந்திரசேன எம்.பி.சுட்டிக்காட்டு

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நெருக்கடி நிலை தோன் றியுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

கடந்த காலத்தில் ஆட்சி அமைப்பதற்கு முழு வீச்சுடன் செயற்பட்டோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், பல்வேறு தரப்பினருக்கு இடையிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும், பொதுத் தேர்தல்ஒன்றை விரைவில் நடத்தாத பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய பிளவுகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# Sri Lanka First வேலைத்திட்டம்

(கொழும்பு)

Sri Lanka First என்ற பெயரிலான வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்க காலம் கனிந்திருப்பதாக வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2018 ஆம் ஆண்டுக்குரிய தேசிய கட்டுமான விருது விழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய சஜித் கட்டுமானத் துறை சார்ந்தும் Sri Lanka First என்ற வேலைத் திட்டத்தை ஆரம்பித்து துறை சார்ந்தவர்களைப் பாதுகாக்க வேண்டும். துறை சார் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் துரித தீர்வு காண்பதும் அவசியம் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (இ-7)



# மரண அறிவித்தல்



## திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி

பிறப்பு : 14.02.1943 இறப்பு : 17.12.2018

யாழ் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், மண்கும்பானில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய நாகரத்தினம் இரத்தினேஸ்வரி அவர்கள் 17.12.2018 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - காசுவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சிறிரங்கேஸ்வரன் (சிறி - இந்தியா), தனேஸ்வரி (ஈஸ்வரி - லண்டன்), கேதீஸ்வரி (பேபி - லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்) மற்றும் காலஞ்சென்ற லோகேஸ்வரன் (ராசன்), சத்தியேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவலட்சுமி (கொழும்பு), தயாளினி (இந்தியா), ஸ்ரீகணநாதன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), எழிலரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகலிங்கம், கலைவாணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், நாகம்மாவின் அண்ணியும், நவரூபன் (லண்டன்), பானுஜா, பதுஜா (இந்தியா), ஸ்ரெப்பான், சந்துரு, சந்துவி, சங்கவி, சந்துஜன், சாகசன், ஹரீஸ், அருண், ஆரணி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஆரன், ஆசன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.12.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை 12.30 மணியளவில் 62, Hoop ln. London NW 11 7 NL, UK இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் :- சிறி - 0091 9790850925**
**மகன் :- குமார் - 0044 7535666885**
**பேரன் :- வாசன் - 0044 7983725157**
**பேரன் :- சந்துரு - 0044 7901000981**

**தகவல் : சிறி (இந்தியா)**

(6772)

# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம்

மலர்வு: 05.05.1925 - உதிர்வு: 20.12.2018

யாழ்.நாரந்தனையை பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துதம்பி, சுந்தரம், அமிர்தலிங்கம், செல்லமுத்து, சித்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கம் சின்னம்மா (முறிவு, நெறிவு, நோவு வைத்தியர்) வின் மைத்துனியும் காலஞ்சென்ற கலாபூசணம் கிருஷ்ணதுரை, சிவ்கங்கை, மதியாபரணம், பரமேஸ்வரன், கோகுலராசா (பிரான்ஸ் - லியோன்), சந்திரா, கலாமணி (மலர் - நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், தெய்வானைப்பிள்ளை, சிவன்யோகம், காலஞ்சென்ற சிவநாயகம், நிர்மலாதேவி, சற்குணேஸ்வரி (சித்திரா), புவனேந் திரன், சிறீஸ்கந்தராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெய்சிறிநிவாஸ், ஜெய்சந்தர், காலஞ்சென்றவர்களான ஜெய்குமாரி, ஜெய்காந்தன் மற்றும் ஜெய்சுகந்தன், ஜெய்ரமணன், ஜெய்சக்தி, மணிவேந்தன், கவிதா, பரணீதரன், பரலீசன், சுபாஜினி, கிரிகரன், ஜெயசிறீ, காலஞ்சென்ற ஜெயகணேஷ், தாட்சாயினி, கலிதரன், தமிழ்ச்செல்வி, திலீபன், காலஞ்சென்ற ரஜீவன், ராதை, துஷிதா, நிவேதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆரணி, விவேகன், விவேகா, கார்த் திகன், அஞ்சனா, புரந்தரன், பாரதிகிருஷ்ணா, அபிராமி, குபேரன், சிவந்திகா, அபிமன்யூ, தூயா, துர்க்கா, பிரியங்கா, சாத்வீகன், தார்வீகன், குவிசன், ஹரணி, யதீஸ், விஷ்ணுயன், இலக்கியன், கதிரவன், றக்ஷியா, அக்ஷயா, அபர்ணா, வித்தியா, லீசப்பிரியா - மீரா, ஜெனஜன், கவிண், நிலா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : பிள்ளைகள், மருமக்கள்**
**சிவகங்கை (பண்ணாகம் - 0766955851),**
**கோகுலராசா (பிரான்ஸ்- 0033478269172/0033624157450),**
**கலாமணி (நோர்வே - 004731412450/004740520558)**

(சி-6769)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், உடல நலன் சீராகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** நிதி நிலை உயரும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கும்பம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இனிமையான நாள்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | சந் |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம் | | |
| சனி, சூரி | குரு, புதன் | சுக் | |

**23.12.2018**

கார்த்திகை 08, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.26 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 11.17 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் 4.55-6.25 மணிவரை
ஆருத்திரா தரிசனம்

**வளவன்**

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொன்னான நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**துலாம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அவதானமாக முன்னெடுக்க வேண்டும்

## பொதுமக்களிடம் அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதால், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அவதானமாக முன்னெடுக்குமாறு பொதுமக்களிடம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் மட்டும் 525 பேரும், இம்மாதம் மட்டும் 392 பேர் டெங்கு நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த மாதம் 40 பேரும், இம்மாதம் கடந்த 14 ஆம் திகதி வரை 65 பேரும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை யாழ்.மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர் உறுதிப்படுத்தினார்.

அந்த வகையில், உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசத்திலும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனிடம் கேட்ட போதே யாழில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மழை அதிகமாக காணப்பட்டுள்ளதால், டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே, பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். டெங்கு நோய் தொடர்பாக திணைக்களங்கள் மற்றும் பொது மக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் ஒரு வாரம் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு, அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று தரிசித்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

பொது மக்கள் சிரமதானப் பணிகளை முன்னெடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# நற்பெயரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தவிசாளருக்கு உள்ளது - உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சபையிலுள்ள உறுப்பினர்களின் நற் பெயரிரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தவிசாளருக்கு உள்ளது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ப.ஜெயக்காந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெறாத சில விடயங்கள் இணையத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் அண்மையில் வெளிவந்தன.

இவ்வாறான உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளிவரும் போது அந்த ஊடகவியலாளர்களை அழைத்து தெளிவுபடுத்த வேண்டியது அல்லது மறுப்பு அறிக்கை கொடுக்க வேண்டிய பொறுப்பு தவிசாளருக்கு உள்ளது.

ஒரு உறுப்பினரின் பெயருக்குக் களங்கம் ஏற்படும் போது அந்த உறுப்பினரின் பெயரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தவிசாளருக்கு உள்ளது என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# வலி.தென்மேற்கு பிரதேசசபையின் வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசனால்சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் கடந்த 03.12.2018 ஆம் திகதிய விசேட கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு பிரதேச மக்களின் சம்மதத்துடன் நேற்று முன்தினம் 22 ஆம் திகதிய விசேட சபை அமர்வில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் வரவேற்புடன் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையை பொறுப்பேற்ற பின்னர் வெளிவரும் முதலாவது வரவு-செலவுத்திட்டம் இதுவாகும்.

2018 ஆம்ஆண்டு பல அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்னகர்வுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் மக்களின் அபிலாசைகளையும் தீர்த்துவைக்கும் பல பொதுவான செயற்றிட்டங்களையும் உள்ளடக்கியதாக 2019 ஆண்டு வரவு-செலவுத்திட்டம் அமைந்துள்ளது.

இவ் வரவு- செலவுத் திட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்கு என சபை நிதியில் ரூபா 31 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக ஏனைய நிதியில் ரூபா 211.5 மில்லியன் மேலதிக அபிவிருத்தி வேலைகளுக்காக திட்டமிடப்பட்டுள்ளது.

சபையின் பொது நிர்வாக சேவைகளுக்காக மேற்கொள்ளப்படவுள்ள வேலைகளுக்காக ரூபா 25.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார சேவைகளுக்காக 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வீதிகள் காணி கட்டடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 70 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 28 உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சபைக்குட்பட்ட 28 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன என்பதுடன் இவ்வீதிகளுக்கான வீதி விளக்குகளும் முழுமையாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் பொருத்தப்படவுள்ளன.

மேலும் சபையால் மேற்கொள்ளப்படும் நீர்விநியோக சேவைகளுக்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் நலன்புரி சேவைகளான சந்தைகள் மற்றும் நூலகங்களுக்காகவும் விளையாட்டு மைதான புனரமைப்பிற்காகவும் மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்காகவும் ரூபா 70 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்நிதி ஒதுக்கீட்டினுள் பிரதேச சபைக்கான முன்பள்ளிக்கான கட்டடமும் கேட்போர் கூடமும் அமைத்தல், கலாசார மண்டபமும் அதனுடன் கூடிய கடைத் தொகுதிகளும் அமைத்தல், அனர்த்தங்களின் போதான முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு எனவும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது பிரதேசத்தின் நீண்டகால தேவைப்பாடு இந்த வருடத்தில் முற்றுப்பெற்று, மானிப்பாய பகுதியில் சிறார்களுக்கான அனைத்து வசதிகளுடனுமான பூங்கா அமைக்கும் பாரிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஓர் நிரந்தர கட்டடம் இல்லாது இயங்கி வந்த பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கான புதிய நிரந்தர கட்டடம் மாதகல் பகுதியில் சபைக்கு சொந்தமான ஆதனத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகால வருமானத்தை மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் போன்ற மக்கள் நலன் சேவைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. பொது மக்களின் நிதியிலேயே எமது பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையால் அவை பயனுறுதி மிக்கதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் செயற்படுத்தப்படல் வேண்டும்.

மக்களது வரிப்பணம் மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் மீண்டும் சிறந்த முறையில் மக்களை சென்றடையும் வகையில் நாம் செயற்பட்டு பிரதேச அபிவிருத்தியில் பாரிய வெற்றி காண்போம் என்று உறுதி கூறி இவ் வரவு-செலவுத் திட்டத்தினை வெளியிட்டு வைக்கிறேன் என பிரதேச சபைத்தவிசாளர் அ.ஜெபநேசன் அறிவித்துள்ளார். (இ-7)



**பருத்தித்துறை கற்கோவளம் கே/406 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சலவை தொழிலாளர்களுக்கு 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொட்டகை மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம், நீர்த்தொட்டி என்பன வழங்கப் பட்டன. முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளரும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினருமான சதாசிவம் இராமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த உதவித் திட்டங்களை வழங்கினார். (படம்:-மகாலிங்கம்)**

# வாழ்வாதார உதவி வழங்கல்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஆறாம் வட்டார பகுதியில் வறுமைக் கோட்டுக் குட்பட்ட பத்து பயனாளிகளுக்கு கோழிக்கூடும், கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆறாம் வட்டார உறுப்பினரான கி.ஜெயபாலனுக்கு வழங்கப்பட்ட நிதியிலிருந்து தனது வட்டாரத்திற்குட்பட்ட பத்து கிராமங்களிலிருந்து தலா ஒரு பயனாளியை தெரிவு செய்து அவர்களிற்கான கோழிக் கூடும், கோழிக் குஞ்சுகளும் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச சபையின் ஆனைவிழுந்தான் சந்தியில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வைத்து வழங்கப்பட்டன. (இ-60)







**சாவகச்சேரி கண்டுவில் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 24 ஆவது ஆண்டு கலை விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டச்சுவீதி ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெற்றது. நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சிரேஷ்ட (சிறுவர்) நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் கலந்து சிறப்பித்தார்.சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் பத்மபிரியா தரணிதரன், தென்மராட்சி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், இலங்கைவங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.முரளிகரன், டிறிபேர்க்கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், நகர் கிராம உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-விஜயவாசன்)**

# மகிந்தவுக்கு காலம் சரியில்லை

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவுக்கு காலமே சரியில்லை, அவர் எந்தப் பதவிக்கு வந்தாலும் இன்னொருவர் போட்டிக்கு வந்து விடுகின்றார். மகிந்த ராஜபக்ஷவை நினைக்கையில் பாவமாக உள்ளது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலகுவில் எவராலும் ஏமாற்ற முடியாத மகிந்தவையே அண்மைக்காலமாக ஏமாற்றிவிட்டனர் என நினைக்கும் போது வேதனையாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிதி அமைச்சர் மங்கள சமரவீர இடைக்கால கணக்கறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ யாரிடமும் இலகுவாக ஏமாறக் கூடிய நபர் அல்ல, அவரை யாரும் ஏமாற்ற முடியாது. ஆனால் கடந்த அரசியல் சூழ்ச்சியில் அவரையும் ஏமாற்றி விட்டனர்.

எங்களின் நபர் ஒருவரை ஏமாற்றிவிட்டனர் என நினைக்கும் போது எனக்கும் கவலையாக உள்ளது.

ஆனால் அவர் அப்பாவி அல்ல. கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம்திகதி அவரை நான் பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் சந்தித்து பேசியபோது எனது அரசாங்கத்தில் இணைந்துகொள்ள வருகிறீர்களா? என என்னிடம் கேட்டார். இவர் வழமைபோல் பகல் கனவு காண்கின்றார் என்ற நினைப்பே என் மனதில் இருந்தது.

ஆனால் அன்று இரவு இரகசியமாக அவர் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அப்போது தான் அவர் கூறியதன் அர்த்தம் எனக்கு விளங்கியது. ஆகவே அவர் அப்பாவி என நினைத்துக் கொண்டு இருந்தேன். ஆனால் கடந்த அரசியல் சூழ்ச்சியில் அவருக்கும் பங்கு உள்ளது என மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ திருமதி.விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் 21.12.2018 ஆம் திகதி கல்வி இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவி ஏற்றதையிட்டு நல்லூர் பிரதேச சபை மக்கள் சார்பாக எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் எல்லாம் வல்ல மஞ்சத்தடி முருகப் பெருமானின் திருவருள் கிடைக்க இறைவனை வேண்டுகின்றேன்.

மஞ்சத்தடி இனுவில். (6774)

இனுவையூர் வி.கே.குகானந்தன்
உறுப்பினர் நல்லூர் பிரதேச சபை, ஐக்கிய தேசிய கட்சி.



# பிரயாணத் துறையில்

## வீட்டிலிருந்தவாறே வேலை

பிறவுன் அன்ட் கம்பனி பி.எல்,சி Brown & Company PLC இனது பிரயாணப் பிரிவான பி.ஜி. ஏயார் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் BG Air Services (Pvt.) Ltd நிறுவனமானது அதன் பிரயாண நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க நாடளாவிய ரீதியில் ஃப்ரீலான்ஸ் (Freelance) பயண நிபுணர்களை தேடுகிறது.

மிகப்பொருத்தமான விண்ணப்பதாரர்கள் உற்சாகமானவராகவும் சிறந்த தொடர்பாடல் திறனுடன் கூடிய வினைத்திறனான பெறுபேறுகளை பெற்றுத்தரக்கூடியவராகவும் மற்றும் பொது உறவுகளை சிறப்பாக பேணக்கூடிய ஆற்றலுடையவராகவும் இருத்தல் வேண்டும். சுற்றுலாத் துறையில் கல்வித் தகைமை மற்றும் பிரயாணத் துறையில் முன் அனுபவம் என்பன கட்டாயமில்லையாயினும் இவை மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் வீட்டிலிருந்தவாறே பணி புரிய முடியும்.

நீங்கள் சுற்றுலா துறையில் உங்கள் தொழில் வாய்ப்பினைக் கட்டியெழுப்ப நீங்கள் ஆர்வம் கொண்டவராயின் உங்கள் விண்ணப்பத்தை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

மின்னஞ்சல் : **yogarajah.v@brownsgroup.com**

தொலைபேசி : **+94 76 536 8541**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொடர்புகொள்ளப்படுவர் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்

Browns
A Heritage of Trust

BG Air Services (Pvt) Ltd,
Browns Tours (Pvt) Ltd,

#481, 01st Floor, T.B Jayah Mawatha,
Colombo 10



உ

சுவாமியே சரணம் ஐயப்பா



# மகரஜோதிப் பெருவிழாவும் இளங்கலைஞர் மதிப்பளிப்பு விழாவும்

இடம்:- வியாவில் ஐயனார் தேவஸ்தானம், காரைநகர்

காலம்:- 25.12.2018 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00

வரவேற்புரை

ஆசியுரை:- **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** (நல்லை ஆதீன குருமுதல்வர்)

வாழ்த்துரை:- **கலாநிதி ஆறுதிருமுருகன்** (தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

தலைமையுரை:- **திரு.ப.விக்னேஸ்வரன்** (முன்னாள் வடமாகாண கல்விப்பணிப்பாளர்)

பிரதம விருந்தினர்:- **திரு.எஸ்.இளங்கோவன்** (செயலாளர், ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்:- **திரு F.X.செல்வநாயகம்** (உதவிச்செயலாளர், ஆளுநர் செயலகம் வடக்கு மாகாணம்)
**திரு.இ.த. ஜெயசீலன்** (யாழ்மாநகரசபை ஆணையாளர்)

**இளங்கலைஞர் கௌரவிப்பு**

1. **செல்வன். செந்தில்நாதன் பிரசாந்தன்** (யாழ்ற்றன் கல்லூரி), (அகில இலங்கை நடனப் போட்டியில் முதலாமிடம்)
   - தனிநடன நிகழ்வு:- செந்தில்நாதன் பிரசாந்தன்
2. **செல்வன். பாலமுருகன் சாரங்கன்** (வளர்ந்துவரும் இளம் நாதஸ்வரக் கலைஞர்)
   - நாதஸ்வர இசை:- பாலமுருகன் சாரங்கன்
   - மகேஸ்வர பூசை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

வியாவில், காரைநகர். (4777)

ஊடக அனுசரணை:- கஜமுகன் ஹாட்வெயர், இல,147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஐயனார் தேவஸ்தானம்.

# தொலைபேசியின் ஒளி மூலம் நெல்லியடி சந்தையில் மீன் விற்பனை



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தை யிலுள்ள மீன் சந்தையில் மின்சாரம் இல்லாமல் மீன் விற்பனை செய்யமுடியாத நிலைஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மீன் விற்பனை செய்யும்போது கையடக்க தொலைபேசியின் ஒளி மூலம் விற்பனை செய்கின்றனர்.

இது தொடர்பில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு பலமுறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மீன் வியாபாரிகள் பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். (இ-60)

# மழை வெள்ளத்தால் பாதிப்பு



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியிலுள்ள கட்டடத்தின் கீழ் பகுதியிலுள்ள கடைகள் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் வெள்ளம் புகுந்து சேதம் ஏற்பட்டுள்ளது சந்நையின் முற்பகுதியும் வெள்ளம் நிரம்பி காணப்படுகிறது.

உடனடியாக இவ்விரு வேலைத் திட்டங்களிலும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கவனம் செலுத்த வேண்டுமென வியாபாரிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளின் அபிவிருத்திக்கு 195 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

நாட்டின் தூரப் பிரதேசங்களிலுள்ள குறைந்த வசதிகளையுடைய விகாரைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும் பௌத்த நிதியத்தினால் விகா ரைகளுக்கு நிதியுதவி வழ ங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

46 விகாரைகளுக்காக 195 மில்லியன் ரூபா இதன்போது அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், உரிய விகாரைகளின் விகாராதிபதி தேரர்களிடம் ஜனாதிபதி காசோலைகளை வழங்கினார்.

ஜனாதிபதி எண்ணக்கருவில் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த



நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டில் 116 மில்லியன் ரூபாவும் 2017 ஆம் ஆண்டில் 167 மில்லியன் ரூபாவும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பௌத்த நிதியத்தின் கீழ் குறைந்த வசதிகளை உடைய விகாரைகள் தற்போது உரியவாறு அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன், ஜனாதிபதியின் ஆலோசனைக்கேற்ப முப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்கள பொறியியலாளர்களின் உதவியும் தொழிற்பங்களிப்பும் அந்நடவடிக்கைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

காணி பிரச்சினைகள் காணப்படும் விகாரைகளுக்கு காணி உறுதிகளை வழங்கி வைப்பதன் ஊடாக அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் ஜனாதிபதியால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமரபுர சிறிசத்தம்மவங்ச மகா நிக்காயவின் அதி வண. அஹுங்கல்லே சிறி சீலவிசுத்தி மகாநாயக்க தேரர், கிழக்கு மாகாணம், தமன்கடுவ ஆகிய இரு பிரதேசங்களின் அஸ்கிரி பிரிவின் பிரதான சங்கநாயக்கர் வண. மகுரெபே ஸ்ரீ தர்மகீர்த்தி இந்ரஜோதி பஞ்ஞாசேகராபிதான நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# நல்லூரில் ஆதனவரி குறைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஆதனவரி குறைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஆதனவரியை 10 வீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ச.சுரேஸ்குமார் ஆதனவரி குறைப்பு தொடர்பான பொது மக்களின் கோரிக்கையை கடந்த 19 ஆம் திகதி தவிசாளரிடம் கையளித்தார்.

அன்றைய தினம் நடைபெற்ற சபைக்கூட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவியும்உறுப்பினருமான திருமதி.வாசுகி சுதாகரனால் பிரேரிக்கப்பட்டு முன்னணி உறுப்பினர்களின் கடும் அழுத்தத்தினால் ஆதனவரி 4 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளரை தொடர்பு கொண்டபோது 25 வருடகாலமாக ஆதனவரி அதிகரிப்புச் செய்யப்படாமல் இருந்ததாகவும் வருமான மார்க்கத்தை அதிகரித்து மக்களின் அபிவிருத்தியை முன்னெடுக்கவே ஆதன வரியை அதிகரிக்க முற்பட்டதாகவும் எனினும் மக்களின் கருத்தை உள்வாங்கி 4 வீதத்தால் குறைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆதனவரி சம்பந்தமாக தமது நிதிக்குழு 5 வீதத்தால் குறைக்குமாறு பரிந்துரை வழங்கியதாகவும் இனிவரும் காலங்களில் ஆதனவரி அதிகரிப்புத் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)



**சுன்னாகம் பொது நூலகத்திற்கு 2017 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தில் சிறப்பாக செயற்பட்டமைக்காக தேசிய ஆவணமாக்கல் சபையால் அண்மையில் பத்தரமுல்ல அபேகம மஹவலவ்வே மண்டபத்தில் விருது வழங்கப்பட்டது.**

# வெள்ளத்தில் மூழ்கிய வீதி



(கரணவாய்)

அல்வாய் கிழக்கு நெடுக்கேணி ஆலடி வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் பொதுமக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இவ்வீதியை உடனடியாக புனரமைப்பு செய்து தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ-60)

# புதிய வீதிகள் திறப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொகுதியின் ஆவரங்கால் பகுதியில் புதிதாக புனரமைக்கப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் ஆவரங்கால் பகுதியில் புனரமைக்கப்படுகின்ற நான்கு வீதிகளில் ஆவரங்கால் கிழக்கு புவனேஸ்வரி வீதியே சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு வீதியை திறந்து வைத்தார்.

வலி.கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான நிர்மலநாதன், அகீபன்,சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# ஹெரோயினுடன் நான்கு பேர் கைது

(களுத்துறை)

2 ஆயிரம் ஹெரொயின் பைக்கற்றுக்களுடன் 4 பேர் களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. களுத்துறை-வொத்தகொட பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மனிதக் கொலையுடன் தொடர்புபட்டு விளக்கமறியலிலுள்ள நபர் ஒருவரால் குறித்த ஹெரோயின் வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (இ-7)

# பட்டாசு உற்பத்தி விநியோகம் குறைவு

(கொழும்பு)

இந்த முறை பண்டிகைக் காலத்தின் இந்த உற்பத்திகள் விநியோகம் குறைவடைந்துள்ளதாக பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் தலைவர் தினேஸ் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார். அதற்கமைய நூற்றுக்கு 50 வீதமளவில் விநியோகம் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 110 | 105 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 650 | 480 | 500 |
| தக்காளி | 300 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 120 | 100 | 80 | 120 |
| கரட் | 200 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 50 | 40 | 60 |
| புடோல் | 120 | 120 | 150 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 110 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 200 | 160 | 150 | 140 |
| லீக்ஸ் | 200 | 180 | 160 | 200 |
| பீற்றுட் | 200 | 160 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 360 | 200 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 140 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 25 | 40 | 50 |
| தேசிக்காய் | 500 | 350 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 400 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | — |
| பொன்னாங்காணி | 50 | 40 | 20 | 80 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 120 | 80 |

# மகிந்தவுக்கு பதவி வழங்க மறுப்பது அரசியலமைப்புக்கு முரணானது-சு.க.

(கண்டி)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு ஏனைய கட்சிகள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்துவது அரசியலமைப்புக்கு முரணானதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து அதற்கேற்றவாறு தற்போது செயற்பட்டு வருகின்றோம்.

ஆகையால்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரத்தை வழங்கினோம்.

அதனைத் தொடர்ந்து நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளோம்.

இதன்படி நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய எதிர்க் கட்சிக்குச் சென்றவர்தான் எதிர்க்கட்சி தலைவராக வர வேண்டும்.

ஆனால், இவ்விடயங்களை அறியாத ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன" என ரோஹண லக்ஷ்மன் பியதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

# ஹெரோயின் போதைப் பொருளுடன் மகசின் சிறையில் கைதி கைது!

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கைதி ஒருவர் ஹெரோயின்போதைப்பொருளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அவர் பொறளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 4 கிராம் 690 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிராண்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஏற்கனவே ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# ரணில் விக்கிரமசிங்கவும் அரசமைப்பை மீறிவிட்டார்

## அநுர எம்.பி.புகார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசமைப்பை மீறிவிட்டார் எனக் குற்றம்சாட்டிய ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அமைச்சரவையில் அங்கம் வகிக்கவேண்டியவர்களின் எண்ணிக்கை 30ஆகும்.எனினும் 35பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலே ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலை அம்பலப்படுத்துமாறு கோரி நின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தேசிய அரசாங்கமாக கணக்கிலெடுத்தே அரசமைப்பை பிரதமரும் மீறியுள்ளார். அரசமைப்பை பாதுகாப்பதற்காக நாங்கள் கடந்த சில நாட்களாக பல்வேறான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலகிலே பெரிய விமானம் இலங்கையில் தரையிறக்கம்



(கொழும்பு)

உலகிலே பெரிய (A - 380 Airbus) விமானம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் திடீரென தரையிறக்கப்பட்டது.

டுபாய் நகரிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்த குறித்த விமானத்தில், திடீரென ஒருவருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ள நிலையில் இவ்வாறு தரையிறக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதுடன், விமானத்தில் 490 பயணிகள் உட்பட 22 ஊழியர்கள் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விமானத்தில் சுகயீனமுற்ற பயணி கட்டுநாயக்க விமான நிலைய மருத்துவ மத்திய நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குக். கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட நிலையில், 80 இலட்சம் ரூபாவிற்கு எரிபொருள் நிரப்பப்பட்டதாக விமான நிலைய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் காலை 7.40 இற்கு விமானம் அவுஸ்திரேலியா - சிட்னி விமான நிலையம் நோக்கிப் பயணித்தது. (இ-7)

# அரசியல் நெருக்கடியில் மக்கள் அரசியலமைப்பை கற்றுக்கொண்டனர்-வஜிர



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் நாட்டில் வாழும் சாதாரண மக்கள் அரசியலமைப்பு சட்டத்தைப் பழத்துக் கொண்டதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்துறை, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சராக நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல உட்பட ஐக்கிய தேசியக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர், கடந்த தினங்களில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இந்த அரசியல் நெருக்கடி காரணமாக கிராமங்களில் இருக்கும் சாதாரண மக்களும் அரசியலமைப்பு சட்டத்திலுள்ள விடயங்களைக் கற்றுக் கொண்டனர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதியின்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை குறைத்தார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வர அது உதவியாக அமைந்தது எனவும் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். (இ-7)

# நிம்மதியாக உறங்கிய உறுப்பினர்

(கொழும்பு)



நாடாளுமன்றத்தில் எந்தவித தடையுமின்றி நிம்மதியாக உறங்கிய உறுப்பினர் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் காலை நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றது.

இதன் போது இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதங்கள் நடத்தப்பட்டன.


விவாதம் ஆரம்பித்த போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் விஜயபால ஹெட்டி ஆராச்சி நன்கு உறங்க ஆரம்பித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவடைந்தவுடன் உறக்கத்தில் இருந்து விழித்தவர் எழுந்து சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நாடாளுமன்றத்தில் இருந்த கமராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண வீட்டில் திடீர் மோதல்; ஆட்டோவுக்குத் தீ வைப்பு

(கல்லடி)



மட்டக்களப்பு கல்லடி பகுதியில் மரண வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட திடீர் மோதல் காரணமாக ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் ஆட்டோ ஒன்று எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மட்டக்களப்பு-கல்லடியிலுள்ள பொலிஸ் பயிற்சி கல்லூரிக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரண வீடு ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குழுவொன்றுக்கும் அங்கிருந்த ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது ஒருவர் மீது பத்துக்கும் மேற்பட்டவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து குறித்த நபரின் ஆட்டோவையும் இழுத்துச்சென்று வீதியில் போட்டு தீயிட்டு எரித்துள்ளனர்.

இதன்போது தாக்குதலுக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அப்பகுதிக்குச் சென்ற மட்டக்களப்பு குற்றத்தடயவியல்பிரிவுபொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினரும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# 10 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை துரிதகதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்தினூடாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் குறுகிய காலத்தில் மிக விரைவாக நிறைவேற்றப்படும். பிரச்சினைகளைத் தீர்த்து இடைநிறுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க ஆளும் கட்சிக் கூட்டத்தில் அனைத்துப் பிரதிநிதிகளும் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

மேலும் பெற்றுக்கொடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த 10 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களையும் துரிதகதியில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# போர்க்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மகிந்தவுக்கு எதிராக பிரிட்டனில் மனு

(கொழும்பு)

இனப்படுகொலை உள்ளிட்ட போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.



எதிர்வரும் ஜனவரி மாத மளவில் பிரித்தானிய நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் திவயின என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச ஸ்ரீலங்கா பேரவையின் செயலாளர் சட்டத்தரணி ஜயராஜ் பலிஹவடனவை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இறுதிப் போரில் இராணுவத் தளபதியாக பதவி வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப் படைத் தளபதி ரொஷான் குணதிலக்க ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்படுகின்ற புலம்பெயர்ந்த சட்டத்தரணியான சிவானி தியாகராஜா தலைமையில் பிரித்தானியாவிலுள்ள அமெரிக்க சட்டத்தரணிகள் இணைந்து இந்த வழக்கை தாக்கல் செய்யவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்தலை குற்றவியல் குற்றமாக கருதப்படுவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டத்தின் ஊடாகவே மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தவழக்குஉட்படமேலும் பல விடயங்களை எதிர் வரும் மார்ச் மாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 40ஆவது அமர்வில் குறித்த மூன்று பேருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை தொகுத்து முன்வைக்க்வும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து வரும் தீர்மானங்களுக்கு அமைவாக ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# திருத்தல யாத்திரையும் திருவாசக முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைமணித்திரு நாட்டில் நிரந்தர சாந்தி, சமாதானம் வேண்டி புனிதத் திருத்தல யாத்திரையும் திருவாசக முற்றோதலும் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை முதலுதவிச்சங்கம் இந்து சமயத் தொண்டர் சபை யாழ்.சின்மயா மிஷன் ஏற்பாட்டில் நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்.நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி கைதடி பிள்ளையார் ஆலயம், வவுனியா வேப்பங்குளம் பத்திர காளி அம்மன் ஆலயம், சிலாபம் முருகன் ஆலயத்தில் இரவு தங்கி அடுத்த நாள் அதிகாலை பூஜை பஜனை வழிபாடுகளைத் தொடர்ந்து முன்னேஸ்வரம் சிவன் ஆலயம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், பாணந்துறை முருகன் ஆலயத் தைத் தொடர்ந்து காலி சிவன் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இடம்பெற்றுத் தொடர்ந்து தேனாவரம் தேவந்துறை ஆலயம், தெவிநுவர விஷ்ணு புத்தர் ஆலயத்தை மயும் தரிசிக்கும் யாத்திரை இடம் பெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் அடியார்கள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை முதலுதவிச் சங்கம் இந்து சமயத் தொண்டர் சபையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்புகளுக்கு 077 923 6552, 076 718 1984 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# அமெரிக்க கடற்படைக் கப்பலும் கொழும்பு வந்தது

(கொழும்பு)

ரஷ்ய கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருக்கும் நிலையில், அமெரிக்காவின் தரையிறக்கக் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.



13 ஆவது கடல் விரைவு அணியைச் சேர்ந்த யுஎஸ்எஸ் ரஷ்மோர் (USS Rush more) என்ற தரையிறக்க கப்பலே ஆறு நாட்கள் பயணமாக கொழும்புத் துறை முகத்துக்கு வந்துள்ளது.

கொமாண்டர் றொபேர்ட் ட்ரயனை கட்டளை அதிகாரியாக கொண்ட, 185 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில், 380 அதிகாரிகள் மற்றும் கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க கடற்படைக் கப்பல் தரித்திருக்கும் என்றும், இதன் போது இருநாடுகளின் கடற்படையினரும் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க- இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது. (இ-7)

# வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சிஆணையாளர்ம.பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிராந்தியஉள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன், சங்கானை பிரதேச செயலர் திருமதி. பிறேமினி பொன்னம்பலம், கௌரவ விருந்தினர்களாக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சு.மோகனகுமார், தொல்புரம் மின் அத்தியட்சகர் எஸ்.எஸ்.ரமணிதரன், சங்காணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், வேள்ட் விஷன் லங்கா கல்வித்திட்ட தொழில்நுட்ப ஆலோசகர் அ.சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5)

# போலி அதிகாரி கைது!

(களுத்துறை)

களுத்துறை - மதுகம பிரதேசத்தில் நுகர்வோர் விவகாரங்கள் ஆணைய அதிகாரி என அடையாளப்படுத்தி கொண்டு நபர் ஒருவர் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ள போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டிகை தினங்களில் இவ்வாறு அதிகாரிகள் போன்று போலியான நபர்கள் செயற்படுவது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு யாராவது போலியான முறையில் செயற்பட்டால் உடனடியாக தகவல் வழங்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மழை வெள்ளத்தால் மக்கள் அவதி



யாழ்.வடமராட்சிக்கிழக்கு கனமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து வரும் அபாய நிலை காணப்படுகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவ் வெள்ளத்தால் வடமராட்சிக் கிழக்கிற்கான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. கச்சான், வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்களும் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன. (இ-64)

# முல்லைத்தீவில் 16 இடைத்தங்கல் நிலையங்களில் மக்கள் தஞ்சம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நேற்றுவரை பெய்துவரும் அடை மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் பல்வேறு கிராமங்கள் நீரில் மூழ்கி பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளன. அந்தவகையில் 688 குடும்பங்களை சேர்ந்த 2244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் 599 குடும்பங்களை சேர்ந்த 1908 பேர் 16 இடைத்தங்கல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள தோடு இவர்களுக்கான சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-281)

# வெள்ள அனர்த்தத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள கிளிநொச்சி அரச அதிபருக்கு அமைச்சர் பணிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார பணித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளத்தினால்இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான முதலுதவிகள், சமைத்த உணவுகள் வழங்குவ தற்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஏழு நலன்புரி நிலையங்களில் 229 குடும்பங்களை சேர்ந்து 858 பேர் நேற்றுக் காலை வரை வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இவர்கள் இரத்தினபுரம் பொது நோக்கு மண்டபம், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், பாரதிபுரம் ம.வி, இராமநாதபுரம் மாவடியம்மன் ஜெப ஆலயம், திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், உதயநகர் கிழக்கு பொது நோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்கியுள்ளனர் என கரைச்சி பிரதேச செயலாளர் த. முகுந்தன் தெரிவித்தார்

இதேவேளை கண்டாவளை பிரதேசத்தில் ஏழு முகாம்களில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 119 பேர் தங்கியுள்ளனர் என கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தெரிவித்தார்.

அத்தோடு பிரமந்தனாறு பகுதிகளில் நேற்று காலை வரை சுமார் 18 மாடுகள், 150 இற்கு மேற்பட்ட கோழிகள் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 17 குடும்பங்களை சேர்ந்த 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 3 பாதுகாப்பான அமைவிடங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-312)

# ஊழல் மோசடி மிக்க நாடுகளில் நமது நாடுதான் முதலிடத்தில்

## அமைச்சர் ஹரின் காட்டம்

(கொழும்பு)

கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் ஊழல் மோசடி மிக்க நாடுகளில் நமது நாடுதான் முதலிடத்தில் இருக்கின்றது. இது வெட்கத்துக்குரியதாகும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



எனவே இலங்கை கிரிக்கெட் துறையில் நிலவும் மோசடிகளைக் களைந்து தூய சிந்தையோடு கிரிக்கெட் வளர்ச்சிக்கு சேவை யாற்றுபவர்களைத் தேர்ந்தெடுக்கும்வரை இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நியமிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றேன்.

இது குறித்து தீர்மானம் எடுக்கவேண்டிவரும் என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை பொறுப்பேற்ற ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, விளையாட்டுத் துறை ஆகிய நான்கு அமைச்சுப் பதவிகளை ஏற்ற அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேற்று முன்தினம் முற்பகல் விளையாட்டுத்துறை அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பின்னர் விளையாட்டுத்துறை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

டன்கன் வைட் கேட்போர்கூடத்தில் ஊடகவியலாளர்களைப் பிரத்தியேகமாக சந்தித்தபோதே விளையாட்டுத்துறையில் நிலவும் மோசடிகளைக் களைந்து சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அமைச்சர் ஹரின் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நிர்வாகிகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் அங்கு நிலவும் பல்வேறு குறைபாடுகள், ஊழல் மோசடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து தூய சிந்தை உடையவர்களை, இதய சுத்தியோடு பணியாற்றக் கூடியவர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என்பதை வலியுறுத்திய அமைச்சர், இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நியமிப்பது குறித்து ஆலோசிப்பதாகவும் தெரிவித்தார்.

இது குறித்தும் இலங்கையில் ஐ.சி.சியின் ஊழல் மோசடி தடுப்புப் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பது குறித்தும் சர்வதேச கிரிக்கெட் பேரவை அதிகாரிகளை எதிர்வரும் 26 அல்லது 27ஆம் திகதியன்று சந்திக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு அல்லது குழாத்துக்கு 20 வீரர்கள் வரை தெரிவு செய்யப்படுகின்ற போதிலும் இலங்கையில் கிரிக்கெட் விளையாடும் சுமார் 600 முதல் 700 வீரர்களில் பெரும்பாலானவர்கள் வாய்ப்பு கிடைக்காமல் மனம் நொந்து போகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். எனவே இரண்டாம் நிலை அணிகளை உருவாக்குவதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

கிரிக்கெட் விளையாட்டுத்துறையின் முன்னேற்றம் கருதி அறிமுகப்படுத்த வேண்டிய பல விடயங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை குமார் சங்கக்காரவும் மஹேல ஜெயவர்தனவும் தயாரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை நாளை திங்கட்கிழமை தனக்கு கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்களுடன் கலந்துரையாடி கிரிக்கெட்டின் நலன் கருதி நல்ல முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில்பல விளையாட்டுத்துறைகளுக்கு ஒளிபரப்பு சேவை இல்லாதது பெருங்குறையாகும். தொலைத்தொடர்பு வசதிகள் இருப்பதால் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக ஒவ்வொரு விளையாட்டையும் ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு ஒளிபரப்பு சேவை ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட மெய்வல்லுநர்களுக்கு சத்துணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளமை, கனிஷ்ட மெய்வல்லுநர்கள் ஏழு பேருக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த 75 ஆயிரம் இரண்டு மாதங்களுடன் நிறுத்தப்பட்டமை குறித்து அமைச்சரிடம் வினவிய போது, இந்த விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிலளித்தார். இலங்கையில் விளையாட்டுத்துறை என்பது கிரிக்கெட் விளையாட்டு மாத்திரமல்ல என நான் நம்புகின்றேன்.

விளையாட்டுத்துறை அமைச்சு என்றவுடன் பலர் கிரிக்கெட் பிரச்சினையைத் தான் கேட்கிறார்கள். ஆனால் கிரிக்கெட்டை விட சர்வதேச அரங்கில் எமது இளையோரை வெற்றி பெறச்செய்யக்கூடிய இன்னும் பல விளையாட்டுக்கள் இருக்கின்றன. எனக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் கிடைத்திருப்பதால் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இன்னும் ஏதுவாக இருக்கும். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பேதம் எதுவுமற்ற ஒரே ஒரு துறைதான் விளையாட்டுத் துறை.

எனவே விளையாட்டுத் துறை மூலம் எவ்வாறு அந்நியோன்னியத்தை, சமரசத்தை, நம்பகத்தன்மையை ஏற்படுத்துவது என்பது குறித்து சிந்திக்கவேண்டும். அத்துடன் எமது வீர, வீராங்கனைகளை எவ்வாறு சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்வது என்பது குறித்து சிந்திக்கவேண்டும்.

அரசியலுக்கு அப்பால், இனவாதத்துக்கு அப்பால், மதவாதத்துக்கு அப்பால் அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் ஒரே ஒரு இடம் விளையாட்டுத்துறையாகும். எனவே விளையாட்டுத்துறையை பாதுகாத்து நாட்டை சுபீட்சம் அடையச் செய்வதற்கான முதற்படியை எம்மால் ஆரம்பிக்க முடியும் என நம்புவதாக அவர் கூறினார்.

அண்மையில் நிலவிய அரசியல் நெருக்கடி குறித்து பேசிய அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ,

அரசியல் ரீதியில் 51 தினங்கள் விடுமுறை என்று கூறமாட்டேன். கடும் போராட்டத்தை எதிர்கொண்டு வாழ்க்கையில் பெறவேண்டிய அதிசிறந்த அனுபவத்தைப் பெற்ற காலம் என்றுதான் நான் தனிப்பட்ட வகையில் நம்புகின்றேன். அனைத்தையும் இழப்பதற்கு ஒரு கணப்பொழுது தான் தேவை. ஆனால் அதனை மீண்டும் அடைவதாக இருந்தால் கடும் போராட்டத்தை நடத்தியே ஆகவேண்டும்.

அவ்வகையில் நாங்கள் புத்துயிர் பெற்றவர்களாக மீண்டு வந்துள்ளோம். அதனை வெறுமனே கொள்ளாமல் நம்பிக்கையுடன் முன்னோக்கி நகரவுள்ளோம். எங்கள் மத்தியிலும் இடம்பெற்ற சில குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொண்டு இதயசுத்தியுடன் செயலாற்றுவதையே எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறுகிய காலத்தில் மிகதுரிதகதியில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருந்த சட்ட மூலங்கள் மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கிடைக்கப்பெற்றிருக்கும் இந்த குறுகிய நாட்களில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மிகத் துரித கதியில் மேற்கொள்வோம் என அஞ்சல் மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

அமைச்சு பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அஞ்சல் மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக பணிகளையும் துரித கதியில் முன்னெடுப்போம். மேலும் பிரச்சினைகளுக்கும் மிக விரைவில் தீர்வுபெற்றுக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனம்





(கொழும்பு)

புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமிருந்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

1. ஹேமசிறி பெர்னாண்டோ - பாதுகாப்பு அமைச்சு

2. திருமதி எஸ்.எம். மொஹமட் - தபால் சேவைகள், முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

3. வே. சிவஞானசோதி - தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

4. பத்மசிறி ஜயமான்ன - கல்வி அமைச்சு

5. ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல - நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

6. ஜே.ஜே.ரத்னசிறி - பொதுநிர்வாக, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

7. கலாநிதி பி.எம்.எஸ். படகொட - மின்சக்தி, சக்திவலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு

8. எல்.பீ.ஜயம்பதி - போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு

9. என்.ரூபசிங்க - பெருநகரங்கள், மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

10. எச்.டீ.கமல் பத்மசிறி - உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

11. ஜே.ஏ.ரஞ்சித் - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

12. ஏ.பீ.ஜீ.கீத்சிறி - புத்தசாசனம் மற்றும் வட மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

13. எல்.டி.சேனாநாயக்க - மகளிர், சிறுவர் அலுவல்கள், உலர் வலய அபிவிருத்தி அமைச்சு

14. டி.எம்.ஏ.ஆர்.பி. திஸாநாயக்க - மஹாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சு

15. பீ.சுரேஷ் - மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

16. எச்.எம்.காமினி செனவிரத்ன - தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

17. கே.டி.என்.ஆர். அசோக - கைத்தொழில், வாணிப அலுவல்கள் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

18. கே.டி.எஸ். ருவன் சந்ர - விவசாயம் கிராமிய பொருளாதாரம், பண்ணை வள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு

19. ரவிந்திர ஹேவாவிதாரன - அரச தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சு

20. டபிள்யூ. எச்.கருணாரத்ன - காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு.

21. எம்.வை.எஸ். தேசப்பிரிய - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு

22. கே.பீ.பேர்னாட் வசந்த சில்வா - வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

23. எஸ்.டீ.கொடிகார - அபிவிருத்தி மூலோபாயங்கள், சர்வதேச வர்த்தகம், விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு

24. டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா - தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

25. வசந்த பெரேரா - சுகாதார, போசணை, சுதேச மருத்துவத்துறை அமைச்சு

26. எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே - நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு

27. சிறி ஹெட்டிகே - சுற்றுலா அபிவிருத்தி, வன ஜீவராசிகள், கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

28. ஆர்.பீ.ஆரியசிங்க - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

29. பராக்கிரம திஸாநாயக்க - துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

30. சுனில் ஹெட்டியாரச்சி - நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு. (இ-7)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கனமழையினால் வெள்ளப்பெருக்கு

## மக்கள் முகாம்களில் தங்கவைப்பு; குளங்களின் நீர்மட்டம் சடுதியாக அதிகரிப்பு; போக்குவரத்து துண்டிப்பு; வீதிகளை மூடியது வெள்ளநீர்













(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வரை பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பெருமளவான வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிமுதல் நேற்றுவரை பெய்த கனமழையினால் இவ்வாறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நள்ளிரவு வீடுகளுக்குள்ளும் வர்த்தக நிலையங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்தமையால் மக்கள் செய்வதறியாது தமது உடைமைகளை விட்டு வெளியேறினர்.

வர்த்தக நிலையங்களுக்குள்ளும்வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதுடன், போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டன.

குறிப்பாக, இரணைமடுக் குளத்தின் வான்கதவகள் திறக்கப்பட்டுள்ளமை மற்றும் கனகாம்பிகைக் குளத்தின் நீர்மட்டம் அதிகரிதுள்ளமை கூடுதலான பாதிப்பாக இந்தப் பிரதேசங்களிலே இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகமைத்துவப் பிரிவினர், அரசாங்க அதிபர், பொலிஸார், உடனடியாக விரைந்து மக்களுக்கான உடனடி சேவைகளை வழங்கும் பொருட்டு செயற்பட்டனர்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்தமையால் குளத்தின் 11 வான் கதவுகள் அனைத்தும் திறந்து விடப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள அனைத்து குளங்களும் வான்பாய்ந்து வருவதாக பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அதிகளவான நீர் இரணைமடுக் குளத்திற்கு வருகை தந்தமையால் குளத்தின் வான் கதவுகள் நேற்று அதிகாலை திறந்து விடப்பட்டள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குளங்கள் உடைப்பெடுக்கும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்பட்டதாகவும் அவ்வாறான சூழல் ஏற்படவில்லை எனவும் மக்கள் அச்சமடைய தேவை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் தாழ்நில பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் குளங்களை பார்வையிட வருவோர் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக மழைவீழ்ச்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் முகாம்களில் தங்கி உள்ளமையால் அவர்களுக்கான சுகாதாரம் மற்றும் உணவு உள்ளிட்டவற்றை வழங்கி வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிறு குளங்கள் வான் பாய்வதால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டனர். குறிப்பாக கனகாம்பிகை குளம் வான்பாய்வதால் மக்கள் அவ்வழி ஊடாக இரணைமடு, சாந்தபுரம், திருவையாறு உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இரணைமடுக்குளம் மற்றும் போக்குவரத்துக்கு அதிகம் தடையாக உள்ள பகுதிகளிலும் வெள்ளம் வடிந்தோடும் பகுதிகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கு மற்றும் இரத்தினபுரம் பகுதிகளில் இராணுவத்தினர் மக்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் பல்வேறு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், முல்லைத்தீவு செல்வபுரம் பொது மண்டபம், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் உள்ளிட்ட்வற்றில் மக்கள் தங்கியிருக்கின்றனர்.

இவர்களுக்கான உணவு, சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. (2-315-312)




# முல்லைத்தீவில் பெய்த அடைமழையை அடுத்து

## போக்குவரத்து துண்டிப்பு; சொத்து இழப்புக்கள்; வியாபார நிலையங்கள், வீடுகளினுள் வெள்ளநீர், கால்நடைகள் உயிரிழப்பு; மக்கள் பாடசாலைகளில் தங்கவைப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நேற்று வரை பெய்த அடைமழை காரணமாக பல்வேறு இடங்கள் நீரில் மூழ்கியமையால் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல், வசந்தபுரம் ஆகிய கிராமங்கள் நீரில் மூழ்கின. இதனால் அங்குள்ள மக்களை முப்படையினரின் உதவியோடு பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர் உள்ளிட்டவர்கள் மு/மன்னாகண்டல் பாடசாலையில் தங்கவைத்தனர்.

இதேவேளை துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தேராங்கண்டல் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ரெட்பான மாணிக்கபுரம், வள்ளிபுனம், மந்துவில், ஆனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கனகரத்தினபுரம், பண்டாரவன்னி, பனிக்கன்குளம் உள்ளிட்ட பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

மாவட்டத்தின் தாழ்நில பிரதேசங்கள் அனைத்திலுமே வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்து மக்கள் இடம் பெயர்ந்து உறவினர் வீடுகள், பொது இடங்களில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாந்தை கிழக்கு.அம்பாள்புரம்.கொல்லவிளாங்குளம் பகுதியிலும் மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதோடு வவுனிக்குளத்தில் திடீரென நீர் அதிகரித்ததால் நன்னீர் மீனவர்களது மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை பாலைப்பாணி கிராமத்துக்கான போக்குவரத்துக்கள் முற்றாக தடைப்பட்டிருந்தன.

இதேவேளை முல்லைத்தீவில் பிரதான வீதிகளை குறுக்கறுத்து வெள்ளம் பாய்தமையால் பல பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக ஒட்டுசுட்டான்,புதுக்குடியிருப்பு வீதியின் மன்னாகண்டல் பகுதி மற்றும் பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியின் மூங்கிலாறு தேவிபுரம் பகுதிகள் உள்ளிட்ட பல பகுதியில் வீதியை குறுக்கறுத்து நீர்பாய்வதால் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

2வருடங்களுக்குமேலாக மழைவீழ்ச்சி இன்றி நெற்செய்கை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இம்முறை செய்கைபண்ணப்பட்ட பல ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நீரில் மூழ்கியுள்ன.

அதேவேளை கால்நடைகள் பல இறந்துள்ளதோடு, வீடுகள், வியாபார நிலையங்களுக்குள் வெள்ளநீர் சென்றமையால் பாரிய சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

குறித்த அனர்த்தத்தில் சிக்குண்டவர்களை மீட்க முப்படையினரும் பொலிஸார், அரச அதிகாரிகள் களத்தில் தீவிரமாக ஈடுபட்டதோடு மக்களை தங்கவைத்த இடத்தில் சமைத்த உணவுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-281)

காலம் அனைத்தையும் வென்றுவிடும்.
எனவே காலத்துக்குப் பணிந்து உடனடியாக கடமை புரியுங்கள். - பாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து உதவி செய்யுங்கள்

வட பகுதியில் பெய்து வரும் கடும் மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட பிரதேசங்களும் யாழ்குடாநாட்டில் தாழ்நிலப் பகுதிகளும் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள குளங்கள் நிரம்பியதையடுத்து வான் பாயத் தொடங்கியுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய அனர்த்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அதேநேரம் வட பகுதியில் கடும் மழை பெய்யும் என்ற எச்சரிக்கைகள் விடுக்கப்படாத நிலைமை துரதிர்ஷ்டமானது.

அண்மைக்காலமாக மழை மற்றும் காற்றுத் தொடர்பான விபரங்களை வானிலை அவதான நிலையம் முன்கூட்டியே தெரிவித்து வந்த போதிலும் வட பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த கனத்த மழை தொடர்பில் முன்னறிவிப்புகளோ எச்சரிக்கைகளோ விடுக்கப்படாமை அதிர்ச்சியளிப்பதாகும்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தங்களிடம் இருக்கக்கூடிய அவதானக்குறைகளைச் செம்மைப்படுத்திக் கொள்வது கட்டாயமானது.

இவை ஒருபுறமிருக்க, கடும் மழை காரணமாக வன்னிப் பிரதேச மக்கள் பலவாறான கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்ததனால் ஏற்பட்ட சேதம், விவசாயப் பயிர்கள் அழிந்துபோன நட்டம், கால்நடைகளின் இறப்பு எனப் பெரும் இழப்புக்களை மக்கள் சந்தித்துள்ளனர்.

எனவே வட பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். இந்த உதவித் திட்டமானது உடனடி நிவாரணமாகவும் தொழில் இழப்புகளுக்கான நட்டஈடாகவும் இருப்பது அவசியம்.

இயற்கை அழிவுகளின்போது மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளுக்கான அரச நிவாரணம் போதாது என்ற குறைபாடு இருக்கின்ற அதேநேரம் வடபுலத்தில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கு, வரட்சிப் பாதிப்பு போன்றவற்றுக்கான அரச நிவாரணங்கள் போதுமானதாக இருப்பதில்லை என்பதுடன் காலதாமதத்தையும் கொண்டுள்ளதால் மக்கள் மிகப்பெரும் அவலங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

எனவே வடபகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் விரைவாக வழங்கப்படுவது அவசியம்.

அரச நிவாரணம் என்பதற்கப்பால், பொது நிறுவனங்கள், சமூக அமைப்புகள், சமய ஸ்தாபனங்கள் மற்றும் கொடை வள்ளல்கள் தேவையான உதவிகளை வழங்க முன்வருவதும் மிக மிக அவசியமானதாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக மழை காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தை ஏற்படுத்தாத வகையில் திட்டமிடல்கள் இடம்பெறுவது கட்டாயமானதாகும்.

## பாடசாலை சேவை வாகன கட்டணம் குறைக்க நடவடிக்கை

எரிபொருள் விலைக் குறைப்பைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் மல்சிறி த சில்வா தெரிவித்துள்ளார்.

வாகனங்களுக்கான ரயர் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றுக்கான விலைகள் அதிகரித்துள்ளன. இருந்த போதிலும் அண்மைக் காலமாக குறைவடைந்துள்ள எரிபொருள் விலையைக் கருத்தில் கொண்டு கட்டண குறைப்பை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (மு-3)

## கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைவேலி பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபரிடமிருந்து ஒரு தொகை கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதானவர் 28 வயதுடைய இரணைமடு, உடையார்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (மு-3)

# மகிந்த ராஜபக்ஷ துரோகமிழைக்கவில்லை! ஐக்கிய தேசியக் கட்சிதான் எப்போதும் எதிரி

## ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ஷ 54 பேருடன் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவில் இணைந்தாலும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளித்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு துரோகம் இழைக்கவில்லை என சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

மேலும், சுதந்திர கட்சி உறுப்பினர்களான விஜித் விஜயமுனி சொய்சா, ஜோன் செனவிரத்ன மற்றும் இந்திக பண்டார உள்ளிட்ட மூவரும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து கட்சிக்கு துரோகமிழைத்து விட்டனர்.

எனவே அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது உறுதியாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர கட்சியின் தற்போதைய நிலை தொடர்பில் கொழும்பு தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியை நாம் எப்போதும் சுதந்திர கட்சிக்கு எதிரான கட்சியாகவே கருதுகின்றோம்.

அவர்களுடன் இணைந்து பயணிக்க முடியாமையினாலேயே தேசிய அரசாங்கத்திலிருந்து விலக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருந்தார்.

இந்நிலையில் சுதந்திர கட்சி உறுப்பினர்கள் மூவரும் அவர்களுடன் இணைந்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

# இலங்கைக்கு ஆதரவாக சீனா செயற்பட்டுள்ளது

## என்கிறார் தயான் ஜயதிலக

இலங்கைக்கு நேர்மையான, நெடுங்கால நட்புறவு நாடாக சீனா உள்ளதுடன்யுத்த காலங்களில் அதனை எதிர்கொள்வதற்கு சீனாவால் தொடர்ந்து வழங்கப்பட்ட ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அத்தோடு பலம்வாய்ந்த சர்வதேச நாடுகள், அமைப்புக்கள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு முற்படுகையில் இலங்கைக்கு சீனா ஆதரவை வழங்கி வந்துள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம் என ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக, ரஷ்யாவிற்கான சீன தூதுவர் லீ ஹுவை கடந்த வெள்ளிக் கிழமை ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள சீனத் தூதரகத்தில் சந்தித்தபோதே தயான் ஜயதிலக மேறகண்டவாறு குறிப்பிட்டார்.

குறித்த சந்திப்பின்போது உலகில் நிலவும் பொருளாதார, பூகோள நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், பொதுவாக முக்கியத்துவம்பெற்றுள்ளதற்போதைய அரசியல் நிலை மற்றும் குறிப்பாக தெற்காசிய பிராந்திய அரசியல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது (மு-3)

# எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தை விட்டு வெளியேறும் சம்பந்தன்! மகிழ்ச்சியில் மகிந்த

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்திலிருந்து இரா. சம்பந்தன் வெளியேறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்கும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் ஏற்றுக் கொண்ட போதிலும், இதுவரையில் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி அலுவலகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் செயற்படுவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா நேற்று முன்தினம் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்து வெளியிட்டார்.

"இந்த வாரத்தின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சி தலைவரை சபாநாயகர் அறிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் தீர்மானம் என்பது கட்சி தலைவர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் சபாநாயகர் அதனை செய்யாமல் நாடாளுமன்றத்தில் அறிவித்தமை எங்களுக்கு சிறு வருத்தம். எதிர்வரும் வாரத்தில் நாங்கள் எதிர்க்கட்சி அலுவலகத்தை மகிந்தவுக்கு ஒப்படைத்து விடுவோம்.

எப்படியிருப்பினும் எதிர்வரும் காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுயாதீன எதிர்க்கட்சியாக செயற்படும்.

நாட்டில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதற்குதான் ரணிலுக்கு நாங்கள் ஆதரவு வழங்கினோம். அதற்காக அரசாங்கத்துடன் இணையவில்லை. மகிந்த எதிர்க்கட்சி தலைவராக இருந்தாலும் இல்லை என்றாலும் நாங்கள் தனியாகத்தான் செயற்படுவோம்.

மகிந்தவுக்கும் ஆதரவு வழங்க மாட்டோம். மக்கள் விடுதலைமுன்னணி போன்று நாங்களும் சுயாதீனமாக செயற்படுவோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பில் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு மதிப்புக் கொடுத்து ஜனநாயக ரீதியாக செயற்படுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெற்றவர்களை மதித்து...

- பெற்றவர்களை மதித்து நடந்திட வேண்டும்.
- இறைவனுக்கு நிகராய் நாம் போற்றி வணங்கி டுவோம்.
- எத்தனை தியாகங்களுக்கு மத்தியில் அவர்கள் நம்மை வளர்த்திருப்பார்கள் என்பதை உணர்ந்து வாழ்ந்தால் நாம் நல்லவர்களாய் வாழலாம்.
- நல்ல பிள்ளைகளைப் பெற்றவர்தான் காலம் முழுவதும் கண்கலங்காமல் நிம்மதியாக இருக்கிறார்கள்.
- பெற்றவர்களுக்கு மிகப்பெரிய சொத்து என்பது நாம் வாங்கும் நல்ல பெயர் தான் புரிந்து கொள்ளுங்கள்.
- எனவே எதை இழந்தாலும் வாங்கி விடலாம்.ஆனால் பெற்றவர்களை இழந்து விட்டால் திரும்பிப்பெற இயலாது.எனவே அவர்களை இறுதி வரை காப்பது ஒவ்வொருவரின் தலை சிறந்த கடமையாகும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- பிரசித்தி பெற்ற பாடகர் சாங்கியுடன் அவருடைய மகன் நடந்து சென்றான். அவனுக்கு தான் அணிந்திருந்த கோட்டின் மேல் அளவில்லாத ஆசை. இரண்டு கைகளையும் கோட் பைகளுள் திணித்துக் கொண்டு பெருமையாக நடந்தான்.
- தகப்பனார் சொன்னார், "மகனே! மழை பெய்து ஈரமாய் இருக்கிறது. உன் கால்கள் சறுக்கலாம். என் கைகளைப் பிடித்துக் கொள்" என்றார். ஆனால், சிறுவனோ கோட் பையிலிருந்து தன் கைகளை எடுக்கவில்லை. ஸ்டைலாக நடந்து வந்தான்.
- திடீரென்று சரளைக் கற்கள் சிறுவனின் கால்களை வாரிவிட்டன. தடுமாறிய அவன் கீழே விழுந்ததால் பலத்த அடிபட்டான். முழங்காலில் ரத்தம் பீறிட்டது. அன்று அவன் ஒரு அருமையான பாடத்தைக் கற்றுக் கொண்டான். பலமுள்ள தன் தகப்பனின் உறுதியான கரங்களைப் பற்றிப் பிடித்து நடக்க தீர்மானித்தான்.
- கர்த்தர் நம்மை நடத்துகிறார். நித்தமும் நம்மை நடத்துகிறவர். (ஏசா.58:11) மரணபரியந்தம் நம் நடத்துகிறவர் (சங்:48:14) ஜீவ தண்ணீருள்ள ஊற்றுகள் அண்டைக்கு அவருடைய கரங்களைப் பிடித்து நடப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்!

# இன நல்லிணக்க கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# கள்ளப்பாடு உதயம் அணி சம்பியனானது










முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் கழகங்கள் மற்றும் படை அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களிடையே நல்லுறவினைக் கட்டி வளர்க்கும் நோக்கில் படை அணிகளுக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி ஒன்றினை கடந்த 20 நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையக தளபதி மேயர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுருவின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றுவந்தன.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 16 விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலும் படையினரின் 5 அணிகளுக்குமிடையிலான போட்டிகளின் இறுதி போட்டி நிகழ்வு இரணைப்பாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

இறுதிப் போட்டிக்குக் கள்ளப்பாடு உதயன் விளையாட்டுக்கழக்மும் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியுள்ளதுடன் படை அணியினரின் அணியில் 59 ஆவது படைப்பிரிவும் 64 ஆவது படைப்பிரிவு அணியும் தெரிவாகியுள்ளன.

மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற துடுப்பாட்ட அணியில் முதல் இடத்தினை கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகமும் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் மூன்றாவது இடத்தினை கொக்குளாய் பகுதியினை சேர்ந்த சிங்கள இனத்தவர்களின் செபஸ்ரியான் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டது.

முதலாவது அணிக்கு 70 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் இரண்டாவது இடத்தினை பெற்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் மூன்றாவது இடத்தினைப் பெற்ற அணிக்கு 25 ஆயிரம் பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

படை அணிகளுக்கிடையிலான போட்டியில் 59 ஆவது படைப்பிரிவினர் வெற்றி பெற்றுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு மற்றும் படைத் தளபதிகளும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளார்கள். (க)

## றோயல் கல்லூரி அணியை இனிங்ஸினால் வென்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையில் 19 வயது பிரிவு 2 அணிகளுக்கிடையிலான சிங்கர் கிண்ணத்துக்கான முதற் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பாணந்துறை றோயல் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாணந்துறை றோயல் கல்லூரி அணி 103 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் தனஞ்சய பிசாத் 47 ஓட்டங்களையும் செனேஸ் பிரேமரத்ன 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

அன்ரன் அபிசேக், றதுசன் மற்றும் அபினாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 209 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த போது, ஆட்டத்தை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் றதுசன் 62 ஓட்டங்களையும் அபினாஸ் 61 ஓட்டங்களையும் டினோசன் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

106 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய றோயல் கல்லூரி அணி, மீண்டும் சென்.ஜோன்ஸ் அணியின் பந்துவீச்சினை எதிர்கொள்ள முடியாமல், துடுப்பாட்டத்தில் தடுமாறியது. 92 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், சென். ஜோன்ஸ் அணி, இனிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் துசாந்த மதுசங்க 33, தனஞ்சய பிரசாத் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் அணியின் அணித்தலைவர் அபினாஸ் 5 விக்கெட்டுகளையும், சரண் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க-26)

## அரியாலை சுதேச திருநாள் கொண்டாட்ட போட்டி நிகழ்வுகள்

அரியாலை மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட நூற்றாண்டு விழா. 2019 வெற்றிப் பயணத்தின் முன்னோடி உள்ளூர் கலை போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் உள்ளூர் போட்டியாளர்கள் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கலைத் தலைவர் ப. ஸ்ரீஸ்கந்தன் தெரிவித்துள்ளார். போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை தெரிந்து கொள்ள கடந்த புரட்டாதி மாதம் 30 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பார்க்கவும். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**



வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் மைதான அபிவிருத்திக்கு நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் கோரிக்கைக்கு அமைவாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பணத்தின் மூலமாக கரப்பந்தாட்ட மைதானத்திற்கான மின்னொளி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு கழகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சார்பாக புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் வவுனியா நகரசபையின் உறுப்பினருமான சுந்தரலிங்கம் காண்டீபன் கழக நிர்வாகத்திடம் கையளித்தார். (க)

## பப்பரே சம்பியன்சிப் போட்டி சென்.பற்றிக்ஸ் மூன்றாமிடம்



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுமதியுடன், இலங்கை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் பப்பரே சம்பியன்ஷிப் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றுப்போட்டியின் மூன்றாமிடத்துக்கான ஆட்டம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நீர்கொழும்பு மாரிஸ்ஸ்ரெல்லா அணி மோதியது.

33 ஆவது நிமிடத்தில் சென்.பற்றிக்ஸ் வீரர் அபீசன் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 44 ஆவது நிமிடத்தில் அபீசன் இரண்டாவது கோலையும் பதிவு செய்து அணியை முன்னிலைப்படுத்தினார். முதற்பாதியாட்டம் முடிவடையும் தருணத்தில், மாரிஸ் ஸ்ரெல்லா அணியின் மொஹமட் சிபான் பதில் கோலை அடித்தார். முதல்பாதியாட்டம் நிறைவடைகையில் சென்.பற்றிக்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பமாகிய 3 நிமிடங்களில், மொஹமட் சிபான் அணிக்கான இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். இதன் பின்னர் சென்.பற்றிக்ஸ் அணி ஆக்ரோசமாக ஆடியது. எனினும், மேலதிக கோல்கள் எவையும் பதிவு செய்யப்படவில்லை.

போட்டி நேரம் முடிவடைகையில், இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளர் பெனால்ட்டி உதையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதில், சென்.பற்றிக்ஸ் அணி 03:02 என்ற கோல்கள் மூலம் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.பற்றிக்ஸ் அணியின் அபீசன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கண்டாவளை...

நேற்று பிற்பகல் திடீரென வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த உத்தியோகத்தர்களை மீட்பதில் பாரிய நெருக்கடி நிலை காணப்பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் படகு மூலம் அலுவலக ஆவணங்களும் பணியாளர்களும் மீட்கப்பட்டனர்.

இதேவேளை கிளிநொச்சியில் தொடர்ந்தும் வெள்ளம் அதிகரிக்கும் நிலையில் மீட்புப் பணியில் தொடர்ந்தும் படையினர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

## தொண்டைமா...

வட பகுதியில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக நீர் மட்டத்தின் அளவு அதிகரித்துள்ளதால் தொண்டைமானாறு நீரேரின் தடுப்பணையின் மூன்று கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு முதல் கடும் மழை கொட்டியது. இதனால் தொண்டைமானாறு நீரேரியில் நீர் வரத்து அதிகமாக இருந்ததனால் நீரேரியின் தடுப்பு கதவுகள் மூன்றினை நேற்று சனிக்கிழமை முற்பகல் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளினால் திறக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியுள்ளதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

சீரறற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை தொடக்கம் பெய்த கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள அனேகமான வீடுகளிற்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

மேலும் ஆழியவளை பகுதியில் உள்ள நான்கு குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேர் அப்பகுதியில் உள்ள நலன்புரி நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தவிர வடமராட்சி பகுதியில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 808 பேர் உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மேலும் தற்போது மழை குறைவடைந்துள்ளதாலும், வடமராட்சி கடல் நீரேரியின் தொண்டைமானாறில் உள்ள தடுப்பணை கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாலும் வெள்ளம் சற்று வடிந்து வருகிறது.

மழ்ழ தொடருமாயின் அப்பகுதியில் மீண்டும் வெள்ளம் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-60)

# ஏ-9 வீதியூடான போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சீரற்ற கால நிலையால் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏ-9 பிரதான வீதியின் குறுக்கே பளை பகுதியிலுள்ள பாரிய மரமொன்று நேற்று சனிக் கிழமை சரிந்து வீழ்ந்துள்ளது.

பிரதான வீதியான ஏ-9 வீதியின் பளைப் பகுதியில் நீண்ட காலமாக நின்ற பாரிய மரம் சரிந்து வீழ்ந்ததால் அவ்வீதியூடான போக்குவரத்து நீண்ட நேரம் பாதிப் படைந்தது.

இவ்வாறு போக்குவரத்து தடைப் பட்டதால் குறித்த வீதிக்கு அருகாமையிலான வீதி வழியாக போக்குவரத்து மேற்கொள்ளப்பட்ட போது அந்த வீதியூடாகச் சென்ற பாரவூர்தியொன்றும் குடைசாய்ந்ததில் அந்த வழியும் தடைப்பட்டது.

இதனால்ஏ-9 வீதியூடான போக்குவரத்து சில மணிநேரங்கள் நிறுத்தப்பட்டதால் வீதியால் பயணித்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர நோக்கியிருந்தனர்.

இதன் பின்னர் அப்பகுதி மக்களும் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையும் இணைந்து இவ்வீதியூடான போக்குவரத்தைச் சீர் செய்தனர். இதன்பின்னர் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (மு-3)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அமைச்சர் பணிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்குமாறும், பாதிக் கப்பட்ட மக்களை பாது காப்பான இடங்களில் தங்க வைக்குமாறும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட மாவட்டங்களில் அரச அதிபர்களுடனும் அனர்த்த நிவாரண அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்ட அமைச்சர், கடும் மழை காரணமாக கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவுமாறும்வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## அரசியல் தீர்வுக்கான போராட்...

தொடர்வதற்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு சுவிஸ் வாசல் செந்தமிழ்ச்சோலையின் நிறுவன அனுசரணையுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது.

தற்போதைய அரசியல் தொடர்பில் பலரும் பலகருத்துக்களை முன்வைக்கலாம். அது ஜனநாய ரீதியானதே. நாங்களும் ஜன நாயக ரீதியில்தான் செயற்பட்டு வருகின்றோம். கடந்த மாதங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் யாவரும் அறிந்ததே. இது திருட்டுத்தனமான முறையற்ற விதத்தில் பிரதமரை இல்லாது ஆக்கியது அமைச்சரவையை இல்லாதாக்கிய செயற்பாடுகள். அரசியலமைப்புக்கு முரணாக இடம்பெற்றுள்ளன.

அவை அனைவராலும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதற்காகவே நீதிமன்றம் சென்றமையினால் உயர் நீதிமன்றம் அதற்கான தீர்ப்பை வழங்கி நீதியை நிலைநாட்டியது. உயர் நீதிமன்றத் தீர்ப்பு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக தற்போது புதிய அரசியல் தீர்வு இடம்பெற்றது. நாங்கள் எமது மக்களுக்கு என்ன தேவையோ அதனை முன்நிறுத்தி செயற்பட்டு வருகின்றோம். சிலர் எமது செயற்பாட்டை பார்த்து ஒரு கட்சிக்கு சார்ந்ததாக நடப்பதாகக் கூச்சல் இடுகின்றார்கள். ஆனால் நாங்கள் ஜனநாயக ரீதியாக செயற்பட்டு ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம்.

இதேபோல்தான் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள அரசியல் தீர்வை கண்டடைவோம். சம நேரத்தில் போரினால் பாதிக்கப் பட்ட எமது மக்களின் பகுதிகளை சீரமைப்பதும் பெண் தலைமைத்துவம் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதும் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பாகவும் மீண்டும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு உறுதுணையாக சர்வதேச சமூகமும் எங்களுடன் நிற்கின்றது. இந்தத்தருணத்தை நாங்கள் முறையாக பயன்படுத்தி எமது மக்களுக்காக தொடர்ந்தும் செயற்பட்டு வருவோம் என்றார்.

இதேவேளை எமது கோரிக்கையாலேயே பிரதமருக்கு வடக்கு அபிவிருத்தி அமைச்சு கிடைத்தது என்றார் மாவை சேனாதிராசா. (மு-3)

## நீரில் மூழ்கியது...

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலையும் நீரில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக அங்கு மழை பெய்துவரும் நிலையில், பாதிக் கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு...

நேற்று சனிக்கிழமை மாலை 3 மணி வரையான நிலவரப்படி வடக்கில் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டோரின் விவரத்தை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் இறுதி அறிக்கையின்படி, ஆறு பிரதேச செலகப் பிரிவுகளிலும் மொத்தமாக 3794 குடும்பங்களைச் சேர்ந்த 12651 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இருபத்தைந்து இடைத்தங்கல் முகாம்களில், 1240 குடும்பங்களைச்சேர்ந்த, 3805 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 675 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 170 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 614 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 899 பேர் இடம் பெயர்ந்து 16 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 498 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 501 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 451 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 250 பேர் இடம்பெயர்ந்து 4 தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 166 குடும்பங்களைச் சேர்ந்த 548 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 100 குடும்பங்களைச் சேர்ந்த 352 பேர் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 69 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 701 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 550 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட் டுள்ளனர். அவர்களில் 229 குடும்பங்களைச் சேர்ந்த 858 பேர் 7 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவில் 629 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 119 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 7 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் 3 தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

**மன்னார்**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

இரணைமடுக் குளத்துக்கு வரும் நீரின் அளவு உயர்ந்துள்ளது. அதனால் இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதனால் 11 வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளது.

36 அடி நீர்கொள்ளளவைக் கொண்ட இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் நேற்று 35 அடியாகக் காணப்பட்டது. இந்நிலையில் நேற்றிரவு பெய்த மழையினால் குளத்தின் நீர்மட்டம் மிக வெகுவாக அதிகரித்துள்ளது.

இரணைமடுக் குளத்தில் உள்ள 14 வான்கதவுகளில் 11 வான்கதவுகளை உடனடியாக திறந்து விட்டுள்ளதுடன், தாழ் நிலப்பகுதிகளில் உள்ள பாதுகாப்பு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது என்று பொறியியலாளர் என்.சுதாகரன் குறிப்பிட்டார்.

குளத்தில் இருந்து வெளியேறும் நீரின் அளவை விட குளத்துக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளததால் சூழ்ந்த கிராமங்களில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பாக படகுகளில் மீட்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் குமுழமுனை உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்றிரவு கொட்டிய மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வன்னியில் பெரும்பாலான குளங்கள் நிரம்பி நீர் வான்பாய்ந்து கொண்டிருப்பதால், வெள்ள நிலை மேலும் மோசமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மு-3)

## எத்தகைய அழுத்தம் வந்தா...

செயலாளர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்ததன் பின்னர் அவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் அரச அதிகாரிகளுக்காக ஜனாதிபதி என்ற வகையிலும் தனிப்பட்ட வகையிலும் தான் குரல் கொடுப்பதாக தெரிவித்தார்.

நல்லாட்சி என்ற சொல்லை நாம் எங்கு பயன்படுத்திய போதும் நாட்டின் அரச நிர்வாகம் தூய்மையானதொரு நிர்வாகம் என்ற சான்றிதழை இன்னும் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றும், நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்ற சிறந்த அரச நிர்வாகத்திற்காக உரிய முறையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளுக்கு எதிரான போராட்டத்துடன், தொடர்ந்தும் நாட்டு மக்களுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அரச வளங்களை சேதப்படுத்தி, மக்களின் பணத்தை திருடி மேற்கொள்ளும் ஊழல், மோசடிகள் எப்போதும் இரகசியமாகவே இருக்காது என்றும், அது என்றைக்காவது ஒரு நாள் மக்களுக்கு தெரிய வரும் என்றும், குற்றவாளிகள் உரிய தண்டனையை பெறவேண்டியிருக்குமென்றும் குறிப்பிட்டார்.

வறுமையற்ற நாட்டையும் ஒழுக்கப் பண்பாடான சமூகத்தையும் கட்டியெழுப்புவது இன்று எம்முன் உள்ள முக்கிய சவாலா கும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அந்த சவாலை வெற்றி கொள்வ தில் நாட்டின் அரச அதிகாரிகள் மீது தான் முழுமையாக நம்பிக்கை வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். (மு-3)


கொவிசெத
திகதி 2018.12.22
சீட்டிழுப்பு இலக்கம் 1981
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 30 44 54 78
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22-12-2018
சீட்டிழுப்பு இலக்கம் 902
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 8 0 2 3 1 0
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 1388
இலக்கம் 14
வெற்றி இலக்கம் 16 47 62 64 42 48
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 2018/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 146
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 14 36 46 66
தேசிய லொத்தர் சபை

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலி பகுதியில் வீடு ஒன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

**0776687688**

(6781)



## காணி விற்பனைக்கு

சித்தன்கேணியில் அமைதியான சிறந்த சுற்றாடலில் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில், வீடு கட்டுவதற்கான 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(6747)

தரகர் தேவையில்லை

**தொடர்பு: 0711173291**


## எதிர்க்கட்சி தலை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை பறிப்பதற்கு பல சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனாலும் அவற்றை முறியடித்து நாம் அப்பதவியை தக்கவைத்துக்கொள்வோம்.


## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள புடவை கடைக்கு புடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள, பழக விரும்பும் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

**0772026295**

(6779)



## கலை|வர்த்தகம் தொழில் நுட்பம்

**NEC** A/L 2021

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 06.01.2019 காலை 9.00 மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன



## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L இணைந்த கணிதம் 2020, 2021 தனியாகவோ அல்லது குழுவாகவோ கற்பிக்கப்படும்.

**0778324002**

(6782)


இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியினர் எங்களது மக்கள் செல்வாக்கை குறைப்பதற்கு பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதோடு பல சதித்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் அவை எல்லாவற்றையும் எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பாக நாங்கள் நன்கு அறிவோம் என ரோஹன லக்ஸ்மன் பியதாச மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு)

## உயர்தர பரீட்சை...

மறு ஆய்வு நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த வாரம் நிறைவடைந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் சரிபார்க்கும் நடவடிக்கைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களாக இந்த விடைத்தாள் சரிபார்க்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன். முதல் கட்டம் இன்று முதல் ஜனவரி 01-ம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இரண்டாம் கட்ட பணிகள் ஜனவரி 08-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதி வரை இடம்பெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மு)


## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



(C-4653)

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS



## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER **070 330 5500** WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-4742)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை



# துயர் பகிர்கின்றோம்



**அமரர் மாணிக்கம் இரத்தினசிங்கம்**

**(புதிய உயர் கல்லூரி உத்தியோகத்தர்)**

பொருளியற் கல்லூரி- யாழ்ப்பாணம், பொருளியற் கல்லூரி- சுன்னாகம், BARATHY- சித்தன்கேணி ஆகிய கல்வி நிறுவனங்களின் இயக்குநர் **திரு.ம.பத்மநாதன் (தயா)** அவர்களின் பாசமிகு சகோதரன் அமரர் **மாணிக்கம் இரத்தினசிங்கம்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாமும் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம் - சுன்னாகம், BARATHY - சித்தன்கேணி**

(மி-4506)



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Leading Pest Control & Marketing கம்பனிக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடித் தேவை.

■ **Assistant Accountant.**

- Account Knowledge (AAT, CA)
- Fluency in English & Computer Knowledge.
- With Experience in Accounting Field.
- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

(6768)

தங்களது சுயவிபரக்கோவையை hrtermite@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது Termite.com, (Pvt) Ltd. இல 06, புகையிரத லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு: 0763156802, 0214927626**



உங்களின் கவனத்திற்கு!!!

HONDA

## பண்டிகைக்கால விசேட விலைக்கழிவு

பண்டிகைக்காலத்தினை முன்னிட்டு உங்களுடைய Honda மோட்டார் சைக்கிலினை 24-12-2018 தொடக்கம் 15-01-2019 வரையான காலப்பகுதியில் எமது நிறுவனத்தில் சேவிஸ், Honda என்ஜின் ஒயில், உதிரிபாகங்கள் மற்றும் முழுமையான சேவிஸ் என்பவற்றிற்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்பட உள்ளமையால் பண்டிகைக்காலத்தில் உங்களது வாகனத்தினை சீர் செய்து மகிழ்ச்சியான பயணத்தை தொடரவும்.

கொண்டா என்ஜின் ஒயில் - 1100.00

கொண்டா அசல் உதிரிப்பாகங்கள் - 10%

சேவிஸ்- 400.00

மெக்கானிக்கல் சேவிஸ் - 4500.00

உத்தரவாத கால சேவிஸ்- 1500.00 [ 3rd, 4th, ...]




(6743)

**இரத்தினம் சேவிஸ் ஸ்டேசன்**

இல: 34, சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0212228472



FLC FRENCH LANGUAGE CENTRE

## பிரெஞ்சு

(C-4687)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



## நிரந்தர வேலைவாய்ப்பு

வணிக துறையில் உங்களுக்கும் அரியதோர் சந்தர்ப்பம். 2019-ம் ஆண்டிற்கான புதிய கிளைகளை நிறுவும் நோக்கில் களமிறங்கியுள்ள எமது EDM நிறுவனமானது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் நிறுவவுள்ளதால் எதிர்பார்க்கப்படுகின்ற வெற்றிடங்கள் 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 31.12.2018ம் திகதிக்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(6777)

**0767118479, 0779858580**


## இலங்...

காணப்பட்டதாக குறித்த ஊடகம் நேற்று சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

இதன் போது மாலைத்தீவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் எல்லைமீறிச் சென்ற குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு தலைநகர் மாலிக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்ட 6 பேரும், படகுடன்ஃபுவாமுல்லா நகருக்கு அழைத்து செல்லப்பட்டு பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)


வாருங்கள் இலவசம்

# விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

## இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

22, 23 மார்கழி 2018 மாலை 4.00

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர். 673, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.

(6742)



# கண்ணீர் அஞ்சலி

**அமரர் மா.இரட்ணசிங்கம் (சின்னண்ணை)**



எமது நிறுவன இயக்குநர் மா.சண்முகநாதன் அவர்களின் சகோதரன் மா.இரட்ணசிங்கம் (சின்னண்ணை) அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தகவல் : விரிவுரையாளர்கள், புதிய உயர் கல்லூரி.**

(C-4805)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 197

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2049 | 23.12.2018 | தொலைபேசி : 021 222 3378

# வேண்டா வெறுப்பு







SLTC
SRI LANKA TECHNOLOGICAL CAMPUS
ශ්‍රී ලංකා තාක්ෂණික විශ්වවිද්‍යාලය
இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

Ministry of Telecommunication and Digital Infrastructure

**பொறியயல் பீடம்**
**School of Engineering**
- Electronics and Power Systems
- Electronics and Telecommunication
- Electronics and Engineering Management
- Software Engineering (ICE)
- Civil Engineering
- Mechatronics Engineering
- Bio Systems Engineering

**தொழில்நுட்பவியல் பீடம்**
**School of Technology**
- Electronics
- Process Automation and Control
- Agricultural Technology
- Environmental Technology

**முகாமைத்துவ பீடம்**
**Business School**
- Accounting and Finance
- Human Resource Management
- Marketing
- Operation Management
- Supply Chain Management
- Tourism and Hospitality Management



www.sltc.ac.lk 011 2100 500 பல்கலைக்கழக வாழ்க்கையின் உண்மையாள அனுபவம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வயதுபோன நேரத்தில பதவியை இழக்கிறது எண்டால் பெரிய கவலை தான். விதானையார் விசுவலிங்கமும் சாத்திரியார் சதாசிவத்தாரும் ,தமக்குள் பேசிக்கொண்டனர்.

என்ன விதானையார் ஆலடி மாநாட்டில இரகசியங்கள் இருக்கக்கூடாது. மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் ஒரு சபாநாயகர் போலக் கூறினார்.

அது நாங்கள் ஆலடிக்கு வரும்போதே வந்த கதைத்துக்கொண்டு வந்தனாங்கள். அந்தக் கதையின்ர சொச்சம்தான் இப்ப கதைத்தது.

விதானையார் விசுவலிங்கத்தின் பதில் வாத்தியாரைத் திருப்திப்படுத்துவதாக இல்லை.

என்ன இருந்தாலும் நீங்கள் கதைத்ததை நாங்களும் அறிவம். எங்களுக்கும் சொல்லுங்களன். வாத்தியாரின் விடாப்பிடியால் விதானையார் எதுவும் செய்ய முடியாமல் தாங்கள் கதைத்துவந்ததை சொல்லத் தயாராகினார்.

**விதானையார்:**அதென்னெண்டால் வாத்தியார், சம்பந்தர் ஐயாவின்ர எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறிக்க நடவடிக்கை நடக்குதல்லோ.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு அடுத்தபடியாக சம்பந்தர் ஐயா தான் எதிர்க்கட்சித் தலைவர் என்று கூட்டமைப்பு பெருமை பேசின நேரத்தில, அதிரடியாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்கிறது என்பது சம்பந்தர் ஐயாவைத் தாக்கத்தான் செய்யும். அதுதான் வயது போன நேரத்தில பதவி பறிபோயிற்றுது எண்டு ஐயா யோசிச்சார் எண்டால்...

**வாத்தியார்:** விதானையார் செல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. ஆனால்...

**பண்டிதர்:** என்ன வாத்தியார் ஆனால் என்பதோட நிறுத்திப்போட்டியள்.

**வாத்தியார்:** பாராளுமன்றத்தில ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கிறதால அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேணும் எண்டு கூட்டமைப்புக் கேட்டுக் கொண்டது. அந்த அடிப்படையில எதிர்க்கட்சி வரிசையில இருக்கிற வர்களில யாருக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறதோ அவரைத் தானே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கவிடவேணும்.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறதுக்காக நீதிமன்றம் ஏறினவியள் தங்கட பதவிக்காக மல்லுக்கட்டிச்சினம் எண்டால் இருக்கிற மரியாதையும் கெட்டுப் போய்விடும்.

**சாத்திரியார்:** அது சரி வடக்கு அபிவிருத்தியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னோட வைத்திருக்கிறாரல்லோ. அப்ப கூட்டமைப்பு சொல்லுறபடிதான் அபிவிருத்தி வேலைகள் நடக்குமோ?

**மூப்பர்:** கூட்டமைப்பு நினைக்குது தேர்தல் காலத்தில தனக்கொரு பலமான ஆதரவு தமிழ்மக்களிட்ட இருக்கவேணுமெண்டு. ரணில் விக்கிரமசிங்கவிட்ட வடக்கு அபிவிருத்தி அமைச்சு இருக்கிறது தங்களுக்கு நல்லதெண்டு. ஆனால்...

**வாத்தியார்:** மூப்பர் சொல்ல வந்ததைச் சொல்லி முடியுங்க.

**மூப்பர்:** வடக்கில இரண்டு ஆசனத்தையாவது தன்ர கட்சி அடுத்த பொது த்தேர்தலில எடுக்கவேணுமெண்டு ரணில் நினைக்கிறார். அதாலதான் திருமதி விஜயகலா மகேஸ்வரனை கல்வி இராஜாங்க அமைச்சராக நியமித்துள்ளார்.

**விதானையார்:** கூட்டமைப்பின்ர கதையைக் கேட்டு விஜயகலாவை ஒதுக்கி வைத்த ரணில் இப்ப தன்ர கட்சிக்கு இடம் கிடைக்கவேணுமெண்டால் விஜயகலாவுக்கு ஒரு நல்ல அமைச்சு கொடுக்கவேணும் எண்டு நினைத்திட்டார். தன்ர கட்சி வெல்லவேணும் எண்டு ரணில் விக்கிரமசிங்க நினைத்த போது திருமதி விஜயகலாவுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் பதவி வழங்குவதை கூட்டமைப்பால தடுக்க முடியாமல் போயிற்றுது.

**வாத்தியார்:** மூப்பர் சொல்லுறதிலும் உண்மை இருக்குது. அதேநேரம் டி.எம்.சுவாமிநாதனுக்கு வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்ற அமைச்சை வழங்கவேண்டாமென்று கூட்டமைப்பு கேட்டிருக்கும். அதற்கு ரணில் சம்மதம் தெரிவித்திருப்பார்.

**பண்டிதர்:** அப்ப விஜயகலா மகேஸ்வரனுக்கு கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படுவது கூட்டமைப்புக்குத் தெரியாமல் போயிற்றுதோ.

**வாத்தியார்:** யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில விடுதலைப்புலிகள் பற்றி விஜயகலா பேசின படியால அவருக்குப் பிரதி அமைச்சோ அல்லது இராஜாங்க அமைச்சோ வழங்கப்படமாட்டாது எண்டு கூட்டமைப்பு நினைச்சிருக்குது. விஜயகலா மகேஸ்வரனுக்கு எந்தப் பதவியையும் ரணில் வழங்க மாட்டார் என்று தங்களுக்குள்ள ஊகித்துக்கொண்ட கூட்டமைப்பு விஜயகலாவுக்குப் பதவி எதனையும் வழங்கவேண்டாமென்று கூறுவதைத் தவிர்த்தது. இதுதான் சந்தர்ப்பம் எண்டு பார்த்திருந்த ரணில் விஜயகலா மகேஸ்வரனுக்கு ஒரு பெறுமதியான இராஜாங்க அமைச்சுப் பதவியை வழங்கியிருக்கிறார்.

**கங்காணி:** அப்ப விஜயகலா மகேஸ்வரனுக்கு கல்வி இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்டமை கூட்டமைப்புக்குப் புளி கரைச்சு ஊத்தினமாதிரித்தான் இருக்கும்.

**வாத்தியார்:** பின்ன இருக்காதோ. கல்வி இராஜாங்க அமைச்சராக விஜயகலா நியமிக்கப்பட்டதால கல்விச் சமூகம் விஜயகலாவின்ர வீட்டிற்கு முன்னால திரளப் போகுது. அப்ப அடுத்த தேர்தலில விஜயகலா வெற்றி பெறுவது உறுதியாயிற்று. அதுமட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரண்டு ஆசனம் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**பண்டிதர்:** தேசியக் கட்சிகளுக்கு வடக்கில இடம்கொடுக்கக்கூடாது, எங்கட வாக்குகள் தென் பகுதிக் கட்சிகளுக்குப் போகக்கூடாது என்டெல்லாம் சொன்ன கூட்டமைப்பு இப்ப ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கில நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்குது. அப்ப இதுகளை என்னவென்று சொல்லுவது.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா நீங்கள் இருந்து பாருங்க நான் எந்த இடத்தில வைத்துச்சொல்லுறன் எண்டு. கூட்டமைப்பு நினைக்கிற மாதிரி அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரப் போறதில்லை. அண்மையில வட பகுதியில உள்ள இலங்கை மின்சார சபை வெற்றிடங்களுக்கு 47 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்குது. இந்த 47 பேரும் சிங்கள இனத்தைச் சார்ந்தவர்கள் எண்டால் எங்கட தமிழ்ப் பிள்ளைகளுக்கு எங்கட இடத்திலேயே நியமனம் கிடைக்காமல் போகுது. இது பற்றியெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்குமா என்ன?

**சாத்திரியார்:** என்ர பரம்பொருளே எங்கட பிள்ளையளுக்கு நியமனம் வழங்கல்லப் போல. அப்ப பாருங்களன். எங்கடயள் பிரதமர் பதவியைக் காப்பாற்றிக் கொடுக்க நீதிமன்றம் ஏறுதுகள், அந்த ஊட்டுக்குள்ள வடக்கில உள்ள இலங்கை மின்சார சபை வெற்றிடங்களை சிங்களவர்களைக் கொண்டு நிரப்புகினம் எண்டால் சிங்களத் தரப்பு எங்களை எப்டியெல்லாம் ஏமாற்றுது எண்டு இனிமேலாவது உணரவேண்டாமோ.

**கங்காணி:** அதுசரி எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் யாரை நியமிப்பார்?

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரை சபாநாயகர் கரு ஜெயசூரிய மகிந்த ராஜபக்ஷ வைத் தான் எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பார். இல்லை எண்டால் சபாநாயகரின்ர செயற்பாட்டில சந்தேகம் ஏற்படச் செய்யும்.

**வாத்தியார்:** சரி... சரி... ஆரு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் எங்கட சனங்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பது தான் உண்மை.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## எங்கட வடபகுதியிலும் சிங்களவருக்குத்தான் வேலைவாய்ப்பு

ஆதித்தன்

# அரசியல் ஆட்டத்தில் சம்பந்தர் அவுட்



உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நாட்டின் அரசியலை ஒழுங்கு படுத்தியுள்ளது. ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக நியமிக்கமாட் டேன் என்று சபதம் செய்து நின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன எதுவும் செய்ய முடியாத நிலையில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதம ராக நியமித்து இரண்டா வது தடவையாகவும் சத்தியப்பிரமா ணம் செய்து வைத்துள்ளார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற கையோடு மந்திரி பிரதானிகளும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் அமைச்சர்களாக இடம் பெறுவதில்லை என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் அமைச்சுப் பதவிகள் முழுவதையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் சார்புடைக் கட்சிகளுக்குமாயிற்று.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிர தமர் பதவியில் இருந்து நீக்கிய தோடு அடுத்த கட்ட நடவடிக்கை யாக பாராளுமன்றத்தைக் கலை த்தது ஜனாதிபதி செய்த தவறான காரியமாக முடிந்தது. அந்தத் தவறுதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பாயிற்று.

தவிர, முன்னாள் பிரதம நீதி யரசர் சரத் என். டி. சில்வா போன் றவர்களின் தவறான ஆலோசனை கள் ஜனாதிபதி பிழையான முடிவு களை எடுக்கக் காரணமாயிற்று எனலாம்.

19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தைப் பற்றி எந்தக் கவன மும் செலுத்தாமல் பாராளுமன்றத் தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது என்ற தவறான ஆலோசனை ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிர தமராக்கியது. இவை நடந்து முடி ந்த விடயங்கள் என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

மாறாக இப்போது எதிர்க் கட்சித் தலைவர் பதவி யாருக்கு என் பது புதிய சர்ச்சையாக எழுந்து ள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சி யமைத்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது பொருத்துடையது.

ஆனால் அரசியலில் ஏற்பட்டு ள்ள குழப்பங்கள் காரணமாக இப்போது அரசிலிருந்து ஸ்ரீல ங்கா சுதந்திரக்கட்சி பிரிந்து எதிர்க்கட்சித் தரப்பில் உள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜ பக்ஷ தரப்பு சபாநாயகரிடம் கோரி யுள்ளது. எங்ஙனம் ரணில் விக்கி ரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருந் ததோ அதேபோன்று எதிர்க்கட் சித் தலைவர் பதவி தமக்குரியது. அதற்கான கோரம் தம்பக்கம் உள்ளதென்பது மகிந்த ராஜபக்ஷ தரப்பின் வாதம். இந்த வாதத்தை சபாநாயகர் கரு ஜெயசூரிய கொள்கையளவில் ஏற்றுள்ளார் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் பத வியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரினால் அதனை விட்டுக் கொடு ப்போம் என்பது இரா. சம்பந்தரின் கருத்தாக இருக்க, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விட்டுக் கொடுக்க முடியாது என கூட்டமை ப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறியுள்ளார்.

இந்த இருநபர்கூற்று வித்தியாச மாக இருப்பதில் அதிக குழப்பம் இல்லை. ஏனெனில் பதவியை இழக் கப் போகின்ற சம்பந்தர் அந்தப் பதவியை விட்டுக் கொடுப்பேன் எனக் கூறுவது சுய கௌரவத்தின் பாற்பட்டது.

அதேநேரம் சம்பந்தர் அவர்க ளின் வலதுகரமாக இருக்கக்கூ டிய பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விட்டுக் கொடு க்க முடியாது. அது சம்பந்தர் ஐயா வுக்குரியது எனக்கூறுவது கட்சித் தலைவர் மீதான விசுவாசத்தை காட்டுவதானது. ஆகையால் மேற் கூறப்பட்ட இருநபர் கருத்துக்கள் விவாதத்திற்குரிய விடயமன்று.

ஆனால் எதிர்க்கட்சித் தலை வர் பதவியில் இருந்து இரா. சம் பந்தர் நீக்கப்பட்டு அந்தப் பதவி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப் பட்டால், அதனை எதிர்த்து கூட்ட மைப்பின் பேச்சாளர் சுமந்திரன் நீதிமன்றத்தை நாடுவாரா, சம்பந் தரின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி றிக்கப்பட்டது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று வாதி டுவாரா? என்பதுதான் கேள்வி.

பாராளுமன்றம் கலைக்கப்பட் டது செல்லுபடியற்றது எனக்கூறி நீதிமன்றத்தின் படிகளில் ஏறிய



கூட்டமைப்பு தனது எதிர்க்கட்சித் தலைமை பறிக்கப்படும்போது நீதிமன்றப் படிகளில் ஏறமறுத் தால், இரா. சம்பந்தரை அந்தப் பத வியில் இருந்து நீக்கி மகிந்த ராஜ பக்ஷவை எதிர்க்கட்சித் தலைவரா க்கியது சரி என்றாகிவிடும். எதற் கும் நிலைமையைப் பொறுத்தி ருந்து பார்ப்பதுதான் நல்லது.

எது எவ்வாறாயினும் பாராளு மன்றக் கலைப்பின் போதும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருப் பதற்கான தமது ஆதரவைத் தெரிவிப்பதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து நின்ற சிங்களக் கட்சிகள் எவையும் இரா.சம்பந்தரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்குங்கள் என்று கேட்கப் போவதில்லை.

இதைக்கூறும்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககூட அவ்வாறான தொரு கோரிக்கையை விடமாட்டார் என்பது தெட்டத்தெளிவு. நிலைமை இதுவாக இருக் கையில் எதிர்க்கட் சித் தலைவர் பதவியை இரா. சம்பந்தர் இழப்பது உறுதி யாகிறது.

இலங்கையின் வரலாற்றில் ஆளுங்கட்சியின் அத்தனை நட வடிக்கைகளின் போதும் தனது ஆதரவை வழங்கிய ஒரே எதிர்க் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அத்தியாயம் முடிவுக்கு வருவதும் உறுதி.

இவ்வாறானதொரு சூழ்நிலை யில், இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக ஒரு தமிழன் வருவதென்பது பல வருடங்களுக்குச் சாத்தியமாகாத சம்பவமாகவே இருக்கும் என்பது டன் அந்த விடயத்தை நிறுத்திக் கொண்டால், ரணில் விக்கிரம சிங்கவை மீண்டும் பிரதமராகக் கொண்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தமிழ்மக்களின் நலன் சார்ந்ததாக இருக்குமா? என்பது ஐயம் தருவதாகும்.

ஆம், பாராளுமன்றக் கலைப் புக்கு எதிராகவும்; ரணில் விக்கிர மசிங்கவுக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருப்ப தால் அவரையே பிரதமராக நியமிக்கவேண்டுமெனக்கோரியும் நீதிமன்றம் ஏறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் என்ன செய்யப் போகின்றனர் என்பது பற்றிய விமர்சனங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பேசுபடுபொருளா கியுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்யப்போவதில்லை என் பது ஜனாதிபதி மைத்திரியின் அறிவிப்பு.


தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு எந்தக் கோரிக்கையை முன் வைத்தாலும் அதனை எதிர்ப்பதில் ஜனாதிபதி மைத்திரி மும்முரமாக இருப்பார். இந்நிலையில் ஜனாதி பதி எதிர்ப்பதால் தான் ஒன்றும் செய்ய முடியாதென்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதிலாக இருக்கப் போகிறது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஒவ்வொரு காய் நகர்த்த லும் அடுத்த பொதுத் தேர்தலில் தமக்கான வெற்றியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றிய தாக இருக்கிறதேயன்றி மற்றும்படி தமிழ் அரசியல் கைதிகள், காணா மல் போனவர்களின் விவகாரம், இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களின் விடுவிப்பு என்பன பற்றி எந்தக் கவனமும் செலுத்தப்படப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

திருநீலகண்டன்




# நன்றி மறவாமை



கடல் சார்ந்த ஊரில் கடன் வாங்கி நடத்தும் குடும்பம் ஒன்றில் நிமலன் பிறந்தான். இவர்களின் குடும்பத்தினர் இடப்பெயர்வு காரணமாகவே அந்த ஊரில் வந்து குடியேறினர். கடலே தம் பலம் எனக் கொண்ட நிமலன் குடும்பத்துக்கு ஆதரவு தரக் கூட எவருமில்லை. அவனின் தந்தையோ? சதா குடித்துக் கொண்டே இருப்பார். இவனின் தந்தை ஓர் நாள் மீன்பிடிக்கச் செல்கையில் போதையில் தடுமாறி கடலில் வீழ்ந்து மீனிற்கு இரையாகினார். இந்தச் செய்தியைக் கேட்ட நிமலன் தாய் கணவன் இறந்ததை நம்ப முடியாது, நெஞ்சுபொறுக்காது அவளும் உடன் உயிர் நீத்தாள்.

நிமலனோ? கிளைகள் அற்ற மரம்போல் வாடினான். அவனுக்கு இப்பொழுது துணை என்று இருப்பது அவனின் தம்பியான கண்ணன் மட்டுமே. அந்தத் தம்பியோ? தாய், தந்தை இழந்ததைக் கூட அறியாத பாலகன். சிறுபிள்ளை என்பதால் காண்பதை எல்லாம் வாங்கித்தரச்சொல்லி அடம்பிடிப்பான். இவனுக்கு நான் எவ்வாறு குடும்ப நிலையைப் பற்றியும் பொருளாதார நிலை பற்றியும் எடுத்து உரைப்பது. தம்பியையும் படிக்க வைக்க வேண்டும். அவன் ஆசைகளையும் நிறைவேற்ற வேண்டும். குடும்பக் கடன்களையும் அடைக்க வேண்டும்.

இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று யோசித்தான். அவனுக்கு நினைவுக்கு வந்தது வலை பின்னுவது மட்டுமே! சிறுபிள்ளையில் இருந்து வலை பின்னுவதை அவதானித்த நிமலன் தம் ஊரில் உள்ள அறுந்த வலைகளைப் பின்னுவோம் என்று உடனே ஆரம்பித்தான். வாரங்கள் எல்லாம் மாதங்கள் ஆகக் கழிந்தன. தன் குடும்பக் கடனை அடைத்தான். அதன் மூலம் கிடைத்த மிகுதிப் பணம் ஒருவரை தான் படிப்பிக்கக் காணும். அப்போது நிமலன் நான் படிக்காவிட்டால் என்ன? என்னைப் போல் தம்பியும் வரக் கூடாது. அவனை டாக்டருக்குப் படிக்க வைத்து எம்மைப் போல் ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்ய வேண்டும்.

ஏழைகளுக்குப் பண உதவியும் செய்ய வேண்டும் என்று இந்த வாசகங்களைச் சொல்லிச் சொல்லித் தன் தம்பியை படிக்க வைத்தான். அண்ணனின் பரிதாபநிலை, இலட்சியம், தீராத வறுமை என்பவற்றுக்கு முற்றுக்கட்ட அவனும் வைத்தியனாக வாகை சூடினான்.

வைத்தியத்தை இலவசமாகச் செய்தான். இதையறிந்த நிமலன் மகிழ்ச்சி மழையில் நனைந்தான். ஆனால் கண்ணனின் தமையன் அறுந்த வலைகளைப் பின்னும் தொழிலாளி என்று அவனுக்கு அவப்பெயர் வந்துவிடும் என்று கூனிக்குறுகி குடிசைக்குள் அமர்ந்திருந்தான்.

நாட்கள் ஆகின. கண்ணனோ? வரவில்லை. ஓர் நாள் நீட்டுப் போக்கான காரில் வந்து இறங்கிக் குடிசைக்குள் நுழைந்தான் கண்ணன்.

இதைப் பார்த்த நிமலன் தம்பியின் குணம் அறிந்து மெய்சிலிர்க்க, கண்கலங்கக் கட்டித் தழுவினான்.

குடிசை முன் எண்ணற்ற பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனத்தினர் என்போர் சூழ்ந்து நின்றனர். அப்பொழுது நிமலன் கேட்டான். ஏன் தம்பி இவ்வளவு பேர் குடிசை முன்றலில் உள்ளனர் என்று வினவிய போது கண்ணன் கூறினான்.

என் வெற்றிக்குக் காரணம் யார் என்று கேட்டனர். அதனால் தான் நான் இங்கு அழைத்து வந்தேன். என் வெற்றி குடிசைக்குள் தான் உள்ளது. அதனால் தான் எல்லோரையும் இங்கு வரச் சொன்னேன். என்வெற்றியே! நீதான் அண்ணா இந்த மங்காப் புகழ் உன்னையே அடையும் என்று கூறி அண்ணன் விருப்பத்திற்கு அமைய ஏழைகளுக்கு எண்ணற்ற உதவிகளைச் செய்தான்.

ஏழைப் பிள்ளைகளின் இலட்சியத்தை நிறைவேற்றப் பல பண உதவிகளையும் செய்தான். இச் செயலை எண்ணி குடிசையில் உள்ள அறுந்த வலை தைக்காமலே! சீராகியது.

**த.மயூரதன்,**
**இணுவில் கிழக்கு.**

## பொது அறிவுகள்

- **ஏலக்காயில் இருக்கும் எண்ணெயின் பெயர் என்ன?**

  **வோலடைல்**

- **தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது?**

  **கங்காரு எலி**

- **ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?**

  **ஏழு**

- **பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?**

  **330**

- **தாஜ்மஹால் எந்தவகை மார்பிளால் கட்டப்பட்டுள்ளது?**

  **மக்ரானா**

- **பனிக்கட்டிகளின் மேல் வளரும் செடிகளின் பெயர் என்ன?**

  **க்ரயோ பைட்ஸ்**

- **டயாலிஸிஸ் இயந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?**

  **வில்லியம் கோல்ப்**

## தாலாட்டு



சாலை வழியுறங்க
சமுத்திரத்தில் மீனுறங்க
நாடெல்லாம் தூங்க
நடுக்கழனி நெல் தூங்க


பாலில் பழந்தூங்க
பாதி நிலா தான்தூங்க
உன்னுறக்கம் நீ கொள்ள
உத்தமியா(ள்) தாலாட்ட

பொற்கொடியா(ள்)தாலாட்ட
புத்திரனே நித்திரை செய்
மங்கையர்கள் தாலாட்ட
மகராசா நித்திரை செய்!

கண்ணே என் கண்மணியே
கற்பகமே நித்திரை செய்
நித்திரையும் போவாயாம்
சித்திரப் பூந்தொட்டிலிலே!(ராராரோ..)





சந்திரிகா கொண்டுவந்த தீர்வுத்திட்டத்தை ரணில் கிழித்தெறிந்தாரே?

தமிழ்மொழி பேசும் எங்களை சிங்கள மொழி பேசுபவர்களாக நடத்த முடியுமா?

அரசியல் சீர்கேடு தொடர்பில் பழமொழி ஏதும் சொல்லுங்களேன்?

**சங்கரசிவன் — வதிரி**

**சஜித் பிரேமதாஸவின் அரசியல் நேர்மை ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமையுமா?**

நான் சிறுவனாக இருக்கும் போது எனது தந்தை அடிக்கடி சொல்வார். வாசுதேவ நாணயக்கார ஒரு நல்ல இடதுசாரி அரசியல்வாதி, தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் என்று.

இப்போது அவர் அந்த நிலையிலா இருக்கிறார்? இப்போது அவர் இருக்கும் இடம் எது? அவர் பேசும் பேச்சுக்கள் என்ன? சிந்தித்துப் பாருங்கள். மனிதர்களின் சமநிலை சில நிலையில் மாற்றிவிடும் அவ்வளவு தான்.

**சித்திரா — வட்டுக்கோட்டை**

**அரசியல் சீர்கேடு தொடர்பில் பழமொழி ஏதும் சொல்லுங்களேன்?**

- பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா – மகிந்த
- யாரும் இருக்கும் இடத்தில் இருந்து விட்டால் எல்லாம் சௌக்கியமே – ரணில்
- செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் தேடி வஞ்சத்தில் வீழ்ந்தாயாடா-தமிழ்த்தலைமை
- நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள் – ஜே.வி.பி.
- என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது – தமிழ் மக்கள்.

**ஆதவன் — ஆனைக்கோட்டை**

**பிரதமராக மீண்டும் ரணில், கூட்டமைப்பு ஜம்மென்றும் தமிழ் மக்கள் கம்மென்றும் இருப்பார்களோ?**

ஏதோ எமக்கு எல்லா அதிகாரங்களும் கிடைத்து எம்மை நாம் ஆளும் நிலை வந்துவிட்டது போல துள்ளிக் குதித்தார்களே. இறுதியில் இருந்த எதிர்க்கட்சிப் பதவியும் பறிபோய் விட்டது.

இனி அவர்கள் கம்மென்றுதான் இருக்கணும். தமிழ் மக்களுக்கு இந்த மாற்றங்களால் எந்த நன்மையும் இல்லை என்று ஏலவே கூறிவிட்டோம் இனி எதைச் சொல்ல.

**விதுராம் — யாழ்ப்பாணம்**

**வியாசரே பேய் பொய்யா? மெய்யா?**

தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை போல் இருக்கிறது. ஆக வேண்டிய நேரத்தில் ஆகியிருந்தால் இப்படிக் கேட்டிருக்க மாட்டான்.

**தாஸ் — யாழ்ப்பாணம்**

**என்னை ஒரு பெண் காதலிக்க மறுக்கிறாளே வியா மாமா?**

அடேய்! கடவுள் அருமையான சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறார் அதிலிருந்து தவறிவிடு. கழுதை போனால் போகட்டும் என்று விட்டு விடடா.

**வேதா — யாழ்ப்பாணம்**

**அதிகம் பாவம் செய்தவர்களே தமிழர்களாகப் பிறப்பார்களாம் உண்மையா?**

உண்மைதான். மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வரக்கூடாது என்று அதிகம் வியர்வை சிந்தி உழைத்தது எம் தமிழ்த்தலைமை.

ஜனாதிபதியின் முடிவு தவறானது என்று வாதாடி வென்றதும் எம் தமிழ்த்தலைமை?

இறுதியில் ஜனாதிபதி-மைத்திரிபால சிறிசேன, பிரதமர்- ரணில் விக்கிரமசிங்க. ஆனால் எதிர்க்கட்சித் தலைமை.

மாற்றத்திற்காக போராடி கடைசியில் இருந்த பதவியும் பறிபோனதுதான் மிச்சம்.

**உங்கள் எணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532,**
**076 636 3378 என்ற**
**Viber இலக்கத்துக்கோ SMS**
**அனுப்புங்கள்**

**தர்னிகா — கவுந்தில்**

**தமிழ்மொழி பேசும் எங்களை சிங்கள மொழி பேசுபவர்களாக நடத்த முடியுமா?**

70 வருடங்களாக நடத்தலாம் நடத்தலாம் என்று பேசுகிறார்களே தவிர ஏதும் நடத்துவதைக் காணவில்லை.

எமது ஆயுதப்போர் ஒடுக்கப்பட்டு 9 வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஏதும் நடைபெறவில்லை. நடைபெறுவதற்கான செயற்பாடுகளையும் காணவில்லை.

காலம் காலமாக அடிமை இனம் அடிமை இனமாகவே இருக்க வேண்டும் என்று ஆண்டவன் தந்த விதியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**அம்மு — மானிப்பாய்**

**குட்டிக் கதை ஒன்று சொல்லுங்கள் மகா ராஜா வியாசரே?**

ஒரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று இருந்தது. அதன் உடல் துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. அந்த வழியால் வந்த மானிடம் அந்தச் சிங்கம் கேட்டது என்னில் ஏதும் வாடை வீசுகிறதா என்று. அதற்கு மான் ஆம் என்றதும் கோபம் வந்த சிங்கம் மானைக் கொன்றது.

அதே போல் ஒட்டகத்திடமும் கேட்டது. மான் செத்துக்கிடப்பதைக் கண்ட ஒட்டகம் ஏதோ வில்லங்கம் என்பதை புரிந்து கொண்டு ராசா தங்களில் இருந்து நறுமணம் வீசுகிறது என்றது.

துர்நாற்றத்தை நறுமணம் என்று நக்கல் செய்கிறாயா என்று கோபம்கொண்டு ஒட்டகத்தையும் அடித்துக்கொன்றது சிங்கம்.

அந்தவழி வந்த நரியிடம் அதே கேள்வியைக் கேட்டது சிங்கம். நிலைமையைப் புரிந்து கொண்ட நரி கூறியது ராஜா மூன்று நாளாக எனக்கு சரியான ஜலதோசம். அதனால் எந்த மணமும் எனக்குத் தெரியவில்லை என்று. நிலைமை அறிந்து பேசுவதே புத்திசாலித்தனம்.

**அஜித்குமார் — வயாவிளான்**

**போராடினாலும் பெற முடியாதது எது?**

இதற்கு தமிழ் இனம் தான் நல்ல உதாரணம். உரிமை கேட்டு அறப்போர் செய்து அது மறுக்கப்பட ஆயுதப்போர் செய்து அது ஒடுக்கப்பட அதன்பின் இணங்கிப்போகும் (அவர்கள் மொழியில் இராஜதந்திரம்) படலம் நடந்து அதிலிருந்து கருவேப்பிலையாய்த் தூக்கி வீசப்பட வீதியோரம் கிடக்கிறது எம் தலைமை. எந்தப் போராட்டத்தாலும் உரிமையைப் பெற முடியாமல் தவிக்கும் தமிழினமே இதற்கு உதாரணமாகும்.

**ஜுபா — கரவெட்டி**

**சந்திரிகா கொண்டுவந்த தீர்வுத்திட்டத்தை ரணில் கிழித்தெறிந்தாரே?**

அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சந்திரிகா ஜனாதிபதி, ஐ.தே.கவில் ரணில் பிரதமர். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி, ஐ.தே.கவில் அதே ரணில் பிரதமர். என்னைப் பொறுத்த வரை அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் பெரிய வித்தியாசம் ஏதும் தெரியவில்லை.

**நேதாஜி — வதிரி**

**கூட்டமைப்பை அனந்தி குறை கூறுகிறாரே?**

கூட்டமைப்பை யார்தான் குறைகூறாதவர்கள் சொல்லுங்கள்.

## விடியலை அறியா விவசாயி

ஸ்ரீயோரா, மண்டைதீவு



கோடையின் தாகம் மழை எங்கும் அறியும்
ஏழையின் சாபம் விதி என்று அறியும்
உலகினை யார்தான் செய்தாரோ!
இறைவனை மனிதன் என்றானோ!

பினாமியில் கழியுது சுகபோகம்
ஏழை வயலினில் விளையல பெரும்போகம்
கனமழை இடை இடை வரும் போகம்
ஏழை விவசாயி கண்ணீர் அறியல பெரும்போகம்

கருணைகள் ஆங்காங்கே ஒலித்துவரும்
ஏழை கருணை மனுதான் ஜெபித்துவரும்
அவன் கைக்கு வருமுன் காலம் கடந்து விடும்

இரவினில் ஏறுது விலைவாசி
முடியல என் தேசமே நான் உன் விசுவாசி
உந்தன் வேராய் நீருக்குக் காத்திருக்கும்
விடியலை அறியா விவசாயி...

## உறிஞ்சிகள்

மாமரத்து நிழலினிலே
யாருமற்ற ஒரு ஜீவன்
மயக்க நிலை கொண்டு
தவிக்கிறது தாகத்தில்!

ஊர்கூடி தேர் இழுத்த
காலமெல்லாம் மலையேற
இடுகாடாய்க் கிடக்கிறது
இடப்பெயர்வின் கொடுமையிலே!

யாருமில்லை தோள்தர
தடிகொண்டு நடந்திடவே
உடலினில் தெம்பில்லை
வாடி வதங்கியது மனம்

வந்துவிழுந்தது ஷெல்லொன்று
மாமரத்து வேர் அதிர
மரக்கிளையில் பிஞ்செல்லாம்
அடுத்தகணமே உயிர் விட்டது

காயம்பட்ட ஜீவனொன்று
கிடக்கிறது மரநிழலில்
உதிரம் வழிந்தோடி
உவர்நீரில் சேர்கிறது

தூக்கிச் செல்ல ஆளில்லை
துணை கொடுக்க கரமுமில்லை
அரவணைப்பின்றிய
அநாதையாய்...

உதிரம் முழுவதுமாய்
வழிந்தோடி போன பின்பும்
ஜடமற்றுக் கிடக்கிறது
ஜடமல்ல அவன் மனிதன்

புயல் தணிந்த வேளையில்
நுளம்பொன்று ரீங்காரமிடுகிறது
கொஞ்சநஞ்சமேனும்
ஒட்டிக் கிடக்கும் உதிரத்துக்காய்

மாவை. நா. கஜேந்திரன்

## யா(பா)ழ்ப்பாணம்

பாணன் யாழ்மீட்டிய யாழ்ப்பாணம் எங்கே?
பானம் குடித்து வாள்மீட்டுவதா இங்கே?
அமைதிப்பூங்காவான யாழ்ப்பாணம் எங்கே?
அமர்க்களம் ஆகிய யாழ்ப்பாணமா இங்கே!
கல்வியில் பெயர் கண்ட யாழ்ப்பாணம் எங்கே?
கஞ்சா விற்பதில் முதலிடம் காண்பதுவா இங்கே!
ஏரோடு எழுத்தாணி பிடித்த யாழ்க்கரங்கள் எங்கே?
வாளோடு கத்தி தூக்கும் கரங்களா இங்கே!
சங்கிலியன் ஆண்ட தெருவெல்லாம் எங்கே?
சங்கிலி அறுக்கும் தெருவானதா இங்கே!
கதவுடைத்து கொள்ளை போனதும் அன்றோ?
கதவைத் தட்டியே கொள்ளை போகிறது இன்றே!
இரவினிலும் படலைதனில் துணிவோடு
நல்லெண்ணம் பேசிய யாழ்ப்பாணம் எங்கே?
பகலிலும் படலைதனை பெரும்பூட்டிட்டு
பதுங்கியிருந்து கதைபேசும் யாழ்ப்பாணமா இங்கே!
பாவையரும் பயமின்றி நடமாடிய யாழ்ப்பாணம் எங்கே?
பாட்டியும் பயத்தோடு நடமாடும் யாழ்ப்பாணமா இங்கே!
பழங்கதையில் கூறப்பட்ட யாழ்ப்பாணம் எங்கே?
பகுத்தறிவு மனிதா அதை நீ தொலைத்ததும் எங்கே?

த.லக்ஸ்மன், நல்லூர்

## எதிரிகள்

எதிரிகள் என்று யாருமில்லை
சகலரும் எதிரிகளான பின்பு
எதிர்ப்பவர்கள் யாவரும்– இன்று
எதிர்பார்ப்புக்களுடன் இருப்பதால்
எதிர்ப்பவர்களே எதிரிகளாகின்றனர்
எதிர்கால எதிரிகளை
எதிர்காலமே தீர்மானிக்கின்றது
எதிரிகள் நண்பர்களானதால்–புது
எதிரிகளை தேடுகின்றனர்
எதிரிகள் ஜாக்கிரதை பதாகைகள்
எதிரிகளின் வீட்டுச் சுவர்களில்
எதிரிகளின் இருப்பு தேவைப்படுகின்றது
எதிரிகளுடன் போராடுவதாக காட்டுவதற்கு
எதிரிகளால் இலாபம் தேடிய கரங்கள்
புது எதிரிகளுக்கும் இலஞ்சம் கொடுக்கின்றன
எதிரிகளின் இருப்பைத் தக்கவைக்க
எதிரிகளின் வீடுகளில் எதிர்கால திட்டங்கள்
எதிரிகள் யாரென்று தெரியாமல்
எதிரிகளாக வாழ்கின்றோம்
எதிரியின் கைகளில்
விளையாட்டுப் பொம்மைகளாக

இணுவில் வாகீசன்

கவிதைக்கலசம்

## இருள் சுமந்து

இந்த உலகம் நரகத்தில்
நாவூறிக் கிடக்கிறது
செவிப்பறைகளை கிழித்து
சிம்மாசனம் கொள்கிறது இரைச்சல்
குரோதங்களை கண்டு விழிகள்
பயத்தில் சிலிர்த்து பரிதவிக்கிறது
பொழுது அவசர விடிவு இருளில்
அந்தரப்படுகிறது
பேராசை அசைபோட்டு தவிக்கிறது
வானும்கூட நஞ்சுவூறிக் கிடக்கிறது
பாவம் பறவைகளின் பரிதவிப்பில்
இறக்கைகள் இழந்த சோகம்
காடுகளின் பசுமைகள் கரைத்து
கரியாக்கி வாழ்விடம்
சமைத்தாயிற்று
பாவம் வன ஜீவன்கள்
கடல்கள், ஆறுகள், ஏரிகள்
ஏன் குளங்களுக்கு கூட
ஆறுதல் இல்லை
இனி ஒரு சமுதாயத்திற்காய்
எச்சமிருக்கும் எல்லாமும்
பழிவாங்கப்பட்டுவிடும்
இந்த உலகம்
துவேசம் சமைத்து
ஆவேசப்படுகிறது
விசுவாசம் உள்ள மனிதர்களே
மாற்றிக்கொள்ளுங்கள்
மாற்றிக் கொள்ளுங்கள்

சி.சிறி, நெடுந்தீவு

## மௌனத்தின் தேடல்– 427



### தோளை நிமிர்த்து

மங்கை உன்னைத் தாயாக்கி
மறுமலர் நாடிய காமனை
எதிர்பார்த்து இன்னுமேன்
காத்திருக்கின்றாய்
தோளை நிமிர்த்தி எழு
ஏக்கப் பார்வையை தொலை
யார் எது சொன்னாலும்
உன் வாழ்வுக்கு வழிதேடு
உன்னோடு உன் மடி மலரின்
வாழ்வும் பிரகாசிக்கட்டும்

சி.இளங்கோ
சம்மட்டியோலை
மானிப்பாய்

### தளராதே

எங்கள் நாடும் செல்வந்த நாடே
என்று சொன்ன சோமாலியா
விளை நிலத்தை
விதவையாக்கி
உண்ண ஏதுமின்றி
களிமண் உண்டு வாழும்
நிலையின்று
உனக்கு இளைப்பாற
ஒரு மரம் உண்டு
உறுதியான மதம் உண்டு
உலகத்தின் உச்சிக்கே
உன் மகன் வருவான்
தளர்ந்திடாதே

தே.மலர்வண்ணன்
பருத்தித்துறை

### நம்பிக்கை

பொட்டிழந்தேன் பூவிழந்தேன்
என் வாழ்க்கைத் துணை இழந்தேன்
ஊரிழந்தேன் உறவிழந்தேன்
சொந்தங்கள் தானிழந்தேன்
எதுவிழந்த போதென்ன
மகனே நான்
இழக்காதது நம்பிக்கை
ஒன்றுமட்டும்தான்

பவானிதாசன்
அல்வாய்

### பரிசு

அணுவாயுத சோதனைகள்
ஆக்கிரமிப்பு யுத்தங்கள்
ஆதிக்க வெறிகள்
அனைத்தும் தந்தது
ஆபிரிக்க குழந்தைக்கு
ஆகாரமின்றிய
அவல வாழ்க்கையையே

சங்கரசிவன், ஊரி

### வறுமை

மலிந்து போன மானிடனால்
செழித்துப்போன அண்டம்
இன்று வறுமையின் பிடியில்
சிதைந்து போனது
உலர்ந்த ஏரி இவள்
துளி நீரும் உனக்கு
தர என்னால் இயலவில்லை
என் செய்வேன்

த.ஜானிகா
உரும்பிராய்
யோகபுரம்

### தாயின் தவிப்பு

பச்சிளம் குழந்தையுடன்
நடுத்தெருவில் நீர்க்கதியற்று
ஏக்கத்துடன் அலையும்
தாயின் தவிப்பு உன்னை
தட்டி எழுப்பவில்லையா?
இறைவா

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

### மீண்டும் வருவாரோ?

ஒற்றைக்காலில்
செருப்பு இல்லை என்றால்
கடையில் வாங்கி விடலாம்
காசா புயல்
கொண்டு சென்ற கணவன்
மீண்டும் வருவாரோ?

திருமதி ஜெ.விஜயலட்சுமி
சேரன் சுவையகம்,
மல்லாவி.

## இவ்வார மௌனத்தின் தேடல் –428



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி–சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

### வறுமை

வறண்டு போன
பூமியிலே
வாடிக்கிடப்பது
பயிர் மட்டுமல்ல
உனது உயிரும் தான்
உலகத்தால்
ஒதுக்கப்பட்டு
உறவுகளால்
வெறுக்கப்பட்டு
மரத்தடியில்
தஞ்சம் கொண்ட
பெண்மணியே
எதையும் அறியாத
உன் பிள்ளை
பசிபோக்க
உன்னை விட்டால்
யாருமே இங்கில்லை

கண– மகளின் புத்திரன்
அல்வாய்

### தை ணெண்ணி

மனதோடு இடரும்
மடியோடு சுடரும்
அடியோடு மரங்கீழ்
அமர்ந்ததேன்
மலைத்து நீ...?
விழித்துப் பிள்ளை
வேண்டிப் பசிக்கழ
துளிப்பாதி பாலும்
அளிக்க வழியில்லா
அம்மாவோ நான் என்ற
ஆறாத பார வலியா...?
ஈரமில்லாப் பூமியிலே
ஓரமில்லா ஏழ்மையிலே
தாரமாக்கி உன்னை
தவிக்கச் சிசுவோடு
தூரமாக நடந்தானின்
துரோகத்தின்
நீள் அசையா...?

செல்வா செல்வறமணன்




# மறக்க முடியுமா?

சிறு துமியாக தூறல் போடத் தொடங்கியிருந்த மழை மெதுவாகப் பெருத்து சோ! என்ற இரைச்சலுடன் கொட்டத் தொடங்கியிருந்தது. இருண்டிருந்த வானத்தில் கருமுகில்களின் ஆக்கிரமிப்பு குறைந்த பாடாயில்லை. வீட்டுக்குள் முடங்கியிருந்த சுகிர்தம் வாசற்கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். சூழலை அவதானித்த அவளது வாய் புலம்பத் தொடங்கியது.

ஐயையோ! மழை சோனாவாரியாய்ப் பெய்யுது. வெளியில எல்லா இடமும் கும்மிருட்டாய் மூடிக்கிடக்குது. மழை இப்போதைக்கு விடும்போல தெரியவில்லை. இந்த மனிசன் வேற லைப்றரிக்குப் போட்டுவாறன் என்று சொல்லீட்டுப் போச்சுது. எக்கணம் இந்த மழைக்குள்ளால என்னண்டு வந்து சேரப்போகுதோ...?

அங்கலாய்ப்புடன் மனம் அலட்டிக் கொள்ள வாய் பிதற்றியது. திறந்த கதவை மூடுவதற்கு மனமில்லாமல் கதவிடுக்கில் நின்றவள் தலையை மட்டும் வெளியே நீட்டியவாறு கணவனின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். கடும்மழையாதலால் தூவானம் அவளை நனைத்துக்கொண்டிருந்தது. எத்தனை நேரம் தான் காத்திருந்தாளோ... ஒருவாறு தெப்பமாக நனைந்த தோற்றத்துடன் வீடு வந்து சேர்ந்தார் பாலச்சந்திரன்.

"அப்பவும் நான் படிச்சுப் படிச்சுச் சொன்னனான். வானம் இருண்டு கிடக்குது. மழை வரப்போகுதெண்டு கேட்டியளே.

துவாயையும் மாற்றுடையையும் அவரிடம் நீட்டியவாறே அவரைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"எனக்குத் தெரியுமே... இருந்தாப்போல இப்பிடிக் கொட்டுமெண்டு"

அவரும் தன் பங்கிற்கு சமாதானம் சொல்லிக் கொண்டார். கால்முகம் கழுவி உடை மாற்றிக்கொண்டு வந்து சோபாவில் அமர்ந்தவரிடம் ஆவி பறக்கும் சுக்குக் கோப்பியை நீட்டினாள் சுகிர்தம். குளிரால் வெடவெடத்துப் போயிருந்தவர் ஆவலுடன் அதை வாங்கி பருகத் தொடங்கினார். அவருக்கு முன்னிருந்த சோபாவில் அமர்ந்து கொண்ட சுகிர்தம் ஆற்றாமையுடன் தன் மனக்கிடக்கையை வெளிப்படுத்தினாள்.

"அஞ்சு பிள்ளையளைப் பெத்து வளத்தம். இப்ப நாங்கள் இங்சை தனி மரங்களாய் இருக்கிறம். ம்! ஏக்கப் பெருமூச்சுடன் வார்த்தைகள் வெளிவந்தன.

"என்னப்பா செய்யிறது. நாங்கள் குடுத்து வைச்சது அவ்வளவுதான். அவரது குரலிலும் தனிமையின் தவிப்பு தெரிந்தது.

அடுத்தடுத்து நான்கு ஆண் பிள்ளைகளைப் பெற்றுவிட்ட அவர்கள் தவமிருந்து ஐந்தாவது பிள்ளையைப் பெண்ணாகப் பெற்றெடுத்தார்கள். பஞ்சநிதி எனப் பெயரும் இட்டு அருமை பெருமையாக வளர்த்தார்கள். அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது என்னும் முதியவர்களின் கூற்று அங்கு பொய்யாகிப் போய்விட்ட நிலையில் அந்தக் குடும்பத்தில் பஞ்சநிதி கடைக்குட்டி மட்டுமல்ல பெற்றோராலும் அண்ணன் நால்வராலும் பொழிந்து கொண்டிருந்த அன்பெனும் மழையில் மூழ்கித் திணறும் பொக்கிஷமாய்த் திகழ்ந்தாள்.

மகள் பிறந்த அதிர்ஷ்டம் இதுவரை காலமும் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த பாலச்சந்திரனுக்கு அதிபராகப் பதவியுயர்வு கிடைத்தது. அவரும் சிரத்தையுடன் தனது கடமையைத் தொடர்ந்ததுடன் மக்களையும் படிக்க வைத்தார். மூத்த மகனான பாலமுரளிக்கு பேராதனைப் பௌதீக பீடத்திற்கு அனுமதி கிடைத்தது. இரண்டு வருடக் கல்வியைப் பூர்த்தி செய்தவன் தவணை விடுமுறையைக் கழிக்கும் நோக்குடன் பேருந்தொன்றில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தான். எவரும் எதிர்பார்க்காத ஒரு அசம்பாவிதம் இடைவழியில் நடந்தேறியது.

சனசந்தடியற்ற ஒரு காட்டுப் பிரதேசத்தில் பேருந்து மறிக்கப்பட்டதுடன் அதிலிருந்த இளைஞர்கள் பலவந்தமாக கீழே இறக்கப்பட்டனர். பேருந்தை பயணத்தைத் தொடருமாறு பணிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் சரமாரியான வேட்டுச் சத்தங்கள் அங்கிருந்த காட்டு மரங்களில் மோதி எதிரொலித்தது. குற்றுயிராய் இரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களில் ஒருவனாய் பாலமுரளி.

செய்தியறிந்த பாலச்சந்திரன் குடும்பத்தினர் துடிதுடித்துப் போயினர். பாலச்சந்திரன் நடைபிணமானார். எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாக மாறும்போது ஒரு மனிதனால் எப்படி தலை நிமிர்ந்து நிற்கமுடியும். விரக்தியின் விளிம்பில் சுகிர்தம். நிலை குலைந்து போனவர்களை காலத்தின் சுழற்சி சற்றுச் சிந்திக்க வைத்தது. ஏ.எல். படித்துக் கொண்டிருந்த இரண்டாவது மகனை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். பல சிக்கலான அனுபவங்களுக்கு மத்தியில் அவன் சிட்னியில் போய் நிலையெடுக்க ஐந்து வருடங்களாகி விட்டன. அவனால் படிக்க முடியவில்லை. ஒரு கடையை எடுத்து நடத்தி வியாபாரத்தில் வேரூன்றி விட்டான்.

அவன் அத்துடன் நின்றுவிடாது தம்பிமார் இருவரையும் ஒவ்வொருவராக அழைத்து அவர்கள் படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தான். ஒருவன் கணக்காளராகவும் மற்றவன் வக்கீலாகவும் உருவெடுத்துவிட்டனர். இப்பொழுது அவர்கள் அங்கு குடும்பம் குழந்தைகளுடன் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பஞ்சநிதியை மட்டும் விட்டுப்பிரிய பெற்றோருக்கு மனம்வரவில்லை. அண்ணன்மார் அவளுக்கு அங்கேயே மாப்பிள்ளை பார்த்தபோது பாலச்சந்திரனும் சுகிர்தமும் மறுத்துவிட்டனர். உள்ளூரிலேயே பார்த்து ஒரு பொறியியலாளருக்கு அவளை மண முடித்து வைத்தனர். மருமகனான தவசீலனுக்கு வவுனியாவில் வேலை. மனைவி பஞ்சநிதியை அவன் அங்கு அழைத்துப் போய் வாழ்வதற்கு பிரியப்பட்ட போதிலும் யாழ்குடாவைப் போர் மேகங்கள் சூழ்ந்திருந்ததால் அவளைப் பெற்றோருடனேயே விட்டுவிட்டுப் போயிருந்தான். சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வீடு வந்து போவான்.

காலம் எவருடைய அனுமதிக்கும் காத்திருப்பதில்லை. அது தன்போக்கில் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது. பஞ்சநிதி கருவுற்றபோது ஒட்டுமொத்தக் குடும்பமும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்துப் போனது. நீண்ட காலத்தின் பின் அந்த வீட்டில் ஒரு குழந்தையின் வரவை எதிர்பார்த்து எல்லோரும் அகமகிழ்வுடன் காத்திருந்தனர். மாதந்தோறும் பஞ்சநிதியை மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துப் போயினர். தவசீலனும் தனக்கொரு வாரிசைப் பெற்றுக் கொடுக்கப்போகும் மனைவியின் நலன்மீது அதீத அக்கறை காட்டினான்.

மகப்பேற்றுக்கான திகதியும் நெருங்க பஞ்சநிதியின் மனத்திலும் ஒரு பயம் இயற்கையாகவே இருக்கத்தான் செய்தது. அன்று காலை முதல் இடுப்பில் நோவும் அடி வயிற்றுக்குள் துழாவுவது போன்றதொரு வலியும் இடைக்கிடை தோன்றி அவளைப் பீதியடையச் செய்தது. அம்மாவிடம் மெதுவாக விசயத்தைச் சொன்னாள்.

"பேறுக்கான நாள் கிட்டிவிட்டுது. உப்பிடியான உபாதைகள் இருக்கத்தான் செய்யும். நீ ஒண்டுக்கும் பயப்பிடாத பிள்ளை"

அம்மாவின் வார்த்தைகள் அவளை ஆற்றுப்படுத்திய போதும் இடுப்பிலிருந்து உருவாகும் வலி அவளை நிலை குலையச் செய்தது. இடுப்பைக் கைகளால் தாங்கியவாறு "ஐயோ அம்மா!" என்று முனகத் தொடங்கினாள். அவளது செய்கையை அவதானித்த சுகிர்தத்திற்கு நிலைமை ஓரளவு புரிந்தது. கணவனை வாடகைக்கார் ஒன்று பிடித்து வருமாறு பணித்துவிட்டு அவசர அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை எடுத்து வைத்தாள்.

சற்று நேரத்தில் பதற்றத்துடன் ஓடி வந்தார் பாலச்சந்திரன். "இஞ்சாரும் சுகிர்தம்! உங்கை எல்லாச் சனமும் ஊரை விட்டு வெளிக்கிட்டுப் போய்க் கொண்டிருக்குதுகள். இஞ்சை நிண்டால் ஆபத்து என்று சொல்லி மூட்டை முடிச்சுக்களோட வெளிக்கிட்டிட்டுதுகள். ஐயோ! கடவுளே நாங்கள் என்ன செய்யிறது.

தலையில் கைவைத்துக்கொண்டு புலம்பியவரைப் பார்த்து சுகிர்தம் திகைத்து நின்றாள். இப்போது என்ன செய்வது? ஏகோபித்த சிந்தனையுடன் அவர்களிருவரும் ஏங்கி நிற்க, பஞ்சநிதி மட்டும் இடையிடையே "ஐயோ அம்மா!" என்ற புலம்பலுடன் தவித்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் ஒரு குடும்பத் தலைவனாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட பாலச்சந்திரன் சுகிர்த்திடம் பல உத்தரவுகளை பிறப்பித்தார்.

பார்த்துக்கொண்டிருக்க இது நேரமில்லை. கெதியாய் நாங்கள் வெளிக்கிடவேணும். நீர் அத்தியாவசியமானதுகளை மட்டும் எடுத்து வையும்"

சொன்னதுடன் நிற்காமல் தானும் விரைந்து போய் அவளுக்கு உதவி செய்தார். மோட்டார்சைக்கிள் கரியரில் இரண்டு சூட்கேசுகள் ஒன்றன்மேல் ஒன்றாய் வைத்து கட்டப்பட்டன. முன்னாலிருந்த கூடையில் சுடுதண்ணீர் போத்தல் மற்றும் சில உணவுப் பொருட்கள். அத்துடன் இரண்டு சிறிய பைகள் வேறு. சைக்கிளின் ஹாண்டிலில் தொங்கவிடப்பட்டது. பஞ்சநிதியை மட்டும் நடக்கவிடாமல் சீற்றில் இருத்தி வைத்து மெதுவாக மோட்டார் சைக்கிளை உருட்டத் தொடங்கினார் பாலச்சந்திரன். சுகிர்தமும் கையில் ஒன்றும் தோளில் ஒன்றுமாக இரு பைகளைச் சுமந்தவாறு அவர்களுடன் நடக்கத் தொடங்கினாள்.

மனிதக் கூட்டம் ஆமை வேகத்தில் ஊர்ந்தது. இடையிடையே பஞ்சநிதியின் அலறலும் உரத்துக்கொண்டு வந்தது. மகள் அலறும்போது சைக்கிளைச் சற்று நிறுத்தி அவளை ஆசுவாசப்படுத்துவதும் பின்னர் நகருவதுமாக அவர்களது பயணம் தொடர்ந்தது. மெதுவாகப் பரவிய இருள் முற்றாகப் பூமியை கவ்விப் பிடித்துக்கொண்டது. பாதை தெரியாமலே கால் போன போக்கில் மக்களோடு மக்களாக நடந்து கொண்டிருந்தனர்.

" அம்மா! இனி என்னால தாங்க ஏலாது"

வியர்த்து விறுவிறுத்தவளை இடைவழியில் ஒரு கரையோரமாக அழைத்துப் போயினர். பாதையைவிட்டு விலகி சற்று ஒதுக்குப்புறமாக ஒரு மரத்தடியில் படுக்க வைத்தனர். அவர்களுடன் கூட வந்து கொண்டிருந்தவர்களில் மனிதநேயமுள்ள சில பெண்களும் அவர்களுக்கு உதவ முன்வந்தனர். சுகிர்தம் களைத்துப்போயிருந்த மகளுக்கு ஹோர்லிக்ஸ் கரைத்துக் கொடுத்தாள். பிரசவ வலியால் துடித்தவளுக்கு ஆறுதலாகச் சிலர் அவளைச் சூழ்ந்து கொண்டு அறிவுரை வழங்கினர். தனது ஒட்டுமொத்தச் சக்தியையும் ஒன்றுதிரட்டி ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்து விட்டாள் பஞ்சநிதி. எனினும் அளவுக்கதிகமான இரத்தப்போக்கினால் அவளது உடல் விறைத்துச் சோர்ந்துவிட்டது. செய்வதறியாது திகைத்து நின்ற அவ்வேளையில் கூட்டத்தைப் பிரித்துக்கொண்டு ஒரு இளைஞன் வந்தான். வந்தவன் பஞ்சநிதியின் நாடியைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு கையை விரித்தான். அவன் ஒரு மருத்துவபீட மாணவனாம். பெற்றோரின் புலம்பல் வானைப் பிளந்தது. அந்தச் சமயம் பார்த்து இரு குண்டுவீச்சு விமானங்கள் வானை வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இந்த மண்ணில் பிறப்பெடுக்கும் ஒரு உயிர் என்றோ ஒருநாள் இறப்பதென்பது நிச்சயிக்கப்பட்டதொன்றுதான். எனினும் அந்த இறப்பு நேரிடும் சந்தர்ப்ப சூழ்நிலைதான் இதயங்களை ஈட்டியால் குத்தி ரணத்தை ஏற்படுத்துகின்றன.

தவசீலன் கிளாலி கடற்பரப்பினூடாக சாவகச்சேரிக்கு வந்துசேர நாட்கள் பதினான்கு கடந்து விட்டது. மனைவியின் இழப்பு அவனைப் பித்தனாக்கி விட்டது. எனினும் மகளின் முகத்தில் தாயின் சாயலைக் கண்டு சிறிது மனந்தேறினான். கட்டாந்தரையில் பிறந்த தனது மகவுக்கு நிலம் என்ற பொருள் பட பிருதுவி எனப் பெயரிட்டான். அவளைத் தனது உயிராக நேசித்து வளர்த்தான். பாலச்சந்திரனும் சுகிர்தமும் அவளது வளர்ச்சியில் தங்கள் பிரிவுத் துயரை மறந்து வாழமுற்பட்டனர்.

பிருதுவிக்கு இப்போது வயது இருபத்து மூன்றாகிவிட்டது. அவள் இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவியாக பயின்று வருகிறாள். ஒரு சிறந்த மகப்பேற்று வைத்திய நிபுணராக அவளை ஆக்கிவிடவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் மூன்று நெஞ்சங்கள் முனைப்பாக இருக்கின்றன.


அன்று ஒக்டோபர் மாதம் முப்பதாம் திகதி.

அதிகாலை வேளை ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிக்கிடந்த சுகிர்தத்தை அலைபேசி மணி தட்டி எழுப்புகிறது.

"ஹலோ அம்மம்மா" என்ன எனக்கு இன்றைக்கு பேத்டே என்றதை மறந்து விட்டீங்களா? அப்பா நேரத்தோட எடுத்து விஷ் பண்ணிட்டார்" சிணுங்கினாள் பிருதிவி.

"அம்மம்மாவின் பிறந்தநாள் வாழ்த்துக்களடா பிருதுவி செல்லம். உன்னுடைய பிறந்த நாளை எங்களால மறந்துவிட முடியுமா... என்ன..."

**மலரன்னை**



# நீதி வெல்வதெப்போ...?

## விடுப்பில் வந்தான், மகிழ்ந்தோம்!

## விடைபெற்றுச் சென்றான், உடைந்தோம்!

### வழியும் கண்ணீர் விழிகளோடு காத்திருக்கிறோம்...

## அவன் விடுதலைக்கு!

"எனக்கு 71 வயசாகுது. மிகவும் சிரமத்தில இருக்கிறேன். இத்தனை வருஷமா அறவழியில் பொறுமையாப் போராடிக்கிட்டு இருக்கிறோம். இப்போ அறிவு விடுதலைக்காக நாங்க செய்ற விஷயம் எதுவும் அவனோட விடுதலையைப் பாதிச்சுடக் கூடாதுன்னு ரொம்ப கவனத்துடன் இருக்கோம். பயமா இருக்கு."


நீதி வெல்வதெப்போ...?
விடுப்பில் வந்தான், மகிழ்ந்தோம்!
விடைபெற்றுச்சென்றான், உடைந்தோம்!
வழியும் கண்ணீர் விழிகளோடு காத்திருக்கிறோம்...
அவன் விடுதலைக்கு!

மேற்கண்ட உணர்ச்சிபூர்வமான வரிகள், அற்புதம்மாளின் உதட்டிலிருந்து வரவில்லை. உள்ளக் குமுறலின் வெளிப்பாடு. மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன், முருகன், நளினி உட்பட 7 பேரின் விடுதலை தொடர்பான வழக்கில், கடந்த செப்டெம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதில், "7 பேரையும் விடுதலை செய்கிறோம். மேற்கொண்டு 7 பேர் விடுதலை தொடர்பாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கூறப்பட்டிருந்தது. இந்தத் தீர்ப்பு வெளியாகி 100 நாட்கள் கடந்துவிட்ட நிலையில், அற்புதம்மாள் நெகிழ்ச்சியோடு மேற்கண்ட வரிகளை வெளியிட்டிருந்தார்.

சிறையில் வாடும் தன் மகன் பேரறிவாளனின் விடுதலைக்காக, 27 ஆண்டுகளாகப் போராடி வருபவரை வயோதிபம் வாட்டுகிறது. ஆனாலும், அற்புதம்மாளின் போராட்ட குணம் தளரவில்லை.

இவங்க ஏன்பா இப்படிப் பண்றாங்க? இதுவரைக்கும் நடந்ததெல்லாம் போகட்டும். "7 பேரையும் விடுத்லை செய்வதாகச் சொன்ன உச்ச நீதிமன்றம், 161 ஆவது பிரிவைப் பயன்படுத்தி 7 பேரின் விடுதலை தொடர்பாக தமிழக அரசே முடிவெடுக்கலாம். அம்முடிவை ஆளுநர் ஒப்புதல் பெற்று நிறைவேற்றலாம்"னு தீர்ப்புச் சொல்லிடுச்சு. ஆட்சியாளர்கள் எங்களின் உணர்வுக்குத்தான் இதுவரை மதிப்புக் கொடுக்காம இருந்தாங்க. இப்போ, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கும், சட்டத்துக்கும் மதிப்புக் கொடுக்கலாம் அல்லவா?

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு முதலமைச்சரைச் சந்திச்சேன். "எங்க தரப்பில் 7 பேர் விடுதலைக்கு எந்த எதிர்ப்பும் இல்லை. இதுதொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஆளுநருக்கு அனுப்பியிருக்கிறோம். அவர் ஒப்புதல் கிடைத்தால் உடனே 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்"னு முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சொன்னார். "எனக்காக, என்னைப் போன்ற மற்ற ஆறு பேரின் குடும்பத்தினருக்காக, ஆளுநருக்கு நீங்க அழுத்தம் கொடுக்கலாமே"னு சட்ட அமைச்சர் சி.வி.சண்முகம்கிட்ட கேட்டேன். "சட்டத்தில் அதற்கு இடமில்லை"னு சொல்லிட்டார்.



பிறகு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தைச் சந்திச்சு, என் வேதனைகளைச் சொன்னேன். "உரிய நடவடிக்கை எடுக்கிறேன்"னு சொன்னார். பிறகு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படலை. இந்நிலையில, இந்த விஷயத்தில விரைந்து நடவடிக்கை எடுக்க ஆளுநரை வலியுறுத்தும் வகையில் போராட்டங்களை நடத்தினால், அதற்கும் தமிழக அரசு முட்டுக்கட்டை போட்டு முடக்கப் பார்க்குறாங்க. 7 பேரின் விடுதலை உட்பட பல வழக்குகள் ஆளுநரின் ஒப்புதலுக்குக் காத்திருக்கு. அதனால, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு வழக்குக்கும் ஒரு கால வரையறை இருக்கணும். அப்போதான் விரைவில் உரிய நடவடிக்கை கிடைக்கும். இதற்கு என் பிள்ளையின் வழக்கு முக்கியமான உதாரணம்.

2013 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, "7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவெடுத்திருக்கு"னு தைரியமா குரல் கொடுத்தாங்க. ஒருவேளை ஜெயலலிதா இப்போ உயிரோடு இருந்திருந்தால், நிச்சயம் 7 பேரையும் விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுத்திருப்பாங்க. ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்திருப்பாங்க. என் பிள்ளை வெளிய வரணும். அதுக்காக மேற்கொண்டு என்ன செய்யணும்னு ஒண்ணுமே புரியலை. உடம்பு ரொம்பச் சோர்வாகிட்டே இருக்கு. அறிவுக்கு 47 வயசாகிடுச்சு. அவனுக்கு உடல்நிலை சரியில்லை. இந்நிலையில் அவன் சிறையிலிருக்கும் ஒவ்வொரு நாளும், அவனுடைய உடல்நிலை மேலும் மோசமாகும். இந்த வருஷமாவது என் பிள்ளை சிறையிலிருந்து வெளிய வந்துடுவான்னு நினைச்சேன். ஆனா, 2018 ஆம் ஆண்டு முடியப்போகுது. வர்ற பொங்கல் பண்டிகைக்குள்ளாவது என் பிள்ளை வெளிய வந்துடணும். எங்க வாழ்க்கையில 28 வருஷத்துக்குப் பிறகு, அவனுடன் சேர்ந்து ஒரு பண்டிகையைக் கொண்டாடணும்னு தவிப்பில் இருக்கேன்" என்கிறார் உருக்கமாக.

"மனசாட்சிக்கு உட்பட்டு, இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கணும்னு நினைச்சிருந்தா மத்திய, மாநில அரசுகள் எப்போதே நடவடிக்கை எடுத்திருப்பாங்க. அதைவிட இந்த வழக்கில் பல அவிழ்க்கப்படாத முடிச்சுகள் இருக்கு. இந்த வழக்கைவெச்சு பெரிய அரசியலே நடந்துக்கிட்டு இருக்கு. இதுவே ஒரு பிரபல மான அரசியல்வாதி தப்பே பண் ணியிருந்தாலும், அவர் மட்டும் பிணையில் அல்லது விடுதலையாகி சீக்கிரம் வெளியே வந்திடுறாரே...அது எப் படி? அப்போ இங்க எல்லோருக்கும் ஒரே நீதி இல்லைத்தானே? யார் வீட்டுப் பிள்ளையை வைச்சுக்கிட்டு அரசியல் பண்றாங்க? என் பிள்ளைப்பா! ஒரு தாயா இருந்து பார்த்தால் தான் என் வலி புரியும். அரசியல் வாதிகளுக்குச் சொல்றேன் ... என் பிள்ளையைப்போல உங்க பிள்ளை தப்பே பண்ணாம சிறையில 27 வருஷமா இருந்திருந்தால்தான், என் வலி உங்களுக்குப் புரியும். "தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி"னு சொல்வது என்பிள்ளை விஷயத்தில் உண்மையாகிடுச்சு. என்ன தான் செய்யிறது? எங்களுக்கான நீதியை யார் பெற்றுத்தருவது? ஆனாலும் நம்பிக்கை இழக்காமல் காத்துக்கிட்டிருக்கேன்.

இப்போ சென்னை வண்டலூர்ல தங்கியிருக்கிறேன். எனக்கு 71 வயசாகுது. மிகவும் சிரம த்தில இருக்கிறேன். இத் தனை வருஷமா அற வழி யில் பொறுமையாப் போராடிக்கிட்டு இருக்கிறோம். இப்போ அறிவு விடுதலைக்காக நாங்க செய்யிற விஷயம் எதுவும், அவனோட விடுத லையைப் பாதிச்சிடக் கூடா துன்னு ரொம்ப கவனத்துடன் இருக்கோம். பயமா இருக்கு.

அறிவு வேலூர் சிறையில் இருந்தவரை வாரம்தோறும் அவனைப் பார்த்திடுவேன். இப்போ அவனைப் புழல் சிறைக்கு மாற்றின பிறகு அவனை மூணு வாரத்துக்கு ஒருமுறைதான் சந்திக்க முடியுது. அதுவும் காலையில 10 மணி முதல் 12 மணிவரைதான் அனுமதிக் கடிதம் வாங்கு றாங்க. நிறையக் கூட்டம் இருக்கும். எல் லோருக்கும் ஒரே வரிசைதான். அதுவும் நிறையக் கெடுபிடிகள் இருப்பதால், கொஞ்ச நேரம்தான் மகனுடன் பேச முடியுது. இப்படிச் சிரமப்படுறதால, என் உடல்நிலை ரொம்ப சோர்வாகுது. அதனால, "நீங்க ரொம்ப சிரமப் படாதீங்க. நான் சொல் லியனுப்பும் போது மட்டும் வாங்க"னு சொல்றான். எப்படியாச்சும் என் பிள்ளையை சீக்கிரம் எங்கிட்ட கொடுத்துடுங்கப்பா...எல்லோருக் கும் கோடிப் புண்ணியமாப் போகும்!" - கண்ணீருடன் வேண்டுகோள் விடுக்கிறார் அற்புதம்மாள்.

அற்புதம்மாளின் அழுகை, ஆட்சியாளர்களின் செவிக்குக் கேட்குமா?

(ஜூனியர் விகடன்)

# நீங்கள் அதிகநேரம் தூங்குபவர்களா?

இரவில் 8 மணி நேரத்துக்கு மேல் தூங்குபவர்களுக்கு இருதய நோய் வரக்கூடும் என்ற அதிர்ச்சித் தகவல் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.


மனிதன் குறைந்தது ஒரு நாளைக்கு 8 மணிநேரம் தூங்க வேண்டும். இல்லையேல் உடல் அசதி, சோர்வு ஆகிய உடல் உபாதைகள் நேரும். ஆனால், அதையே பழக்கமாக வைத்து 8 மணி நேரத்துக்கு மேல் தூங்கக்கூடாது.

அதிகநேரம் தூங்கினால் மூளை வேலை செய்யாது, சோர்வாக இருக்கும். அதிகநேரம் தூங்குபவர்கள், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர் என்று ஆய்வு கூறுகிறது. அதிகநேரம் தூங்குவதனால் மன அழுத்தம் உடையவர்களுக்கு தூக்கம் ஒரு நல்ல மருந்தாக அமைகிறது.

குறைந்தது 8 மணி நேரமாவது ஒரு மனிதன் தூங்க வேண்டும், அதிலும் இரவில் தான் தூங்க வேண்டும். காரணம், அச்சமயம் மூளை, இதயம் ஆகியவற்றின் செயற்பாடானது குறைவாகவே இருக்கும்.

அதேசமயம் 8 மணி நேரத்துக்கு மேல் தூங்கினால் இருதய நோய் பாதிப்பு ஏற்படும். 41 சதவிகிதம் இறப்பு நேர்வதற்கான அபாயமும் உள்ளது. நன்கு தூங்கினால் தான் காலை எழும்போது மூளை, இருதயம் புத்துணர்ச்சியாக இருக்கும். நாம் எந்த வேலை செய்தாலும் மனதும் புத்துணர்ச்சியாக இருக்கும்.

அதிகநேரம் தூங்கவும் கூடாது, குறைவான நேரமும் தூங்கக் கூடாது. சரியான அளவு தூக்கம் தான் உடலையும், மனதையும் புத்துணர்ச்சியாக வைத்திருக்கும்.



பெண்கள் அதிகநேரம் தூங்குவதனால் கருத்தரிப்பு குறைவாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதனால் தான் மாதவிடாய் சுழற்சி, ஓமோன்கள் சுரப்பதில் மாற்றம் ஏற்படுகிறது.

அதேபோல் உடல் எடையும் அதிகம் உணவு உட்கொள்வதால் ஏற்படுவதில்லை. அதிகநேரம் தூங்குவதனால் ஏற்படுகிறது. இதனால் உடல் எடை 21 சதவிகிதம் அதிகமாகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அதிக தூக்கம் இறப்பை சந்திக்கும். தொடர்ந்து அதிகநேரம் தூங்குபவர்களுக்கு ஆயுட் காலம் குறைவுதான் என்று ஆய்வின் முடிவு கூறுகிறது.




"அந்தப் யாசகன் புத்திசாலின்னு எப்படிச் சொல்றே?"

"சில்லறை இல்லைன்னு யாரும் சொல்லிடக் கூடாதுன்னு, "எவ்வளவு ரூபாய்க்குச் சில்லறை வேணும்"னுதான் முதல்ல கேட்பான்!"

## இது நம்ம கதைகள்... 30

# இறை தரிசனம்



நாளை நல்லிரவு கிறிஸ்மஸ் பிறக்கிறது. இறைவனின் திருமகன் இயேசுக் கிறிஸ்து மனுக்குலத்தைக் காக்க மனிதனாக அவதரித்த திருநாள் கிறிஸ்மஸ்.

கிறிஸ்து பிறந்த தருணத்தில் வால்நட்சத்திரமொன்று தோன்றியது. அது மகான்கள் தோன்றும் போது நிகழும் அற்புத அறிகுறியென்றும், அதனை சரியாக கணித்து அதன் வழிகாட்டலில் கீழ்த் திசை ஞானிகள் மூவர் பயணித்து யூதேயாவின் (தற்போதைய இஸ்ரயேல்- பாலஸ்தீனம்) பெத்தலகேமில் பிறந்த பாலகன் இயேசுவைத் தரிசித்து விலையுயர்ந்த அன்பளிப்புக்களை காணிக்கையாக்கினர் என்றும் திருவிவிலியம் கூறுகின்றது.


பேர்சியாவைச் (தற்போது ஈரான்) சேர்ந்த மெல்கியோர், இந்திய உப கண்டத்தைச் சேர்ந்த கஸ்பார், ஆபிரிக்காவைச் (பெரும்பாலும் எகிப்து) சேர்ந்த பல்தசார் ஆகியோரே வானசாஸ்திர வல்லுநர்களாகிய இந்த மூன்று ஞானிகள்.

இந்த மூன்று ஞானிகளைப் போல் இன்னுமொரு ஞானியும் குழந்தை இயேசுவைச் சந்திப்பதற்காக இரத்தினம், மாணிக்கம், மரகதம் என்னும் மூன்று விலையுயர்ந்த கற்களை அன்பளிப்பாக எடுத்துச் சென்றார் என்றும், ஆனால் அவர் அப் பயணத்தில் சந்தித்த சில எதிர்பாராத சம்பவங்களால் இயேசுவை அவரால் சந்திக்க முடியவில்லை என்று வாய்மொழி நாடோடிக் கதையொன்றுண்டு. இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் ஒல்லாந்து எழுத்தாளர் வன்டொற் என்பவர் இந்தக் கதையை எழுத்தில் வடித்தார்.

அந்த மற்றொரு ஞானியும் வால் வெள்ளியின் குறிப்புணர்ந்து இயேசுவை சந்திக்க ஆவலோடு பயணித்தார். வழியில் கொள்ளையர்களால் தாக்குண்டு குற்றுயிராகக் கிடந்த மனிதனொருவனைக் கண்டார். அவனை அப்படியே விட்டுச்செல்ல அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்தார். அங்குள்ள மருத்துவரிடம் இயேசுவுக்காக எடுத்துச் சென்ற இரத்தினக்கல்லை காயப்பட்ட மனிதனை பராமரிப்பதற்கான செலவுக்காக கொடுத்துவிட்டு இயேசுவைக் காண பயணத்தை மீளவும் தொடர்ந்தார்.

அவர் பெத்தலகேமை அடைந்தார். ஆனால் அங்கே யூதேயாவின் சிற்றரசனாகிய ஏரோது என்பவன் இயேசுவின் பிறப்பு தன் அரியாசனத்திற்கு அச்சுறுத்தலென ஜோதிடர்கள் வாயிலாக அறிந்து அஞ்சினான். தனக்கு சவாலாக வரக்கூடிய இயேசுவை கொல்லும் பொருட்டு புதிதாகப் பிறந்த ஆண் குழந்தைகள் அனைவரையும் கொல்லும்படி படைவீரர்களை அனுப்பினான். ஆயினும் வானதூதர்களின் வழிநடத்தலில் குழந்தை இயேசுவை அன்னை மரியாளும், அவள் பத்தா சூசையும் அங்கிருந்து வேறிடத்திற்கு பாதுகாப்பாக கூட்டிச் சென்றிருந்தனர்.

ஏரோதின் படைகள் பெத்தலகேமை முற்றுகையிட்டு பிறந்திருக்கும் ஆண் குழந்தைகளை கொன்றனர். அழுகையும், அலறலும் அங்கு நிறைந்தது. இயேசு பிறந்திருக்குமிடத்தை தேடிக் கொண்டிருந்த நம் ஞானி முன் தாயொருவள் தன் குழந்தையுடன் ஓடிவந்து மண்டியிடுகிறாள். தன் குழந்தையைக் காப்பாற்றுமாறு வேண்டுகின்றாள். அவளை விரட்டிவரும் படைவீரனிடம் தன்னிடமுள்ள மாணிக்கக்கல்லை இலஞ்சமாகக் கொடுத்து குழந்தையை ஊறுவிளையாமல் பாதுகாக்கிறார் ஞானி.



இயேசுவைத் தேடிய அவர் பயணமும் தொடர்கிறது. ஒவ்வொரு இடத்திற்கும் அவர் செல்லும் போதும், அங்கிருந்து சற்று முன்னர் தான் இயேசு வேறிடத்திற்கு நகர்ந்திருப்பதையறிகிறார். ஆயினும் இயேசுவை நாடி - தேடி சளைக்காது பின்தொடர்கிறார். அவரது தேடல் 33 வருடங்களாகத் தொடர்கிறது. ஞானி முதுமையாலும், நோயாலும் வாடுகிறார்.

இறுதியாக யூத மதகுருக்கள் சுமத்திய குற்றச்சாட்டின் நிமித்தம் ரோம ஆளுநன் பிலாத்து இயேசுவை சிலுவை மரணத்திற்கு தீர்ப்பிட்டிருப்பதை அறிகிறார். அந்த நேரத்திலாவது இயேசுவை முகம்முகமாக சந்தித்து விட வேண்டுமென்ற ஆவலுடன் இயேசு சிலுவை சுமந்து வரும் பாதையில் காத்திருக்கிறார் ஞானி.

அந்தவேளையில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாது இறந்து போகும் மனிதனொருவனின் கடன் தொகைக்காக சிறுவனான அவன் மகனை அடிமையாக இழுத்துச் செல்கின்றனர். அந்தச் சிறுவனின் பரிதாப நிலைகண்டு மனமிரங்கும் ஞானி தன்னிடம் இறுதியாக எஞ்சியுள்ள மரகதக் கல்லை அவனின் விடுதலைக்கான பெறுமதியாகச் செலுத்தி அவனை அடிமைத்தனத்திலிருந்து மீட்கிறார். இயேசுவுக்கான அவரது அன்பளிப்புப் பொருட்களெல்லாம் துயருற்ற மனிதரின் துயர் நீங்க பயன்படுத்தப்படுகிறது. இறுதியில் இயேசுவை சந்திக்காமலே தன் முதுமை, சோர்வு காரணமாக வீதியில் மயங்கிச் சரிந்து மரணிக்கிறார் ஞானி.

இயேசுவை அவர் நேரில் சந்திக்காவிட்டாலும் "சின்னஞ் சிறிய சகோதரர்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கேற்ப, அந்த ஞானி பிறருக்காகவே தன் வாழ்வை ஈந்து இயேசுவாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்பதே உயிரற்ற அவர் உடல் உணர்த்திட்ட உண்மை.

**இறை தரிசனத்திற்காக ஆண்டாண்டு காலமாகத் தவமிருப்பதை விட,**
**எமக்கு அடுத்திருக்கும் அயலவரில் இறைவனைக் காண்பதே மேலானது**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# இலங்கையுடனான சீனாவின் உறவு யாழ்ப்பாணம் மிக முக்கியமானது

## தொல்பொருள் ஆய்வாளர் சென் ஜீயுடன்

புராதான பட்டுப் பாதையுடன் தொடர்புபட்ட விடயங்களை இலங்கையில் ஆய்வு செய்யும் பணியை சீனாவிலுள்ள ஷங்காய் அருங்காட்சியகத்தைச் சேர்ந்த தொல்பொருளியலாளர்கள் அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளுடனான தொடர்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் தனது புராதன பட்டுப்பாதையை அடிப்படையாகக் கொண்டு சீனாவினால் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது இவ்வாறான தொல்பொருள் ஆய்வுகளும் இடம்பெற்றன.

இந்த வகையில் சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்துடன் தொடர்புபட்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்றாக இருப்பதால் சீனாவின் ஷங்காய் அருங்காட்சியக தொல்பொருளியலாளர்கள் அண்மையில் சிறிலங்காவில் தமது தொல்பொருள் ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

ஐந்து பேரைக் கொண்ட இத்தொல் பொருளியில் குழுவின் தலைவரான சென் ஜீயுடன் டெய்லி மிரர் நாளிதழுக்கு அளித்த செவ்வியில், புராதன பட்டுப்பாதையில் இலங்கையின் அமைவிடம் எத்தகையது என்பது தொடர்பாகவும் அண்மையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருளியல் ஆய்வு மற்றும் அதன் போது கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சென் ஜீ பகிர்ந்து கொண்டார். அதன் விபரம் வருமாறு:

**கேள்வி: புராதன பட்டுப்பாதையில் இலங்கையின் அமைவிடம் தொடர்பாக தங்களின் கருத்து எதுவாக உள்ளது?**

பதில்: கரையோர பட்டுப்பாதையானது சீன கரையோர துறைமுகங்களிலிருந்து ஆரம்பமாகிறது. அதாவது தென்கிழக்காசிய நாடுகளின் ஊடாக இந்திய மாக்கடல், செங்கடல், ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா வரை இப்பாதை விரிந்து காணப்படுகிறது. வர்த்தக, கலாசார பரிமாற்றங்கள் மற்றும் பட்டுப்பாதையிலுள்ள நாடுகளின் அபிவிருத்தியை அதிகரித்தல் போன்றவற்றுக்கான ஒரு அனைத்துகை வலைப்பின்னலாக இப்பட்டுப்பாதை நிர்மாணிக்கப்பட்டது.

இந்திய மாக்கடலின் மையத்திலும் கிழக்கு மற்றும் மேற்குகை கடல்வழிப் பாதையின் மையத்திலும் இலங்கை அமைந்துள்ளதால் இது கடல்வழி வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றியுள்ளது. இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான தொடர்புகள் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். 5ம் நூற்றாண்டில் சீனாவின் பிரபல பிக்குவான பா சியான் பௌத்தத்தைக் கற்பதற்காக இலங்கையில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார்.

ஆறாம்நூற்றாண்டுதொடக்கம் இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பரிமாற்றங்கள் மேலும் அதிகரித்தன. குறிப்பாக 15ம் நூற்றாண்டில், ஜெங் கீ என்பவர் கடல்வழியாக மேற்கொண்ட பயணத்தின் போது இலங்கையின் பல இடங்களில் தங்கியிருந்தார். இவ்விரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் தமது வர்த்தகத் தொடர்பை மேலும் விரிவுபடுத்தியதுடன் தமக்கிடையிலான நட்புறவையும் பலப்படுத்தியுள்ளனர்.

1911இல் காலியில் கண்டுபிடிக்கப்பட்ட மும்மொழி கல்வெட்டானது சீனாவிற்கும்







இலங்கைக்கும் இடையிலான தொடர்பாடல் வலுப்பெற்றிருந்தமைக்கான முக்கிய சான்றாக அமைந்தது.

2018 தொடக்கம், மத்திய கலாசார நிதி மற்றும் ஷங்காய் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பின் ஊடாக சீனோ-லங்கா தொல்பொருளியல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ஊடான கரையோர பட்டுப்பாதைத் திட்டத்துடன் தொடர்புபட்ட இடங்கள் மற்றும் அழிவுகளை ஆய்வு மற்றும் அகழ்வு செய்வதன் ஊடாக பல்வேறு நாடுகள் மத்தியில் பரிமாறப்பட்ட பொருளாதார, கலாசார, மத பரிமாற்றங்களை கண்டுபிடிக்கும் பணியில் கூட்டு தொல்பொருளியல் குழு ஈடுபட்டு வருகிறது.

**கேள்வி: அகழ்வாராய்ச்சியின் போது நீங்கள் எவற்றை கண்டுபிடித்தீர்கள்?**

பதில்: இவ்வாண்டு ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில், சீனோ-லங்கா தொல்பொருளியில் குழுவானது தனது முதலாவது அகழ்வாராய்ச்சி பணியை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டது. ஊர்காவற்றுறை கோட்டைக்குள் பரீட்சார்த்த அகழி ஒன்றை அகழ்ந்த போது, ஊர்காவற்றுறையிலுள்ள அல்லைப்பிட்டியில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது குறிப்பாக அல்லைப்பிட்டியில் அகழ்வை மேற்கொண்ட பின்னர் பல முக்கிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த அகழ்வாராய்ச்சியின் போது சீனர்களுக்குச் சொந்தமான பல பீங்கான் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் வர்த்தக தொடர்புகள் இடம்பெற்றன என்பதற்கான முக்கிய சான்றாக உள்ளது. சீனாவிற்குச் சொந்தமான பொருட்கள் 11ம் நூற்றாண்டின் இரண்டாம் அரை நூற்றாண்டிற்கும் 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதை காணமுடியும்.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சீன தொல்பொருட்களில் பெரும்பாலானவை சீனாவின் குவாங்டொங் மற்றும் பியூஜியன் மாகாணங்களின் கரையோரங்களில் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும்.

இவற்றுள் இனங்காணப்பட்ட தொல்பொருட்களுள் பெரும்பாலானவை குவாங்டொங்கிலுள்ள சயோசௌ மற்றும் ஜிகுன் கில்ன்ஸ் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் சில வடசீனாவின் ஜவோசௌவ்வில் உற்பத்தி செய்யப்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அகழப்பட்ட சீனாவிற்குச் சொந்தமான தொல்பொருட்கள், இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான கரையோரப் பாதைகள் மற்றும் வர்த்தக வலைப்பின்னலை ஆய்வு செய்வதற்கு நிச்சயம் உதவும்.

**கேள்வி: நீங்கள் யாழ்ப்பாணத்தில் பணியை மேற்கொண்டமைக்கான விசேட காரணம் என்ன?**

பதில்: யாழ்ப்பாணம், வட இலங்கையின் முக்கிய துறைமுகமாகக் காணப்படுகிறது. இது இந்தியத் துணைக்கண்டத்திற்கு மிக அருகிலுள்ளதுடன் புராதன கடல் பாதைகளுக்கான மைய அமைவிடத்தையும் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட பீங்கான்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆகவே கடந்த கால சீன-இலங்கை உறவை விளங்கிக் கொள்வதற்கு யாழ்ப்பாணம் மிக முக்கிய இடமாக நோக்கப்படுகிறது.

**கேள்வி: தொல்பொருள் சான்றுகளை பாதுகாப்பதற்கு இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் எவ்வாறு ஒத்துழைப்பை வழங்க முடியும்?**

பதில்: கலாசார சான்று என்பது புராதன காலத்தில் வாழ்ந்த மனிதர்களால் விட்டுச் செல்லப்பட்ட வரலாற்று பொக்கிசமாகும். புராதன மனித நாகரீகங்களின் உள்ளக உறவுகளை விளங்கிக் கொள்வதற்கு இவ்வாறான வரலாற்றுச் சான்றுகள் முக்கிய மூலவளங்களாக உள்ளன. இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் மிக்க விழுமியங்களை ஆய்வின் மூலம் அடையாளம் காண்பது முதன்மையானதாகும்.

நகரக் கட்டுமானம் மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக கலாசார சான்றுகள் பல மோசமான ஆபத்திற்கு உள்ளாகியுள்ளன. இவ்வாறான சான்றுகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்தாவிட்டால், நாங்கள் அவற்றை இழந்து விடுவோம். அத்துடன் எமது வரலாற்றுச் சான்றுகளும் முற்றாக அழிந்து விடும். ஆகவே, நாம் அனைவரும் இவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

அண்மைய ஆண்டுகளில், கலாசார தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கான அனுபவங்களை சீனா அதிகம் பெற்றுள்ளது. இது சாத்தியமானால், இவ்விரு நாடுகளும் இணைந்து கலாசார சான்றுகளைப் பாதுகாப்பதற்கும் புராதான மனித நாகரீக சான்றுகளைப் பாதுகாப்பதற்குமான அருங்காட்சியகத்தைப் பேணவேண்டும்.

**கேள்வி: தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேறு இடங்கள் எவை?**

பதில்: இலங்கையானது பல்வேறு முக்கிய துறைமுகங்களைக் கொண்ட ஒரு தீவாகும். இங்கு சீனாவின் பட்டுப்பாதையுடன் தொடர்புபட்ட பல எச்சங்கள் காணப்படுகின்றன. கரையோர பட்டுப் பாதையின் எண்ண்க்கரு தொடர்பாக கூட்டு தொல்பொருளியல் குழு ஆராய்வதுடன் தொடர்புபட்ட துறைமுகப் பிரதேசங்களில் தொல்பொருள் விசாரணைகள் மற்றும் அகழ்வுகளிலும் ஈடுபடும். யாழ்ப்பாணத்துடன் திருகோணமலை மற்றும் காலி போன்ற துறைமுகப் பகுதிகளும் எதிர்காலத்தில் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்படலாம்.

**கேள்வி:- இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான பௌத்த தொடர்புகளை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில்: இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான தொடர்பானது 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். இந்த உண்மையானது இலக்கியப் பதிவுகள் மூலம் மட்டுமல்லாது, தொல்பொருளியல் சான்றுகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் துறைமுகங்களில் மட்டுமல்லாது, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை போன்ற நகரங்களிலும் சீனர்களுக்குச் சொந்தமான பீங்கான் பாத்திரங்கள், நாணயங்கள் மற்றும் கலாசார சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சான்றுகள், புராதான கரையோர பட்டுப்பாதை வர்த்தகத்தில் சீன உற்பத்திப் பொருட்கள் மிகவும் பிரபலமான உற்பத்திப் பொருட்களாகக் காணப்பட்டன என்பதை அல்லது சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவானது புராதன காலத்தில் கட்டியெழுப்பப் பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

புராதன காலந்தொட்டு இலங்கையின் பௌத்த பாரம்பரியமானது சீன மத எண்ணக்கருக்கள் மீது தாக்கம் செலுத்தியது என்பதை நீண்ட கால வரலாற்று பரிமாற்றங்கள் மூலம் உறுதிப்படுத்தலாம். இலக்கியத்தின் மூலம் பா-ஜியன் என்கின்ற சீன பௌத்தர் போன்று பல பௌத்தர்கள் சீனாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அத்துடன் பௌத்த மதத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை தனது மக்களை சீனாவிற்கு அனுப்பியுள்ளது.

செவ்வி : Kelum Bandara
வழிமூலம் : dailymirror
மொழியாக்கம் : நித்தியபாரதி

# ஐ.பி.எல் 2019 ஏலம்

# 1,003 வீரர்களில் 346 பேர் தெரிவு

## இறுதியாக இருக்கும் 70 பேர் யார்?

2000ஆம் ஆண்டிற்கு பிறகு இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் 20 ஓவர் பார்மேட் போன்ற சில புது பார்மேட் போட்டிகள் அவ்வப்போது நடைபெற்று வந்தன. இருப்பினும், 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற இருபது-20 உலகக்கோப்பை மற்றும் 2008இல் இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல்.போட்டிகளுக்கு பிறகுதான் உலகம் முழுவதும பிரபலமாகியது இருபது-20 போட்டிகள்.

பெரும்பாலான கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் உள்ளூர் இருபது-20 போட்டிகள் நடைபெற்றாலும், இந்தியாவல் நடைபெறும் இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளுக்குதான் உலகம் முழுவதும் மவுசு அதிகம். இந்த ஐ.பி.எல். போட்டிகளுக்காக சர்வதேச தொடர்களின் அட்டவணைகூட சில சமயம் மாற்றி அமைக்கப்படும். அந்த அளவுக்கு உலக கிரிக்கெட்டில் தனக்கென ஒரு தனி இடம் கொண்டுள்ளது ஐ.பி.எல். போட்டிகள்.

2008 முதல் 2018ஆம் ஆண்டு வரை ஐ.பி.எல்லில் 11 சீசன்கள் முடிந்துள்ளன. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆவது சீசன் ஐ.பி.எல். போட்டிகள் நடைபெற உள்ளன. அதற்கான ஏலம் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றன. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பிற்பகல் 2.30 மணிக்கு ஏலம் தொடங்கியது.

கடந்த வருடம் நடந்த ஐ.பி.எல். ஏலத்தில் சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு பெரிய அறிமுகம் இல்லாத சுபுமான் கில், இஷான் கிஷான், ஜோஃப்ரா ஆர்ச்சர் உள்ளிட்ட வீரர்கள் அதிக விலைக்கு வாங்கப்பட்டனர். அதே சமயம் லசித் மலிங்க போன்ற அதிக பிரபலமான வீரர்கள் எந்த அணியாலும் வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.பி.எல். போட்டிகளில் நடைபெறும் ஆச்சரியங்களை போலவே ஏலத்திலும் பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

1,003 வீரர்கள் ஐ.பி.எல். ஏலத்தில் கலந்துகொள்ள விண்ணப்பம் செய்த நிலையில், 346 வீரர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 227 பேர் இந்திய வீரர்கள்.



### மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள்

ஷிமிரன் ஹெட்மீர் இந்த முறை அதிகம் எதிர்பார்க்கப்படும் வீரர். சிறந்த ஹிட்டர் மற்றும் கீப்பர். இந்திய சுற்றுப்பயணம், கரிபியன் பிரிமியர் லக் தொடர், உள்ளூர் இருபது-20 போட்டிகள் என அண்மையில் இவருடைய அதிரடி ஆட்டங்கள் அனைத்து ஐ.பி.எல். அணிகளின் கவனத்தையும் ஈர்த்தது.

ஓஷேன் தாமஸ், நிக்கோலா புரன், ஷெர்பேன் ரதர்ஃபோர்ட் ஆகிய மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களும் இருபது-20க்கு ஏற்ற வீரர்கள். இவர்களுடைய ஆதிக்கம் ஐ.பி.எல். ஏலத்தில் இருக்கும்.

### ஆப்கானிஸ்தான் வீரர்கள்

ஹஸ்ரதல்லாஹ் ஜஜாய் ஆறு பந்தில் ஆறு சிக்ஸர் அடித்து அசத்தியவர். ஆப்கானிஸ்தான் பிரிமியர் லீக் மற்றும் 10 ஓவர் போட்டிகளில் கலக்கியவர். எனவே, இவரும் முன்னணி வீரர் முஹம்மது சசாத்தும் ஆப்கானிஸ்தான் அணி வீரர்களில் கவனத்தை அதிகம் ஈர்த்தவர்கள். பந்து வீச்சாளர் ஜாகிர்கானும் கவனிக்கத்தக்கவர்.

### தென்னாபிரிக்க வீரர்கள்

ஹார்டஸ் விலோஜென் அண்மையில் நடைபெற்ற 10 ஓவர் போட்டிகள் மற்றும் தென்னாபிரிக்காவின் உள்ளூர் இருபது-20 போட்டிகளில் தனது சகலதுறையின் செயற்பாடு மூலம் பிரபலம் ஆகியுள்ளார்.

ரீஸா ஹெண்டிரிக்ஸ் தென்னாரிக்காவின் உள்ளூர் இருபது-20 போட்டிகளில் எட்டு இன்னிங்ஸ்களில் 379 ஓட்டங்கள், சராசரி 60, ஸ்ட்ரைக்ரேட் 150. நிறைய அணிகள் எதிர்பார்க்கும் வீரர்.

ஹெய்ன்ரிக் க்ளாசென் மிடில் ஓடர் துடுப்பாட்ட வீரர் மறறும் விக்கெட் கீப்பர் தேவைப்படும் அணிக்கு தகுந்த வீரர். ஸ்பின் பந்துகளை விளாசுவதில் வல்லவர்.

காலின் இங்கிராம்: உள்ளூர் இருபது-20 போட்டிகளில் சிறப்பாக விளையாடியவர். மேலும், அனுபவம் வாய்ந்த வீரர்.

### அவுஸ்திரேலியா வீரர்கள

இருபது-20 ஸ்பெஷலிஸ்ட் டி"ஆர்சி ஷார்ட், தற்போது அவுஸ்திரேலியாவின் சிறந்த துடுப்பாட்ட வீராக வலம்வரும் கவாஜா, சகலதுறை வீரர் மோசிஸ் ஹென்றிக்குஸ் ஆகியோர் அதிக தொகைக்கு செல்லக்கூடிய திறன் படைத்தவர்கள்.

ஆடம் ஜம்பா, ஷான் மார்ஸ், பென் லாப்ளின் உள்ளிட்டோரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

### இந்திய அணி வீரர்கள

அக்சர் படேல், சஹா, ஜெயதேவ் உனட்கட், முஹமது சமி ஆகியோர் அதிகம் எதிர்பார்க்கப்படும் வீரர்கள். ராஜ்னிஷ் குர்பானி, ஷிபம் துபே மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகிய இளம் உள்ளூர் வீரர்களின் விலை ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

யுவராஜ் சிங், மனோஜ் திவாரி, இஷாந்த் ஷர்மா, வருன் ஆரோன் ஆகிய முன்னணி இந்திய வீரர்களும் ஏலத்தில் உள்ளனர்.

மெக்கல்லம், ஸ்டெய்ன், மலிங்கா, மோர்னே மோர்கல் போன்ற சர்வதேச பிரபலங்களும் இருக்கின்றனர். ஆனால், இவர்கள் எந்தளவு ஐ.பி.எல். அணிகளின் கவனத்தை பெறுவார்கள் என்பது கேள்விக்குறிதான்.

சாம் குர்ரான் போன்ற இங்கிலாந்து வீரர்கள் அதிகம் எதிர்பார்க்கப்பட்டாலும் அவர்கள் ஐ.பி.எல்லின் இறுதிக்கட்டங்களில் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க மாட்டார்கள் என்பதால் ஐ.பி.எல். அணிகள் இங்கிலாந்து வீரர்களை ஏலத்தில் எடுக்க தயங்கும்.


பிரண்டன் மெக்கல்லம், கிறிஸ் வோக்ஸ், லசித் மலிங்க, ஷான் மார்ஷ், காலின் இங்கிராம், கோரி ஆண்டர்சன், ஏஞ்சலோ மத்யூஸ், சாம் குர்ரான் மற்றும் டி ஆர்சி ஷார்ட் ஆகியோர் தனது அடிப்படை விலையாக 2 கோடி ரூபாயாக நிர்ணயம் செய்துள்ளனர். இருப்பினும், எந்த இந்திய கிரிக்கெட் வீரரும் 2 கோடி ரூபாய்க்கு மேல் அடிப்படை விலை வைக்கவில்லை.

இந்திய வீரர்களில் ஜெய்தேவ் உனட்கட் அதிகபட்சமாக 1.5 கோடியை அடிப்படை விலையாக வைத்துள்ளார். யுவராஜ் சிங் மற்றும் அக்சர் படேல், சஹா, முகம்மது சமி ஆகியோர் ரூபாய் ஒரு கோடியை அடிப்படை விலையாகவும், இஷாந்த் சர்மா, நமன் ஓஜா 75 இலட்சம் ரூபாயை அடிப்படை விலையாகவும், புஜாரா, மனோஜ் திவாரி, ஹனுமா விஹாரி, குர்கீரத் சிங், மோகித சர்மா ஆகியோர் தங்களது அடிப்படை விலையாக 50 இலட்சம் ரூபாயையும் நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதறச் செய்யும் பருவநிலை மாற்றம்...

உலகைக் காக்கவேண்டியது தான் தங்களை பெரியண்ணன்களாக நினைத்துக்கொள்ளும் பணக்கார நாடுகளின் பணியே தவிர, யாருக்கோ ஏதோ பிரச்சினை என நினைத்து ஒதுங்குவதும் பாராமுகம் காட்டுவதும் அல்ல; இயற்கைக்கு இந்த நாடு வித்தியாசங்கள் தெரியாது!

தொழிற்புரட்சிக்கு முன்பு வரைக்கும் இயற்கையால் மட்டுமே அலங்கரிக்கப்பட்ட உலகமிது. அதன் பின்பு இந்தப் பூமியில் நடந்த மாற்றங்கள் உலகத்தின் 2.0 வெர்ஷன் எனலாம். அறிவியல், புதிய கோட்பாடுகள், அரசியல் வரைமுறைகள் அனைத்தும் இந்தக் காலத்திலிருந்து நவீனமடைகின்றன. நிறைய மாற்றங்கள் காண்கின்றன. அதுவரைக்கும் இயற்கையையும் அதன் வளத்தையும் மட்டுமே சார்ந்திருந்த நாடுகள்தாம் பணக்கார நாடுகள். ஆனால், இந்தக் கருத்தோட்டத்தை முற்றிலுமாக மாற்றியது தொழிற்புரட்சி. ஒருவகையில் இது வளர்ச்சிதான் என்றாலும், அதன் பாதிப்புகளின் அளவும் மிகப்பெரிதாக மாறியது. விளைவு, அதுவரைக்கும் சீராக இயங்கிக் கொண்டிருந்த இயற்கை, அதன் சமச்சீரற்ற தன்மையை நோக்கி நகரத்தொடங்கியது. அதன்விளைவுதான் இன்றைய உலகம் எதிர்கொண்டு நிற்கும் பருவநிலை மாற்றம்.



### சர்வம் வெப்பமயம்

பூமியின் பரப்பில் வெப்பநிலை குறிப்பிட்ட சராசரி அளவுக்கு மேல் உயர்ந்தால் உலக வெப்பமயமாதல் ஏற்படும். தொழிற்புரட்சிக்கு முன்பு வரைக்கும் சூரிய ஒளி அதிகரித்தல் அல்லது குறைதல், பூமி தனது நீள் வட்டப்பாதையிலிருந்து நுண்ணிய அளவில் விலகுதல், திடீர் பேரிடர்கள் போன்ற காரணங்களால் மட்டுமே பருவநிலை மாற்றம் ஏற்பட்டு வந்தது. ஆனால், அதன் பின்பு இந்தக் காரணிகள் மொத்தமும் மாறிவிட்டன. அதிகரிக்கும் பசுமைக்குடில் வாயுக்களின் (காபரீரொட்சைட், குளோரோ புளோரோ கார்பன் போன்றவை) வெளியேற்றம், பெற்றோல்,டீசல் போன்ற எரிபொருள்களின் அதீதப் பயன்பாடு, அதிகரித்து வரும் மக்கள் தொகை, முக்கியமாக அழிக்கப்படும் இயற்கை வளங்கள் போன்ற மனிதனின் தொடர் செயல்களால் உலகப் பரப்பின் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே சென்றது. செல்கிறது. கடந்த நூற்றாண்டில் 0.6 இலிருந்து 0.9 டிகிரி செல்சியஸாக இருந்த பூமிப்பரப்பின் வெப்பநிலை இந்த நூற்றாண்டில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

### பாரிஸ் அழைக்கிறது!

தொழில் புரட்சியைத் தொடர்ந்து காலனியாதிக்கம், உலகப்போர்கள், புரட்சிப் போராட்டங்கள் என்று ஒவ்வொரு நாடும் பிஸியாக இருந்ததால் சுற்றுச்சூழலை பற்றி தாமதமாகவே உணர்ந்தனர். அதன் பின்னர்தான் ஐ.நாவில் சுற்றுச்சூழலை காப்பதற்காகத் தனி அமைப்பு நிறுவப்பட்டது. மேலும் 1992 ஆம் ஆண்டு தொடங்கிய United Nations Framework Convention on Climate Change (UNFCCC) என்ற அமைப்பு உலகளவில் கவனம் பெற்றது. அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில், பல நிகழ்வுகள் சுற்றுச்சூழல் சார்ந்து நிகழ்ந்து வந்தாலும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற "பாரிஸ் பருவ நிலை மாற்ற ஒப்பந்தம்" தீர்க்கமான முடிவுகளை வலியுறுத்தித் தீர்வை பெற்றது. இதன்படி, தொழில் புரட்சி காலத்தில் இருந்ததிலிருந்து 2°C அளவுக்குப் பூமியின் வெப்பத்தைக் குறைக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாடும் பசுமைக் குடில் வாயு வெளியேற்றத்தை 2020 ஆம் ஆண்டுக்குள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இதனால் ஏற்படும் இழப்புகளைச் சரிசெய்ய வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் உதவ வேண்டும் என்றும் கூறப்பட்டது. பெற்றோல் பயன்பாட்டை விரைவில் குறைத்துக்கொண்டு பசுமை எரிவாயுக்களை பயன்படுத்தப்போவதாக ஐரோப்பிய நாடுகளும் நம்பிக்கையளித்தன.

### அமெரிக்கா - பொறுப்பு துறப்பு!

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தொழிற்புரட்சியிலிருந்து வெளியேற்றிய பசுமை குடில் வாயுக்களுக்கு வரலாற்று ரீதியில் பொறுப்பேற்க வேண்டும் (Historical Responsibility) என்று "கியோட்டோ பருவநிலை மாற்ற ஒப்பந்தம்" (1997) குறிப்பிட்டது. பாரிஸ் ஒப்பந்தத்திலும் தன் தொடர் அலட்சியங்களுக்குப் பிறகே ஒரு வழியாக இணைந்தது அமெரிக்கா. ஒப்பந்தத்துக்கான முன்னெடுப்புகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று அப்போதைய பிரதமர் ஒபாமா உறுதியளித்தார். ஆனால், கடந்த ஆண்டு ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான "புதிய அமெரிக்கா" ஒப்பந்தத்திலிருந்து விலகியது. அமெரிக்காவின் திறன்களும் வேலைவாய்ப்பும் குறையும், பொருளாதார பாதிப்புகள் ஏற்படும். மேலும் வளர்ந்த நாடுகளைக் குற்றம்சாட்டி, இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கே ஒப்பந்தம் சாதகமாக உள்ளது என்று விலகலுக்கான காரணத்தைக் கூறினார் ட்ரம்ப். "அமெரிக்காவுக்கே பொறுப்பில்லை, நாங்க மட்டும் பண்ணணுமா" என்று இதையடுத்து பல நாடுகள் ஒப்பந்தத்தை அலட்சியப் படுத்தின. இது நாடுகளின் தன்னார்வ அற்பத்தனத்தையே வெளிப்படுத்துகிறது என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பல பேச்சுவார்த்தைகளை புறக்கணித்து, தொடர்ந்து ஒப்பந்தத்தை எதிர்த்து வந்தது அமெரிக்கா.

நிலைமை இப்படியிருக்கையில் சில நாடுகள் மட்டும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இந் நிலையில், 2020 இற்குள் அனைத்து நாடுகளையும் பாரிஸ் உடன்படிக்கைக்காக ஒருங்கிணைத்துச் செயற்படுத்த அண்மையில் "COP24 - Katowice" சந்திப்பு போலந்தில் நடைபெற்றது. மொத்தம் 196 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு பாரிஸ் உடன்படிக்கைக்காக வழிமுறைகளையும், அதில் இருக்கும் சிக்கல்கள் குறித்தும் விவாதித்தனர். தொழில்நுட்ப ரீதியாக எப்படிப் பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவது என இதில் பேசப்பட்டது. இறுதியில் அனைத்து நாடுகளும் பாரிஸ் உடன்படிக்கைக்கான ஒருங்கிணைந்த செயற்றிட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன. "இது மிகப்பெரிய பொறுப்பு" என்கிறார் கூட்டத்தை முன்னின்று நடத்திய மைக்கேல் குர்ட்டைக்கா.

இந்த வார்த்ஜைதகள் நம்பிக்கையளிப்பதாக இருந்தாலும், உலகின் பணக்கார நாடுகளின் செயற்பாடுகள் இதில் திருப்தியளிக்கும்படி இல்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள். அந்த வகையில் இந்தச் சந்திப்பு கிட்டத்தட்டத் தோல்வியடைந்து விட்டது என்பது அவர்கள் வாதம். ஒருவேளை காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் அதிகமாகி புயல், வறட்சி மற்றும் கடல் மட்டம் உயருதல் போன்ற பேரிடர்கள் தொடர்ந்து ஏற்பட்டால், சில ஆண்டுகளில் மனித குலம் மிகப்பெரிய விளைவைச் சந்திக்க வேண்டும். இதிலிருந்து உலகைக் காக்க வேண்டியது தான் தங்களை பெரியண்ணன்களாக நினைத்துக்கொள்ளும் பணக்கார நாடுகளின் பணியே தவிர, யாருக்கோ ஏதோ பிரச்சினை என நினைத்து ஒதுங்குவதும், பாராமுகம் காட்டுவதும் அல்ல; இயற்கைக்கு, இந்த நாடு வித்தியாசங்கள் தெரியாது!

---

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வல்லவன் ஒருவன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : வேதா
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசிலா




இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது
இந்த பார்வைக்குத் தானா பெண்ணானது
நான் கேட்டதை தருவாய் இன்றாவது

இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால் என்னாவது
இந்த கேள்விக்குத் தானா பெண்ணானது
நெஞ்சக் கோட்டையை திறப்பாய் இன்றாவது
இன்னும் பார்த்து
மாலைக்கு மாலை காதலர் பேசும்
வார்த்தைகள் பேசிட வேண்டும்
பேசிடும் போதே கைகளினாலே
வேடிக்கை செய்யவும் வேண்டும்
அதில் ஆடி வரும் இன்பம் ஓடி வரும்

இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது
இந்த பார்வைக்குத் தானா பெண்ணானது
நான் கேட்டதை தருவாய் இன்றாவது
இன்னும் பார்த்துக்கொண்டிருந்தால் என்னாவது

காட்டுப் புறாக்கள் கூட்டுக்குள் பாடும்
பாட்டுக்கு யார் துணை வேண்டும்
தோட்டத்து பூவை மார்புக்கு மேலே
சூடிட யார் சொல்ல வேண்டும்
இங்கு யாருமில்லை இனி நேரமில்லை
இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால் என்னாவது
இந்த கேள்விக்குத் தானா பெண்ணானது
நெஞ்சக் கோட்டையை திறப்பாய் இன்றாவது
இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால் என்னாவது

செண்பகப் பூவில் வண்டு விழுந்து
தேன் குடித்தாடுதல் போலே
சேர்ப்பதை சேர்த்துபார்ப்பதை பார்த்து
வாழ்ந்திட துடிப்பதனாலே
இனி பிரிவதில்லை உன்னை விடுவதில்லை

இன்னும் பார்த்துக்கொண்டிருந்தால் என்னாவது
இந்த பார்வைக்குத் தானா் பெண்ணானது
நான் கேட்டதை தருவாய் இன்றாவது

இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால் என்னாவது
இந்த கேள்விக்குத் தானா பெண்ணானது
நெஞ்சக் கோட்டையை திறப்பாய் இன்றாவது


இன்னும் பார்த்து கொண்டிருந்தால் என்னாவது
இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால் என்னாவது

# கனா

## திரைவிமர்சனம்

தமிழ் சினிமாவிற்கும் ஸ்போர்ட்ஸ் படத்திற்கும் ஒரு ராசி உண்டு. பல ஸ்போர்ட்ஸ் படங்கள் இங்கு ஹிட் அடித்துள்ளது. ஆனால், அது அனைத்துமே ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படமாக தான் இருக்கும். இந்த முறை பெண்களுக்கு அதுவும் பெண்கள் கிரிக்கெட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் படம் கனா. ரசிகர்களின் எதிர்பார்ப்பு கனாவை நிறைவேற்றியதா இந்த கனா? பார்ப்போம்.

ஸ்போர்ட்ஸ் கதை என்றாலே டெம்ப்ளேட்டாக ஒரு சில ஒன் லைன் இருக்கும். அதே போல் தான், தமிழகத்தில் குக்கிராமத்தில் இருக்கும் ஒரு பெண் எப்படி இன்டர்நஷனல் பெண்கள் கிரிக்கெட் அணியில் இடம் பிடிக்கின்றார் என்பதே இந்த கனா.






வெறும் விளையாட்டு என்று மட்டுமல்லாமல் அதில் ஒரு விவசாயி தன் மகளை எப்படி பல எதிர்ப்புகளை மீறி இந்தியாவே போற்றும் ஒரு வீரஙங்கனையாக மாற்றுகின்றார் என்பதை மிக உணர்ச்சிபூர்வமாக கூறியுள்ளது கனா.

கனா சிவகார்த்திகேயன் முதன் முதலாக தயாரிக்கும் படம். அதுவும் தன் நண்பர் அருண்ராஜ் காமராஜிற்காக தயாரித்துள்ள படம். ஏதோ நண்பர் என்பதற்காக அவர் வாய்ப்பு கொடுத்தது போல் தெரியவில்லை, கண்டிப்பாக அருண்ராஜிடம் அதற்கு அனைத்து தகுதியும் உள்ளது. இந்த சிறு பட்ஜெட் படத்தையே எல்லோரும் கனெக்ட் செய்வது போல் எடுத்துள்ளார்.


ஐஸ்வர்யா ராஜேஷ் கண்டிப்பாக இன்னும் சில வருடங்களில் அவருக்கு தேசிய விருது கிடைத்தாலும் ஆச்சரியமில்லை. படத்திற்கு படம் தன்னை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்கின்றார் என்றே சொல்லலாம்.



அதிலும் இதில் கௌசல்யாவாகவே வாழ்ந்துள்ளார், அதற்காக அவர் எடுத்த பயிற்சி, மேலும் அவர் மேற்கொள்ளும் பவுலிங் ஸ்டைல் ரசிக்க வைக்கின்றது. பல பெண்களுக்கு இந்த கௌசல்யா ரோல் மொடலாக தான் இருப்பார்.

விளையாட்டு என்று மட்டும் இல்லாமல் அதில் விவசாயத்தை கொண்டு வந்த விதம், இந்த கதாபாத்திரத்தில் சத்யராஜ் போல் சீனியர் நடிகரை நடிக்க வைத்து, அவர் சொல்வது மூலம் பலருக்கும் அவருடைய வலிகள் சென்றடையும்.

ஆனால், விவசா யம் குறித்து பல படங்களில் பேச, கொஞ்சம் அதிகமாவே செயற்கைத்தனம் வெளிப்படுவதையும் தவிர்க்க முடியவில்லை.



படத்தின் கிளைமாக்ஸ் படக் குழு அனைவருக்கும் எழுந்து நின்று பாராட்டலாம், நிஜ மேட்ச் பார்ப்பது போன்ற உணர்வு, அட சிவகார்த்திகேயன் இத்தனை மெச்சூரான ரோலா, என்று அவரும் கேமியோவில் சபாஷ் அள்ளுகிறார்.

படத்தின் ஒளிப்பதிவு, இசை என அனைத்தும் ரசிக்கும் ரகம், குறிப்பாக புரொடக்ஷன் கம்பனிக்கு பாராட்டுக்கள். பெரிய பட்ஜெட் கதையை இந்த சிறுபட் ஜெட்டில் அழகாக எடுத்த விதம் சுப்பர்.

படத்தின் கதைக்களம், பலருக்கும் இந்த படம் குறிப்பாக பெண்களுக்கு ஊக்குவிப்பாக இருக்கும்.

ஐஸ்வர்யா ராஜேஷ், சத்யராஜ் ஆகியோரின் நடிப்பு, அதிலும் ஐஸ்வர்யா ராஜேஷ் எல்லாம் கடும் உழைப்பு தெரிகின்றது.

படத்தின் கிளைமக்ஸ் காட்சி. ஒரு சில வசனங்கள் குறிப்பாக விவசாயத்திற்காக பேசுவது, வலித்து திணித்தது போலவே உள்ளது.

மொத்தத்தில் வாழ்க்கையில் வெற்றிகாக ஓடும் அனைவருக்கும் மேலும் உற்சாகத்தை கொடுக்கும் இந்த கனா.



## மரண அறிவித்தல்

### அமரர் சிவபாக்கியம் ஜீவா (வில்வம்)

மண்ணில் 28 ❁ 11 ❁ 1968



விண்ணில் 12 ❁ 12 ❁ 2018

அல்வாய் மாவடிச் சோலையைப் பிறப்பிடமாகவும், லண்டன் மாநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிவபாக்கியம் ஜீவா அவர்கள் 12.12.2018 புதன்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் (வேங்கை) மற்றும் செல்வாம்பிகை தம்பதிகளின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற Rajinder Gill, Vidya Gill தம்பதிகளின் அன்புமருமகனும், ரேக்காவின். (லண்டன்), பாசமிகு கணவரும், அஸ்வின், அனிஷ், அவிஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாலாம்பிகா அஸ்வினின் அன்பு மாமனாரும் ஜீவகன் (வேந்தன்), சிவகுமார், அனுஷா, சிவகரன் (லண்டன்), பாலதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி சுபரஞ்சனி ஜீவகன், திருமதி அருந்தவச்செல்வி சிவகுமார், திரு அகீஸ்பரன் (லண்டன்), திருமதி ரசினா சிவகரன் (லண்டன்), திருமதி நிறோஜினி பாலதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபிகாவின் அன்பு மாமனாரும், அக்ஷித், பார்கவி ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2018) திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 1.00 மணியளவில் லண்டனில் நடைபெறும். அதே நேரம் அன்னாரின் இல்லத்திலும் அஞ்சலி இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவகாம்பிகை"
மாவடிச்சோலை,
அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்
தொலைபேசி இலக்கம் : 075 038 7235.
076 903 6615. 077 116 9375

# அடுத்த உலகப்போர் தண்ணீருக்கானது அமெரிக்கா முதலில் மோதப் போவது யாருடன்


வறண்டு கொண்டிருக்கும் கொலராடோ ஆறு


நீர்மட்டம் குறைந்துபோன போவெல் ஏரி

20ஆம் நூற்றாண்டில் நடந்த போர்களில் பெரும்பாலானவற்றுக்குக் காரணம் எண்ணெய் வளம். அதன் விளைவு எண்ணெய் வளம் கொட்டிக்கிடந்த நாடுகளின் தலைவர்கள் அமெரிக்கா விளையாடிய அரசியல் சதுரங்கத்தில் சிக்கிக் கொண்டார்கள். எண்ணெய் அரசியல், உலகின் மூன்றாம் நாடுகள் பலவற்றைத் தின்று கொழுக்க வளர்ந்த நாடுகளுக்கு வாய்ப்பளித்தது. அதைத் தற்போது தண்ணீர் செய்து கொண்டிருக்கிறது. நன்னீர் தட்டுப்பாடு உலகம் முழுவதும் அதிகரித்துக்கொண்டிரு க்கிறது. சில நாட்களில் தென் ஆபிரிக்காவின் கேப்டவுன் தனது நன்னீர் இருப்பு மொத்தத்தையும் இழக்கும் நிலையில் நின்று கொண்டிருக்கிறது. அந்த வரிசையில் அமெ ரிக்காவின் தென்மேற்கு மாகாணங்களும்சேரப்போகின்றன.

வட அமெரிக்க கண்டத்தின் பெரிய நதிகளில் ஒன்று கொலராடோ (Colorado River) ஆறு. 2333 கிலோமீட்டர் தொலைவு நீளும் இந்த நதி "அமெரிக்காவின் நைல்" என்றே வர்ணிக்கப்படுகிறது. அரிசோனா, வையோமிங், கொலராடோ, யூட்டாஹ், புது மெக்ஸிக்கோ, கலிபோர்னியா, நிவேடா ஆகிய அமெரிக்க மாகாணங்களுக்கும், வடகிழக்கு மெக்ஸிக்கோவுக்கும் நன்னீருக்கான மூலாதாரமாக இருக்கிறது. வடகிழக்கில் ராக்கி மலைத்தொடர்களில் (Rocky Mountains) இருக்கும் லா பொட்ரே பாஸ் ஏரியில் (La Poudre Pass Lake) தொடங்கி கான்பி (Ganby Lake) ஏரி வழியாக இயற்கையாகக் கீழ்நிலை நீரோட்டப் போக்கில் போவெல் (Lake Powell) ஏரியை வந்தடையும். அந்தப் பாதையில் பல்வேறு குழாய்கள் மூலம் குடியிருப்புகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் நீர் உறிஞ்சப்படுவதால் போவெல் ஏரிக்கு முன்னதாக இருக்கும் க்ளென்வுட் ஸ்பிரிங் (Glenwood Spring) என்ற பகுதியை அடையும்போதே அதன் வேகம் குறைந்துவிடுகிறது. அதைத் தொடர்ந்து சுமார் 300 மைல் நீளமுள்ள போவெல் ஏரியைக் கடக்கும்போதே அதன் வேகம் மேலும் குறைந்துவிடுவதால் அதைத் தாண்டி இருக்கும் அரிசோனா, கலிபோர்னியா போன்ற பகுதிகளுக்கு மிக முக்கியமான ஏரியான மீட் (Lake Mead) ஏரிக்குக் குறைவான நீரே பாய்கிறது. இதனால் அங்கிருக்கும் விவசாய நிலங்களும் குடியிருப்புகளும் குறைந்த அளவிலான நீரையே பெற்றுக்கொண்டிருந்தன. மீட் ஏரியில் கலக்கும் கொலராடோ ஆற்றின் ஒரு கிளை நதியான கிலா (Gila River) ஆற்றில் அங்கு வ்சிக்கும் பழங்குடி மக்கள் தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் அந்த ஆற்றிலிருந்து வருடத்துக்கு 5000 கோடி லீற்றர் அளவுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கடந்த வருடம் மார்ச் மாதம் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. அதன்மூலம் 180,000 குடும்பங்களுக்கு ஒரு வருடத்துக்குத் தண்ணீரை விநியோகிக்க முடியும்.

அதிகரித்துவரும் மக்கள்தொகையும், அவர்களின் அதீதப் பயன்பாடும் கொலராடோ ஆற்றின் நீர் இருப்பைக் குறைத்துக்கொண்டே வருகிறது. அத்தோடு காலநிலை மாற்றங்களும் அவற்றுக்கான பங்கைச் செவ்வனே செய்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக அமெரிக்காவில் புவி வெப்பம் 2.5 டிகிரியாகத் தற்போது இருக்கிறது. கொலராடோ ஆறு உருவாகும் இடமான ராக்கி மலைத்தொடரில் பனிக்காலங்களில் உருவாகும் பனிக்கட்டிகள் உருகி நீரோட்டத்தில் கலப்பதே ஆற்றின் நீராதாரத்தில் பெரும்பங்கு வகிக்கிறது. தென்மேற்கு மாகாண மக்கள் தங்கள் குழாய்களைத் திறந்தால் வரும் தண்ணீரில் 5இல் நான்கு குவளைகள் பனிக்கட்டிகளால் கிடைத்ததாகவே இருக்குமளவுக்கு அவற்றின் பங்கு முக்கியமானது. ஆனால், கடந்த சில வருடங்களாக புவிவெப்பமயமாதலால் குறைவான அளவே பனி உருவாகிறது. அது ஆற்றின் நீராதாரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறது. நிலைமை இப்போதே இப்படியிருக்க 2050இல் புவியின் வெப்பம் 5 டிகிரி வரை உயரக்கூடுமென்று விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.



சுமார் 4 கோடி மக்களின் வாழ்வாதாரம் கொலராடோ ஆற்றைச் சார்ந்திருக்கிறது. ராக்கி மலைத்தொடரில் தொடங்கி மெக்சிகோ வரையிலும் பயணித்து அங்கே கார்டெஸ் கடலில் அதாவது கலிபோர்னிய வளைகுடாவில் கலக்கும் இந்த ஆற்றின் தற்போதைய நீர்மட்டம் சாதாரண மட்டத்துக்கும் குறைவாகச் சென்றுவிட்டது. கடந்த 17 வருடங்களாகவே அமெரிக்காவின் தென்மேற்கு மாகாணங்கள் போதுமான நீரில்லாமல் அதிகமான பஞ்சத்தைச் சந்தித்து வருகிறது. மொத்தம் 14 அணைகள், 9 நீர்த்தேக்கங்கள் மூலம் கொலராடோ ஆற்றின் நன்னீர் பாதுகாக்கப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளாக அளந்துதான் நீர் விநியோகம் செய்துகொண்டிருக்கின்றார்கள். இருப்பினும் நீரின் அளவு குறைந்து வருகிறது. தற்போது வருடத்துக்குக் குறைந்தது 12அடி அளவுக்குக் குறைந்து கொண்டிருக்கும் கொலராடோ ஆற்றின் நீர்மட்டம் அடுத்த 8 ஆண்டுகளில் 1000 அடி குறைந்தாலும் ஆச்சர்யமில்லை என்கிறது ஒரு ஆய்வுக் குழு. நீர்மட்டம் இன்னும் 40 அடி குறைந்தால் நகரங்களுக்கு நீர் விநியோகிக்கும் குழாய்களுக்கும் கீழே சென்றுவிடும் நிலைதான் இப்போதே. நீர்மட்டத்தை அதிகரிப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க முடியாமல் அரசாங்கம் திணறிக்கொண்டிருந்தது.

1930-களில் ஒருமுறை இதேபோன்ற நன்னீர்ப் பிரச்னை ஏற்பட்டபோது அமெரிக்க அரசாங்கத்தின் பொறியாளர் பட்டாளமொன்று 1950களில் ஒரு திட்டத்தைப் பரிந்துரைத்தது. அத்திட்டத்தின்படி சுப்பீரியர் (Lake Superior), ஒன்டாரியோ (Ontario), மிச்சிகன் (Michigan), ஹூரான் (Huron), எர்ரீ (Erie) ஆகிய ஐந்து ஏரிகளின் தொகுப்பான கிரேட் ஏரிகள் (The Great Lakes) என்றழைக்கப்படும் நீர்நிலைகளில் குழாய்கள் வழியாகத் தென்மேற்குப் பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்யலாம் என்பதுதான். கிரேட் ஏரிகள் அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் அமெரிக்கா கனடா எல்லையில் அமைந்திருக்கிறது. அந்த ஏரிகளின் தண்ணீரைச் சமமாகப் பிரித்துக்கொள்ள இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தமும் உள்ளது. அதனால் அந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் கேட்டு கனடாவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோது அப்போதைய அரசாங்கம் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இத்திட்டத்தை வகுத்த பொறியாளர் குழுவைப் பொறுத்தவரையிலும் பல இலட்சம் லீற்றர் வீணாகக் கடலில் தானே கலக்கிறது அதைப் பயன்படுத்திக் கொண்டால் எந்தத் தவறுமில்லை.

இது நடந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட நிலையில் வடகிழக்குப் பகுதியிலிருக்கும் கிரேட் ஏரிகளிலிருந்து மிஸ்ஸிஸிப்பி மற்றும் மிசோரி ஆறுகள் வழியாகக் குழாய்கள் அமைத்துக் கொலராடோ ஆற்றுக்கு நீரை எடுத்துக்கொள்ள அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்காக 86 தண்ணீர்க் குழாய்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். ஆனால், அதற்குத் தற்போதும் கனடா அரசாங்கம் மறுப்புதான் தெரிவித்துள்ளது. இதன் விளைவாகவே அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையிலான வணிக ஒப்பந்தத்தை உடைத்த ஜனாதிபதி டிரம்ப் கனடாவுக்கு இறக்குமதி வரிவிதித்துள்ளார். அமெரிக்கா, மெக்சிகோ, கனடா ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையில் வட அமெரிக்க இலவச வணிக ஒப்பந்தம் (North American Free Trade Agreement) 1994ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்காவும் கனடாவும் தங்களுக்குள் நிகழும் வணிகப் பரிவர்த்தனைகளுக்கு வரி விதித்துக் கொள்ளக்கூடாது. அந்த ஒப்பந்தத்தை டிரம்ப் உடைத்தது பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளானது. கனடா அரசாங்கம் இதை வலிமையாகக் கண்டித்தது. அதற்கு எதிர்வினையாற்றும் வகையில் கனடாவும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் பொடள்களுக்கு அதிக வரியினை வசூலித்தது. வரிகட்டாமல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைத் திருப்பியும் அனுப்பியது.

தனது கோரிக்கைகளுக்குச் (கட்டளைகளுக்கு) சம்மதிக்கவில்லையெனில் அந்த நாட்டோடு வணிக ரீதியாக மோதுவது அமெரிக்காவின் பழக்கம். தன்னோடு நீண்டகால உறவுகொண்டிருக்கும் கனடாவிடமே அந்த முறையைக் கையாள்வதற்கு முக்கியக் காரணம் தண்ணீர். அதன் நன்னீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கிரேட் ஏரிகள் மிகவும் பயனுள்ளதாகவே இருக்கும். 3770 கி.மீ நீளம் கொண்ட சுப்பீரியர் ஏரியிலிருந்து நீர் எடுப்பதன் மூலம் தனது மாகாணங்களுக்கு மட்டுமின்றி மெக்சிகோவிற்கும் விநியோகம் செய்யலாம். உலகின் மொத்த நன்னீரில் 20மூ தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த ஏரிகளில் அது சாத்தியமே. ஆயினும் இவர்களை எடுக்கவிட்டால் நமக்கும் இல்லாமல் எடுத்துவிடுவார்கள், பின்னர் வருங்காலத்தில் நாமும் அதே நிலைக்குத் தள்ளப்பட்டுவிடலாம் என்று எண்ணிய கனடா இந்தப் பிரச்சினையை நிலுவையில் போட்டுள்ளது. 900 வருடங்களில்இதுவரை காணாத பஞ்சத்தையும்நீர்தட்டுப்பாட்டையும் சந்தித்துக்கொண்டிருக்கும் தென்மேற்கு அமெரிக்கா அதுவரை தாக்குப் பிடிக்கும் நிலையில் இல்லை. 6 கோடி ஏக்கர் விளைநிலங்களைக் கொண்டுள்ள தென்மேற்குப் பகுதியில் நீர் தட்டுப்பாடு காரணமாக அமெரிக்காவின் விவசாய உற்பத்தியும் தற்போது பெரிதளவில் பாதிக்கப்படுகிறது. அத்தோடு அங்கு வாழும் 22 பூர்வகுடிகளும் எப்போது வேண்டுமானாலும் நீருக்கான தங்கள் உரிமைகளைக் கோரிப் போராடலாம். அதற்கு வழியேற்படுத்தும் வகையில் தான் அமெரிக்காவின் மாகாண நிர்வாகங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. நகரங்களுக்கும் குடியிருப்புகளுக்கும் விநியோகிக்கும் அளவுக்கு அவர்களுக்கான நீரைத் தருவதில்லை.

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலம் இதற்குத் தீர்வுகாண அமெரிக்க அரசாங்கத்தால் முடியும். ஆனால், அதற்கான தொழில்நுட்பங்களை நிறுவ சில ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரைகூட ஆகலாம். அதற்குள் தென்மேற்கு மாகாணம் முற்றிலுமாக வறண்டுவிடும். வேண்டுமானால், நீரை மிகவும் சிக்கனமாகச் சேமித்துச் செலவு செய்யலாம். கடந்த பத்தாண்டுகளாக எவ்வளவு தான் நீரைத் தேக்கிப் பார்த்துப் பார்த்து செலவு செய்தாலும் குறைந்துகொண் டேயிருக்கிறது கொலராடோ ஆற்றின் நீர்மட்டம். இந்நிலை அதையே நம்பியிருக்கும் அமெரிக்க மாகாணங்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. ஆகவே, தற்போது இருக்கும் ஒரே தீர்வு தி கிரேட் ஏரிகளில் குழாய் வழியாக நீர் எடுப்பதுதான். அதற்காக எந்த எல்லைக்கும் அமெரிக்கா செல்லலாம். சமீபத்தில் மத்திய சபைகளிலும், அமெரிக்க காங்கிரஸிலும் தென்மேற்கு மாகாணங்களின் செல்வாக்கு அதிகமாகி வருவதுகூட இதற்கான ஏற்பாடாகவே அந்நாட்டு அரசியல் வட்டாரங்களால் பார்க்கப்படுகிறது. இதன் மூலம், தி கிரேட் ஏரி குழாய் வழி நீர் விநியோகத் திட்டத்துக்குத் தேவையான ஆதரவுகளைப் பெற முயலுகிறார்கள்.

இது தொடக்கமே. எண்ணெய் வளத்தின் முக்கியத்துவத்தை ஆரம்பத்திலேயே புரிந்து கொண்ட அமெரிக்கா அதில் ஆதிக்கம் செலுத்த எத்தனை முயற்சிகளைச் செய்ததோ. அத்தனை முயற்சிகளையும் தண்ணீர் வளத்துக்காகவும் செய்யும். தண்ணீருக்கான போர் வேறுவிதமானது. அது ஆயுத பலத்தால் நடைபெறாது. வணிக பலத்தால் நடைபெறும்.

# facebook

# அதிபுத்திசாலிகள்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள்தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.

ஒருநாள் அவர்கள் மரத்தால் ஒரு பெரிய வீடு கட்டத் தீர்மானித்தனர். அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர். அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன் சொன்னான்.

நான் குதிரை வ்ண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்! என்றான். எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான். ஆனால், வழியில் அவன் குதிரைவண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது. அவன் கையிலிருந்த கோடரி தூரத்தில் சென்று விழுந்தது. அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர். அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன் தான் என்பதால், அவன் கோடரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர். அதனால், எல்லோரும் மரம் வெட்டுவதற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடரியை அப்படியே போட்டுவிட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், யார் கையிலும் கோடரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான். நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம். இப்போது இருப்பதில் நான்தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும். அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" என்றான்.

அது மிகவும் நல்ல கருத்துதான் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான்.



அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான். இப்படியே எல்லோரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை, எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக்கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான்.

நண்பர்களே, கிளை இப்போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்! என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லோரும் கீழே விழுந்தனர். ஆனால், அந்த மரக்கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லோரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

நண்பர்களே, நாம் இந்த மரத்தின் கீழே தீ மூட்டுவோம். அந்த வெப்பத்தில் கிளை ஒடிந்து கீழே விழுந்துவிடும்! என்றான்.

எல்லோரும் அது ஒரு சிறந்த கருத்துத்தான் என்று ஏற்றுக் கொண்டனர். அந்த அறிவாளி அவனிடம் இருந்த ஒரே ஒரு தீப்பெட்டியை வெளியே எடுத்தான். ஆனால், அவனுக்கு ஒரு சந்தேகம். தீக்குச்சி எரியவில்லை என்றால் என்ன செய்வது? அவன் ஒரு தீக்குச்சியை உரசி பற்ற வைத்துப் பார்த்தான். அது எரிந்தது. ஆயினும் அடுத்த குச்சி எரியவில்லையென்றால் என்ன செய்வது? அவனுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது. அடுத்த தீக்குச்சியையும் அவன் பற்ற வைத்துப் பார்த் தான். அப்படி தீப்பெட்டியில் இருந்த எல்லா தீக்குச்சியும் தீரும்வரை அவன் உரசி உரசிப் பார்த்தான். கடைசியில் அவன் திருப்தியுடன் சொன்னான்.

தீக்குச்சிகளெல்லாம் தீர்ந்து விட்டன. ஆயினும் என்ன? எல்லா தீக்குச்சிகளும் நன்றாக எரியக்கூடியவைதான் என்று நமக்குத் தெளிவானது அல்லவா? என்றான்.

முன்பு மரத்திலிருந்து விழுந்த அறிவாளி, மற்றொரு கருத்தைச் சொன்னான்.

நண்பர்களே, நான் முன்பு மரத்திலிருந்து கீழே விழுந்தபோது என் தலை கிளையில் மோதியது. அப்போது நான் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தேன். அது போன்ற தீப்பொறிகளை வைத்து நாம் இந்த மரத்தை எரிய வைக்கலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என் தலையில் மாறி மாறி அடிக்க வேண்டும். அப்போது நான் பார்க்கும் தீப்பொறிகளை நீங்கள் உடனே பிடித்துச் சேகரிக்க வேண்டும்! என்றான்.

நண்பர்கள்அதைஏற்றுக்கொண்டனர். பிறகு அந்த அறிவாளியை மாறி, மாறி அடித்தனர். அடி வாங்கும்போது அவன் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தான். ஆனால், அதையெல்லாம் பிடித்து நண்பர்களிடம் கொடுப்பதற்கு அவனால் முடியவில்லை. அவர்கள் மீண்டும் கூடி அமர்ந்து சிந்தித்தனர். அவர்களில் ஒருவன் அப்போது நல்லபடியாகச் சிந்தித்தான். அவன் சொன்னான்.

நண்பர்களே, நாம் திரும்பிச் சென்று, வழியில் போட்டுவிட்டு வந்த கோடரிகளை மீண்டும் எடுத்து வரலாம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை! என்றான்.

அவ்வாறு அவர்கள் சென்று தங்கள் கோடரிகளுடன் திரும்பி வந்தனர். தேவையான மரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு கிராமத்துக்குச் சென்றனர். தங்களது புத்திசாலித்தனத்தை நினைத்து தங்களை தாங்களே மிகவும் மெச்சிக் கொண்டனர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1595

### கிசோர்

உண்ண முடியாத கடவுளுக்கு உணவளிப்பதை விட உண்ணக்கூடிய வறியவர்களுக்கு உணவளியுங்கள் அது கடவுளுக்கு கொடுப்பதைவிட மேலானது



### அசோக் றமனா

விலங்குகளிடம் கூட அன்பாக பழகுங்கள் மனிதனிடம் பார்த்துப் பழகுங்கள் ஏனெனில் அவன் எப்போது வேண்டுமானாலும் மிருகமாகலாம்



### விதுர்சன்

உண்மையான அன்பை சுமக்கும் இதயம் அடிக்கடி ஏமாறலாம். ஆனால் யாரையும் ஏமாற்றாது



### தனுஷன்

பணம் என்ற ஒன்றை கண்டுபிடிக்காமல் போயிருந்தால்... பல பேரை நாம் கண்டுபிடிக்காமலே போயிருப்போம்



### பால்ராஜ்

உடைந்த கைகளைக்கொண்டு உழைக்கலாம்... உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது



### முத்துச்சாமி கஜரூபன்

மரணம் வரை கிடைக்காத ஒரே பதில் யாரை நம்புவது?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 162

## உயர்குருதி அமுக்கம் என்றால் என்ன?

**குருதி அமுக்கம் என்றால் என்ன?**

உங்கள் உடலில் குருதி குழாய்களில் குருதி சுற்றியோடும் போது ஏற்படும் அமுக்கமாகும்.

**சாதாரணமாக இது எவ்வளவு இருக்கும்?**

சுருங்கல் அமுக்கம் - 120 mmHg விரிதல் அமுக்கம் - 80mmHg இது இளம்பராயத்தவர்க்கு சற்று குறைவாகவும் முதியோருக்கு சற்று அதிகமாக காணப்படும்.

**உயர்குருதி அமுக்கம் என்றால் என்ன?**

குருதி அமுக்கம் மேற்குறிப்பிட்ட அளவை விட கூடுதலாக இருத்தல். பொதுவாக சுருங்கல் அமுக்கம்-140mmHg ஐ விட கூடுதலாகவும் விரிதல் அமுக்கம்-90mmHg ஐ விட கூடுதலாகவும் இருப்பின்

**யாருக்கு உயர்குருதி அமுக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்?**

- வயது அதிகரிக்கும் போது
- உடல்நிறை அதிகமானவர்கள்
- சிகரெட் பாவனையாளர்கள்
- நீரிழிவுநோய், சிறுநீரக நோய் போன்ற வருத்தம் உள்ளவர்கள்.
- குடும்ப அங்கத்தவரில் பலர் உயர்குருதி அமுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பின்

**குருதி அமுக்கம் கட்டுப்பாட்டில் இல்லாவிடில் என்ன பிரச்சினைகள் ஏற்படும்?**

- இருதயநோய்
- சிறுநீரக செயலிழப்பு
- பாரிசவாத நோய்
- குருதிக்குழாய்கள் பாதிப்படைதல்

**குருதி அமுக்க நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

- சரியான உணவுப்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
- உடல்நிறையை அளவாகப் பேண வேண்டும்.
- தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
- புகைப்பிடிப்பதை நிறுத்த வேண்டும்.
- வைத்தியர் தரும் மருந்து வில்லைகளை அவர் கூறிய அறிவுரைக்கேற்ப தவறாது உள்ளெடுக்க வேண்டும்.
- உங்கள் குருதியமுக்கத்தை சரியான கால இடைவெளியில் சோதித்துப் பார்க்க வேண்டும்.

**நான் எவ்வகையான உணவு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்?**

- உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- புகையூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- அதிக கொழுப்பு அடங்கிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- பழங்களையும் மரக்கறிகளையும் அதிகம் உள்ளெடுக்க வேண்டும்.
- மீன் உணவுகள் உடலுக்கு நன்று.

**நான் வீட்டில் எவ்வாறு குருதி அமுக்கத்தை சோதித்துப் பார்ப்பது?**

- குருதியமுக்கத்தை சோதிக்க முன் புகைப்பிடிக்க கூடாது.
- கோப்பி, தேநீர் போன்ற பானங்களை உள்ளெடுக்கக் கூடாது.
- 30 நிமிடங்களை கதிரையில் இளைப்பாறிய பின்னரே அளவிட தொடங்க வேண்டும்.
- சரியான அளவுள்ள "Cuff" ஐ பயன்படுத்த வேண்டும்.
- சோதிக்க முன் கதிரையில் சரியாக அமர வேண்டும். சோதிக்கும் கையை "Cuff" ஐ முழங்கைக்கு மேல் கட்ட வேண்டும்.
- கையை ஒரு மேசையில் தளர்வாக வைக்க வேண்டும். கை உங்கள் இதயத்தின் மட்டத்தில் இருக்க வேண்டும்.
- அளவிடும் போது கதைக்கக்கூடாது.
- அளக்கும் இயந்திரம் மூலம் குருதியமுக்கத்தை அளந்து சரியாக குறித்துக் கொள்ள வேண்டும்.

Dr. க. சுகந்தன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்குப் பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**




பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog The Future.Today. | Sri Lanka Telecom Mobitel

அ.கூ.சி.வி ரூ. 30,390/-

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இப்படத்தில் காண்பிக்கப்படும் பொருளின் விலை எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுபடக்கூடும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள பொருளின் படங்கள், அம்சங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகள் ஆகியன கட்புலனுறாடான தெளிவுப்பாட்டை வழங்கும் நோக்குடனே அமைந்துள்ளன. உண்மையான பொருள் இதிலிருந்து மாறுபடக்கூடும்.

011 SAMSUNG 7267864

SamsungLankaOfficial
SamsungLankaOfficial